உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞாநஸம்பந்த பரமாசார்யேப்யோ நம:

# சைவாகமப்பிராமாண்யம்

முதல் அத்தியாயம்.

இஃது

அடியாரடிவருடும்,

குளித்தலை - ஸ்ரீமான் - அ. அரங்கசாமி அய்யரால்

இயற்றப்பட்டது.

மறைமலையடிகள்
சென்னை-1

சென்னை - மவுண்ட்ரோட்,

வைஜயந்தி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஆநந்த ௵ கார்த்திகைமீ

*December, 1914.*

*Registered Copyright* ]

[விலை ரூபா 1.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானசம்பந்தபரமாசார்யேப்யோநம:

# சைவாகமப்பிராமாண்யம்.

## முகவுரை.

திருச்சிற்றம்பலம்.

என்பே யுருக நின்னரு ளளித்துன்
னிணைமல ரடிகாட்டி
முன்பே யென்னை யாண்டு கொண்ட
முனிவா முனிவா முழுமுதலே
யின்பே யருளி யெனை யுருக்கி
யுயிருண் கின்ற வெம்மானே
நண்பே யருளா யென்னுயிர்
நாதா நின்னரு ணாணாமே. (திருவாசகம்.)

திருச்சிற்றம்பலம்.

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனையுந் தண்ணருள் கொண்டாண்டு சைவசித்தாந்தப் பசுந்தேனுகரு மன்பாளிக்கூட்டங் களி லொருவனாக்கிய பெருங்கருணையை யுற்றுக் கசிந்தமனத்தனா யோரோரமையங்களி லென்னைமறந்து யானின்னருளை நினைந்து தான்றோர் மொழிகொடு துதிப்பதுண்டு. உலகமடங்கலு முறங்கி நிச்சப்தமா யிருக்கும் நள்ளிரவிலே மாசற்ற வாகாயந்தன்னில் விண்மீன்கள் நிறைந்து விளங்குந் தருவாயில் பெரும்பாலு மிவ்வெண்ணங்க ளென் மனப் புலங்களிற் பாய்வதுண்டு. அந்நேரங்களில் விண்ணை நோக்கிய கண்ணு மிறையை நோக்கிய கருத்துமாக மெல்லமெல்ல வுலாவியு முட்கார்ந்தும் பூரித்த வுள்ளக்களிப்பினா லென்னுவி சச்சிதானந்த சிவத்தில் லயிப்பதுண்டு. இவ்வுலக மனைத்தையும் முடிவில்

லாக்காலமாளவரினு மின்னோர்களி லோர்கணத்திற்குமது நிகராகா தென வென்மனங்களிக்கும். இன்புருவனேநோக்கி யிவ்வாறே யென்னுவி யென்றும் அருளில் னைந்துருகிநிற்கவென வேண்டுவேன். கிடைப்பதற்கரிதான விபவேபற்றைச் சென்ற 1911-ம் வருஷம் ஆவணிமாதத்தி லொருதிருநாளிலுங் கிடைக்கப்பெற்றேன். அன்றிரவு ஆகாயம் மாசுமறுவின்றி ஸ்வச்சமாயிருந்தது. சந்திரன்றனது வெள்ளிய தண்கிரணங்களினு லமுதமாரி பொருக்கி யுலகமுழுமையுஞ் “ஜில்” லென்று நனைத்துக்கொண்டிருந்தது. இன்பவெள்ளத்தாழ்த்திய வெண்கிரணப்பிரஸரங்களின் பொலிவைக் காண்டொறுங் காண்டொறு முயிர்களி னுள்ளும் புறம்பு மொழிவற நிறைந் தின்பத்தாழ்த்து முன்னவ னருளினி நினைவே நிகரென வென்மனங்கரைந்தது. அவ்வழகையு மதனுற்பெற வின்பத்தையு மொருவன் றனதுள்ளத்துணர்ச்சியிற் கொள்ளலாமேயன்றி வுரைத்தற்கெளிதல்ல. கண்ணிற்கெட்டியவனை யெப்புறஞ்சுற்றிப் பார்ப்பினு மொரேபொலிவுடனமர்ந்த விப்பகையமைப்பின் வனப்பைக் கண்களிமைப்பின்றித் தெவிட்டா துண்டன மனமெனுங் தடாகம் பூரணமாய் நிறம்பிக் கரைகடந்து ததும்பி வழிவதுபோலிருந்தது “வான்கருணை வள்ளால், நின்னருளொளியேயோ, அன்றி நின்கருணை யொழுக்கேயோவிது” வென வென்மனம் விம்மிவிம்மி யப்பனியொளிவழியே சென்றென்னைக் கனிவித்த கர்த்தனது கழலடிகண் டின்பவாரி மடுத்தது. இன்பவுணர்ச்சிமயமாய்த் திரிந்தவென்னுவி மெல்லமெல்ல வுண்ணப்படுவதை யான்சிறிதுணரவு மெம்மையாளவந்த வெம்பெருவாழ்வாம் வாதவூர் வள்ளலி னருட்டிருவாக்கிலொன்றும், “இன்பேயருளி யெனையுருக்கி யுயிருண்கின்ற வெம்மானே” எனுந் தீந்தமிழென்னினைவின்பாற்பட்டது. ஆவிசோர்ந்து, கைகளுயர்த்தி, முழந்தாட்பணிந்து விண்ணை நோக்கியவாறே “கன்னெஞ்சனேனையுங் கனிவித்த கருணை வாரிதியே - என்னைப்போலப் பல்கோடியந்தணரிருக்கவு மென்னையே மெய்கண்டானடித் தொண்டர்க்குத் தொண்டனுக்கிய கருணையென்னே! என்னைநின்னி லிழப்பதன்றி யிதற்கிலனோர் கைம்மாறு” என்று குவிந்தேன். முழந்தாட்பணிந்த காரணத்தாற்போலும் கிறிஸ்தவ மாக்களின் நினைவும், அதனுடன் கிறிஸ்து பெருந்தகையாரின் நினைவும் வந்தது. பலஸ்தீன் நாட்டி லந்நாளில் மார்தா மேரி யென்ற பெண்ணரசிகளும், பீற்றர், ஜேம்ஸ், ஜான் முதலிய வின்பச்செல்வர்களும் ஊன்கண்ணு முளக்கண்ணுங் கண்டு களிக்குமாறு யோர்தான் நதிக்கரைமேலுலாவித் தாம்கண்ட மூலகார

ணைப்பற்றிய மூதுரைகளை மொழிந்ததும் நாம்பெரியரென்னு நாட்டமுடையார் நாணப் பச்சிளங்குழவிகளும் பான்மொழிக் கன்னியரும் வறியவரும் எளிதிலுணர்ந்த அப்பெருமானைச் சூழ்ந்துய்ந்தார்கள் என்பதுங்கண்டு என்மனம் நெக்குநின்றது. யோர்தான் நதிக்கரைசென்ற வென்மனந்திரும்பி யமுனா நதிக்கரையடைந்தது. இதுபோன்ற ஒரு நிலாநாளிலன்றோ யமுனாநதியின் மணல் மேடுகளிற்றங்கிய சிறுகண்ணன் குழலோசை செவிமடுத்தது மாயர்குலச் சிறுமிகளோடிக் களித்தனரென வென்மனங்களுழந்தது. காளைப்பருவத்து மாரனைவென்ற தீரனும் புண்ணியபுத்திரனும் மன்னுயிர்த் துன்பம் மாற்றலே மிக்கபேறென மனை துறந்து, மனையாள் துறந்து, மகிழ்ச்சியிலேனுங்கு மாசாட்டியைத் துறந்து, பாதுக்க தூக்கியாய்த் தமது திருவடிமலரைப் பூமகள் சிரத்தின்மீது சூட்டிப் பலநாட்களிலானந்தர் முதலானோர்க்குத் தொண்டர்களுக்க அமுதவுபதேசஞ் செய்தார்” என்று பலவேறு எண்ணங்கள் சங்கிலித்தொடர்போன்று ஒன்றன்பின்னொன்றாய்த் தொடர்ந்து வந்துகொண்டிருக்கையில் என்னையறியாதோர் வியஸனமுமுண்டாயிற்று. “ஆநந்தா! ஒருமதவாதி வேறொரு மதப்பெருமைகளைப் போற்றாது தூற்றுகின்றனரே. மானுடவியல்பென்னுட்டிலும் எந்நாளிலும் ஒருமை யுடைத்தே! பெரியாரெவரு மொருதன்மை யுடையாரே! பாவப்பிணிப்பிறகு உவந்து பலியுண்ட பரமனுக்க கருதப்படும் கிறிஸ்துவும், பேரன்பர் பிரபந்திக்குப் பரிந்து பண்புகாட்டும் பிரானுக்க கொள்ளப்படும் கண்ணனுமொத்தன்மைத்து மொத்தவர்களென வேன கொள்ளப்படாதோ. ஒருவனே பதியென்று றுதியிட்டுரைத்த வுத்தம மகம்மது மகானின் மாக்ஷியை மணந்நலாகாதோ! சளளைச சடங்குகளல்லவோ கொள்ளைச சண்டையை விளைத்தன. பின்னே யோர்புகுத்திய பிணக்குகளல்லவோ போரை மூட்டின. சடங்குகளைக் களைந்தும் பிணக்குகளை நுணுக்கியும் நோக்கின், பதியின் பண்பெய்திய பல்லாரும் ஸமயத்துவமெய்திய மகத்துவமுடையாரென்பது மணக்கும். பிணங்கு மாந்தர் பெற்றியைப் பற்று துணைமையை யுற்றுப்பற்றின் நற்றவர்களன்னேரெனத் தெற்றெனப் புலப்படும். கிறிஸ்தவர் பலர்சூழ்ந்தொரு ஏுபிரேய வாலிபனை, “கடவுள் ஒருவனே, பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என மூவரில்லை” யெனக் கூறிய குற்றத்திற்காக அவ்வாண்டகையை யுயிருடன் கொளுத்தக்கிளம்பிச் சூழ்ந்து கொழுந்துவிட்டெறியு மந்நெருப்பினடுவே னுயர்க்கிளம்பிக் கிளம்பி உரத்த குரலுடன் சுற்றிநின்ற ஜனங்களையுற்று “கடவுள் ஒருவனே ஒரு

வன் மூவரல்லர்" என்று கூறி "ஒருவனும் என்னப்பனே நினக்கு என்னுயிரைத் தத்தம் செய்கிறேன்" என்று முதல்வனிடம் தன்தான்மாவை யர்ப்பித்ததாக வென்று யூதநண்பரொருவர் பிரயாகையில் நடந்த ஸர்வமதக்கூட்டத்தில் கன்மனத்தாரையுங் கரைந்துப் பிரஸங்கித்த கதை என்ஞாபகம் வந்ததும், சற்றுமுன்னந்தக்கடலில் மூழ்கிய வென்மனந் துயாக்கடலிலாழ்ந்தது. அந்தோ "ஐயன் பேரைச் சொல்லி யமர்விளைப்பாருமுளரே. இதுவென்ன அநியாயம் என என்மனம் வெதும்பிற்று. உரோம் சக்கிரவர்த்திகளிடத்திலேழைக் கிறிஸ்தவர்கள் நறுக்குண்டதும், மீண்டும் மற்றைய மதஸ்தாகளைக் கிறிஸ்தவப்போப்புகள் சித்திரவதை புரிந்ததும் கணக்கிலகப்படுமோ. சிவ! சிவ!! வனிந்த மதச்சண்டை" என்று என்மனம் புண்ணுயிற்று. கனிமொழியிற் (Gospels) கல்லல கிடையாவென வென்முழு நம்பிக்கை, கிறிஸ்துநாதரே "நீங்களெல்லோ நம் கடவுளின் குழந்தைகள் (ye are the sons of God) 'என்னத்தனும் நின்னத்தனும், என் கடவுளும் நின்கடவுளும்" ("My Father and your Father, my God and your God") "என்னத்த னென்னினு மிக்கான்" (My Father is greater than I) "யானென்றுபயிர் என்னத்தனே பயிரிடுபவன்" (I am the true vine and my Father is the husbandman) "என்னை ஏனினியோனென்கிறாய், என்னத்தனே எல்லார்க்கு மினியவன (Why callest thou me good-there is none good save my Father-in-heaven) "உன்றிருவுள்ளப்படியாகுக" (Thy will be done) "என்னத்தன் பேர்கொடு போந்தேன்" (I am come in my Father's name) என்பன வாதி நனிமொழி மொழிந்தார்எனக் கனிமொழியிற் கண்டேம். கடவுளருளா லுலகுய்யவந்த வாண்டகையே கிறிஸ்து வென்பது வெளியாகும். கனிமொழியிற் கல்லல் கிடையா வென்றேம். கல்லலயாவும் பின்னையோர் கட்டிவிட்ட துட்டச்சொல்லிலென்பது விள்ளும். கயவர் கட்டிவிட்ட மீளாநரகம் (Eternal Hell) மீக்ஷியில்லா நீக்ஷிபெற்ற வோலக்காக்ஷி (Everlasting cries of souls past redemption), பரமனைப்போலப் பாவிவாழும் பிசாசு (An embodied Devil often upsetting the will of God), குற்றமியற்று வொருவன்மேற் குற்றம் பொறித்தல் (Visiting the sin of a byegone parent upon the innocent descendants) அப்போலிக் குற்றத்திறகும் குற்றவாளியை மன்னித்தாவது, அல்லது குற்றவாளியைத் தண்டித்தாவது நீதிபுரிவதை விட்டுக் குற்றஞ் சிறிது மியற்று வொருவனை வருத்தப்படுத்தல் (In-

stead of forgiving the sins of the sinner in mercy, or exacting penalty from the doer in strict justice, putting the innocent to agonies of death and calling that to be mercy or an adequate justice which is neither,) பகுப்பில்லாத கடவுளாகு சித்தைச் சிதைத்துப் பகுத்தல், மீண்டு மேற்றத்தாழ்ச்சி கூறல் (To say that God who is an undivided and indivisible spirit is composed of three persons, one of whom is greater than the other two and yet committing the mathematical blunder that one is either three or equal to three and relegating this to the realm of mystery) முதலிய பசையற்ற வசைக்கொள்கைகளல்லவா கிறிஸ்துநாத னுண்மையைத் தெரியவொட்டாது மறைத்து மவர் மணமொழிகளைப் பிணமொழிகளாக்கின கண்டீர். அறிவினு டன்பினுமிக்க யூனிடேரியர்களும ஸர் ஆலிவர் லாட்ஜ் முதலிய சாஸ்திர வல்லுனரும், லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoi) போன்ற தீரரும், ஆர். ஜே காம்பெல் (R J. Campbell) போன்ற பண்பினமைந்த கிறிஸ்தவர்களும் (Enlightened missionaries), மேரி கொரிலி (Marie corelli) போன்ற வுத்தம நற்குணக் கதை வாணர்களும (Novelist) இக்கொள்கைகளை முற்றத்துறந் தனர். கிறிஸ்துநாதன் பரிபூரணத்துடன் கலந்த நாடொடங்கி அவரைப்பற்றிய பலகொள்கைகள் பரவின. அன்றுமுத லின்றுவரை இன்னும் திரிந்துகொண்டேவரக் காண்கிறோம். பலநூற்கள் கொளுத்தப்பட்டன. பலநூற்கள் புகுத்தப்பட்டன. இவைகளென்மனதிற் படவே, கண்ணன் விஷயத்திலு மிவ்வாறு பண்டைக்கொள்கைகள் விண்டு பின்னைக்கொள்கைகள் புகுத்திருக்கின்றனவே யென்று வென்மனம்நொந்தது. கண்ணன் கொள்கையைத் தீர்மானிக்கவேண்டுமாயின், அப்பெரியோனது தாய்தந்தை தமர்தாரங்களின் கொள்கைகளையும், மற்றைய விருஷ்ணிகளின் கொள்கை, பாண்டவர்களின் கொள்கை, கௌரவர்களின் கொள்கை, அவர்களின் முன்னோர் கொள்கை, துரோணர், அசுவத்தாமர், கிருபர், பீஷ்மர், மற்றை யிருடி கணங்கள், விராடன்போன்ற விறையோர், மாங்கணிகர், மருத்தர்போன்ற மறையோர் கொள்கை, கண்ணனே பாரதப்போருக்கு முன்னும் பின்னுமிடையிலுஞ் செய்துவந்த வழிபாடுகள், கீதோபதேசஞ்செய்த கண்ணனுடனிருந்து மவன்பார் பார்த்தன் பண்ணிய பரமன்வழிபாடு முதலியவைகளைக் கவனிப்பி னுண்மைகளை யுணரலாமன்றோ. அற்றாயினும் பின்னையோர் புகுத்திய புன்மைகள் பலவா

யிற்றே. என்செய்வது; எம்மதமாயினுங் காடுள்ளவரை யிரடும், பள்ளமுள்ளவரைத் தள்ளும், வழுக்குள்ளவரைச் சறுக்கும். கஷ்டத்துடன் கிலிஷ்ட கல்பனஞ்செய்யின் துஷ்டமாகவே முடியும். சகஜமானதும், பன்மைப்பொருள் படவருத்தாத்தமான கொள்கைகளை யுடைத்தாயின் யாரும் வேறுபடுத்தராதென்றே தீர்ந்தேன். ஆயினும் பார் முழுதும் பிரபலமாகப் பெண்மண்டில வேரூன்றிய பொலிவெய்தியது ஆஸ்திகவாதம், புறக்கொள்கைகளாங் களைகளைப் பிடுங்கி நன்மதப்பயிரைச் செழிக்கச்செய்யாது மாத்திற பலவோர் மதாக்கிரகத்தால் பிடித்ததையே சாதிக்கும் பேராணவத்திற் கிடப்பினும், எம்மை யஞ்ஞேகவல் விருட்கருவறையிலிருந்து பெற்றெடுத்துத் தமது பூதகலாந்த புன்முறுவலைப் பொத்த பனிநிலவில் விட்ட பேரன்னையே எம்மதக் காரிகையாய் நீக்கி, பாவங்களைத் தூர்த்து ஸமத்துவஞ்செய்வாள் என்பது. இதற்கெனப் புதுமதம் புகுத்த வேண்டுவதில்லை. பெருங்கருணைவள்ளலே முன்னுடைகளிலேயே முடிந்தமுடிபான தெய்வஞானப்பொருளை வெளியிட்டருளினர். அந்தத் தெய்வஞானத்தை ஓர் பாஷையில் மாத்திரம் வெளியிட்டதுடன் நில்லாது, எல்லோருங் காணும்படி சிலைகள் கோயில்கள் விக்கிரகங்கள் முதலியவைகளின் மூலமாக வெளியிடவும் வித்தருளினர். இவைகளிற் பெறப்படும் உண்மைகள் ஓர் தேசத்தாற்கென்றும், ஓர் காலத்தாற்கென்றும், ஓர் ஜாதியாருக்கென்றும் ஏற்பட்டனவல்ல. இக்காரணம் பற்றியே இப்பெருஞானமானது "பதிஞானமென்றும்" "அபரோக்ஷானுபவ ஞானமென்றும்" "ஸமரஸ ஞானமென்றும்" "சித்தாந்தஞானம்" என்றும் பகரப்படுமென்பதைக் காணலாம். இவைகளிற் பெறப்படு முண்மைகள் எம்மதங்களிலும் பொதிந்து கிடக்கின்றன. ஆயினுமிவைகள் அம்மதங்களிற் குப்பையிற்கிடக்கும் மாணிக்கங்களைப்போத்துப் புன்கொள்கைகளில் மறைந்து கிடக்கின்றன. இதிற்பெறப்படும் இறை, உயிர், தளையெனும் பொருளிலக்கணங்கள் முன்பின் முரணின்றி எம்மதங்கட்கு மாறுய நிருபணவைகளாகும். இக்காரணம் பற்றியே "[illegible]" தத்க்ஷணமே தக்கதென நம்பிக்கை யுண்டாக்குங் கொள்கைகளைக் கொண்டதெனவும், "[illegible]" ஆயாசமின்றி வீடுபேற்றை யளிக்குமெனவுமிதன் பெருமை வெளிப்பட்டது. ஏனெனின் "அன்பை"யே அஸ்திவாரமாகக்கொண்டெழுந்த மதமாதலினென்க. அன்பு செலுத்துவதும், அன்பாலின்பம்பெறுவதுங் கஷ்டமின்றாம். இதிற்பெறப்படும் சரியையாதிகளின்றிறமோ "விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கு

மரும்பு, மலர், காய், கனிபோலன்றோ பராபரமே" என்ற ஸ்ரீ தாயு
மானமுனிவருரைத்தபடி அன்பின் பேதங்களாம். இதிற்பெறப்படும்
ஸம்ஸ்காரங்களோவெனில் பேற்றையளிக்கும் பெருமிதங்களாகும்.
இஸ்லாமார்க்கமினியசகோதரபாவத்தையெடுத்துச் சாற்றினுஞ் சுன்
னத், "ஜீவஹிம்ஸை" "முடிவில்லா நரகம்" போன்ற வினைத பலவாம்
சங்களை யுடைத்து. கிறிஸ்தவமார்க்கத்திலுஞ் சகோதரமார்க்கஞ்
சதுரமாய்ச் சாற்றப்படினும் ஒயின்குடித்த லோய்வுநாட்களில் வேண்
டப்படும். "(Lord Supper)" முதலியவைகளைக் கவனிக்க. அன்றி
யும் மேற்குறித்த மறைப்புனைவாளைக்களும் வேண்டப்படும்.
ஸவுத்திராமணியிற் சுராபானஞ் சுவைக்கும். வாஜபேயத்தில் மாமி
சம் மணக்கும். இச் சம்ஸ்காரங்களுக்கும் ஞானசாதனத்திற்கும்
யாதொருதொடர்பையுங் காணேம். ஆயினிவ் வுத்தம ஞானத்திற்
பெறப்படும் ஸம்ஸ்காரங்களோவெனில் பவுதிக சாஸ்திரஞானம் பெரு
கிய விஞ்ஞான்று உண்மைகளென்று துணியப்பட்ட "ஹிப்னோடி
ஸம்" "மெஸ்மெரிஸம்" "டெலிபதி"(Telepathy)"கிளொவாயன்ஸ்"
(Clairvoyance), பிறர் எண்ணமறிதல் (Thought reading) முத
லியவைகளைக் கொண்டெழுந்து முதலவனையடைவிக்கும் முழுநலங்க
ளாகும். இக்காலத்தில் மனோவியாபாரத்திறலாலே வியாதிகளைச்
சொஸ்தஞ்செய்தல் கேட்கப்படும். இவ்வாறே நிறைந்த வன்பும்,
பரந்தவருளுங்கொண்ட சிறந்த அற்புத ஆசான்றனிடையறாத தி
யானத்தா லடைந்த பரமனருளொளியைப் பெருக்கிப் பக்குவனுக்குப்
பாசவிமோசனஞ் செய்விக்கும் சாம்பவி, சாக்ஷி, மாந்திரியெனுந்
தீக்ஷைகள் யாவும் திக்திக்கு நீககருமமிலு மினியதா யாத்மாவிற்
செய்யப்படும் "ஆத்மோத்தாரண"ச் செய்கைகளாம். கிரியையொரு
விதம், ஞானமொருவிதமென்று கூறி கிரியையொழிப்பதே ஞான
மென்றும், ஞானத்திற்கு வைரிமேப காமமென்றும் போதிக்கும் மதங்
கள்போலாது, ஞானமே கிரியையாய்ப் பரிணமித்தும், கிரியையே
ஞானத்தைத் தாவல்லதாயுமுள்ள பெரியவழிகளாகும். வாட்டு ஞான
மும், மூட்டுகர்மமு மிதிற்கிடையா. இவ்வாறே அன்பொருமத
மும் ஞானமொருமதமாக்கொண்டு அன்புயர்ந்தது, ஞானந்தாழ்ந்த
தென்றும், ஞானமுயர்ந்த தன்புதாழ்ந்ததென மயங்கூறிக் கலாம் விளைக்
கும் காரணமிதிலில்லை. எல்லாம் அன்பேயாய், எல்லாம் ஞானமே
யாய் விளங்கிநிற்கும். வாளொன்றையும் நம்பத்தான் வேண்டும்,
விறைக்கொளவாதெனக் கூறுவதில்லை. மற்று எவற்றையும் விளக்
கியே நிற்கும். சிலமதவாதிகள் கொள்கைகளைக்கூறி விளக்காமல்

நம்பச்சொல்வதுண்டு. கேட்கப்புகின், கடவுளின் ரகஸியமெனக் கூறுவார்கள். கடவுளின் ரகஸியமாயினும், (God's Mystery), கூறவொண்ணாதெனை வொன்றையுங் கழறுவதில்லை. ரகஸிய அநுபவ நிலையையுங்கூட ஒருவாறு விரித்துரைக்க வல்லதாம.

என்றிவவாறு பலவெண்ணங்கள நதிபபிரவாகமபோன் றென் மனத்தின்கண் மேன்மேலும வநதுகொண்டிருக்கும்போது, இவைக ளனைத்தையு மொருங்கே போதிக்கும சைவாகமங்களின் அருமை, பெருமைகளும் என் மன நகண்ணிறைந்தன. ஆ! ஆ! அதன்பெருமையை யார் சொலலவலலார். ஆரியர்க்கேயெனறும், அநாரியர்க் கன்றென்றும் ஆடவாக்கேயென்றும் மகடூஉக்கன்றென்றும், இறையோர்க்கேயன்றி வறியோரக்கனறென்றும கடவுளின் குழாஙகளை வேறுபடுத்திக் கூறும் சிலநூறகளைப போலாது, ஜாதிகுலம பாராது, நிறஞ்செய லெண்ணாது, ஊரபேருன்னாது, அன்பர் யாவர்க்குமொரு தலைப்பட பக்குவமே பண்பென்றும, அன்பே அருமைப்பாடென் றும், தாழ்மையே தண்மையென்றும, அறிவே ஆறறலென்றும் மாற் றுவது அண்ணலாகம மொன்றேயாம. ஆயின் கொரான, பைபில போன்ற மதகரந்தஙகளில ஸாவமானிட ஸோதரதவம பெறப்பட் டதுபோல சிவாகமஙகளில் பெறபபடாமல சாதுரவாணங்கள் பெறப பட்டதெதென்னில, மனுதர்மாதி நூறகளில ஒழுக்கம நிறைநதுள் ளோரை ஆரியரென்றும, அஃதிலலாதாரை அநாரியரென்றும் கூறப் பட்டிருக்கின்றது. மிருதிநூறகள உலகனைத்தையு மாரியர், அநாரியரெனு மிருபகுதியிலடக்கின. சௌசாசாராதிகளைக் கொண்டோர் ஒருபாலாரும், சௌசாசாராதிகளைக் கழிநதோர் மறறொருபாலாரு மாக வகுக்கபபட்டார்கள சௌசாசாரங்களு மாநதிரபாஹ்யமென விருவகைத்தாகும. இவ்வாநதிர பாஹ்யாதியாசாரங்களை விரும்பிநின் றோர் ஆரியரென்பது ஸ்மிருதிநூறகளில தெறறெனப புலபபடும். இன்னுமிவ்வாசாரங்களைப போறறி வாழ்கின்றவ ராரியரேயென்பது திண்ணம். ஆயினு மாரியாநாரியரென்று மிருதிறத்தாரையும மீடேற்றவேண்டி யுரைக்குமாகமங்கள் சாதிமுறையைச் சாறறவநததில்லை. சாதிக்குறிய சடங்குகளைப போற்றியதின்று. சாதிமுறைப்படி வேற் றுமை யுரைத்ததின்று. பக்குவா பக்குவ நோககிச் சுத்த புவன வாஸிகளென்றும மிச்ரபுவன வாஸிகளென்றும் அசுத்தபுவன வாஸி களென்றும் மாததிரம கழறியதுண்டு. ஆரியரையு மீடேறறுங்கார ணத்தால் அவர்கள்கொண்ட சாதிவேற்றுமையை யநுவாதமுகமா யுரைக்கக்கண்மையாவும் சாதியாதி வேற்றுமையைத் தவிர்ப்பதே

யதன்முக்கிய தாற்பரியம். "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்" என்றும் "சாத்திரம்பல பேசுஞ்சழக்கர்காள், கோத்திரமுங் குலமுங்கொண் டென்செய்வீர், பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல், மாத்திரைக்குள் ளருளுமாற் பேறரே" என்றும் சைவப் பெருந்திருவாளர்கள் கட்டளையிட்டருளியதுஞ் சிவாகமங்களி னுதாரங்கொண்டேயாம். இதனால், சாதி, குலம், கோத்திரங்களைக் களைவதேயதனியல்பு. பாத்திரம் சிவம் என்பதுதான் அதன் முழுக்கருத்தாகும். அநாரியர்களையுற்று ஒழுக்கமுடைததாதல், மதுபானம் விலக்கல், மாம்ஸபோஜனந் தவிர்த்தல் முதலியவைகளையுங் கூறுவது போலவே ஆரியர்களையுற்றுச் சாதியைத் தவிர்க்கவே போதிக்கின்றன. ஆரியர்களும் சாதிவித்தியாசத்தைக் கொள்வதெல்லாம் ஒழுக்கங் காரணமாக. சற்றுமுன்வரை ஒழுக்கங் காரணமாகவே சாதியையுயர்த்திவந்தனர் சான்றோர். பிராம்மணர்களாக விரும்பிய சிற்சில வகுப்பினரும் ஒழுக்கத்தைக் கைக்கொண்டே நன்னெறி கைப்பற்றினர். சற்று நிதானித்துணர்மின். சாதியுயரவுயர வொழுக்கந்தேர்வதை நோக்குமின். முன்னையோர் நின்னவில்லையோவென எசினென்னும். இவ்வுலகில் பலவகுப்புகளிருக்க யூதர்களையே பரமன் பக்ஷம் வைத்தாரபவர் (The chosen people of God) எனச்சிலர் பகரவில்லையா. முதலில் யூதர்களுக்கென்றும் அதன்பிறகே மற்றையோர்க்கென்றும்(First for the Jews and then for the gentiles) என்று புதியவேறபாடுமே புனைந்ததில்லையா. சாதிமுறையைக் கவனிப்பின், பிரமஞானத்தைக் கைக்கொண்டோர் பெரியாரென்றும், உயிரைக்காப்பாற்றுவர் அவர் கடுத்தவர்என்றும், தர்மத்திற்குப் பொருளீட்டுவோர் அவர் கடுத்தவர்என்றும் கண்டோம். ஆதியிலெவ்வாறு சாதிமுறை வந்ததென்பதைத் தீர்மானிக்கப் போதுமான சான்று தற்காலத்திலில்லை. ஆயினும் பாரத, இராமாயண, புராணாதிகளில் "[illegible]" "பாகுபலத்தைச் சுட்டெறி, பிரும்மதேஜஸ்ஸே பலம்பலம" என்று வசிஷ்ட விசுவாமித்திரர் கதை வெள்ளிடைமலைபோல் விளங்கக் கிடக்கின்றது. "பாஹுபலம் பலத்தும்" "பணச்செருக்கு முறுக்கியுமுள்ள" விக்காலத்தில் மேற்றிசையிலுள்ளாரும் அவரைப் பின்பற்றிய கீழ்நாட்டாரும் அவ்வுண்மை கடைப்பிடிப்பாரா! சாதியாலொற்றுமையிலலையென்றும் சதுரிழந்தோமென்றும் புறத்துள்ள காடு, மலை, ஆறு, கடல்முதலியவைகள் குறுக்கிட்ட காரணத்தால் வகுப்பினர்

(Nations) என்று சர்வ சகோதரத்துவத்தைச் சிதைக்குஞ் சிலர் ஞானத்தையும் ஒழுக்கத்தையுங் கண்டு பிரித்த வாரியரைக் குறைகூறுவானேன். சகோதரபாவங் கூறும் மதங்களில் மாம்ஸ பக்ஷணம் மிகைத்தும், மதுபானந் தொகுத்தும வந்திருப்பதற்கும், சாதிமுறைகூறிய விந்நாட்டி லவைகுறைந்து மிருப்பதற் கென்ன காரணங்கண்டு கூறுவாரோ. ஒழுக்க முயர்ந்ததாகக் கொள்ளப் படாதபோது எதாவதொன்றை யுயர்ந்ததாகக் கொள்ளவேண்டும். அஃது இன்றைக்குப் பணமாய் முடிந்திருப்பதைப் பாருங்கள் பாழும் பணம் பாமரனையும் பிடரிபிடித்துத் தள்ளி யரசாக்ஷிபுரிகின்றதே! என்றாலும் ஒழுக்கத்தை யுயர்த்திப் பேசிய திவ்யாகமமோ, சாதியைச் சதுர்யுகமவரை நிறுத்தப் பேசியதின்று. மற்று அதனைத் தொலைக்கவே சாற்றியது கண்மின். சாதியாஞ் சங்கடச் சடங்கைக் கடந்த ஆத்தும ஸம்ஸ்காரத்தைப் போதிப்பதே ஆகமத்தினியல்பு. அநாரியர்களை நோக்கிக் கூறுவதுயாதெனின் "ஒழுக்கமுட னுற வாடுக, அன்பையும அருளையுங் கைக்கொள்க" என்பதாம். ஆரியரையுற்றுக் கூறுவது யாதெனின் "தேகச்சடங்கு எவ்வாறாயினு மாத்ம ஸம்ஸ்காரத்தை விரும்புக" என்பதாம். சட்டைச் சடங்கு சௌளமாயிலென், அன்னத்தாயிலென், ஸோமபானமாயிலென், ஸுராபானமாயிலென், ஆரியர் அநாரியரென்னு மிருதிறத்தாரும் மாதேவன் மக்கள். இருவரையு முய்விப்பதவர் கருணை. இதனால் நியாயங் காரணமாகக்கொண்டு ஒழுக்கத்தை ஒப்பியதால் "வணா[illegible]" என்று வர்ணாசிரம தர்மத்தை யொட்டியும் அதைக்கடந்துமெனச் சிவாகமதர்மம் வெளிப்பட்டதறிக. என்றாலுமிதைத்தொடர்ந்த வாக்கியம் "வே[illegible]" என வருமாற்றால் "வேதத்தி லுயர்ந்ததாகப் பெறப்படும் ஞானமே யிதில் விரிக்கப்பட்டதறிக. இதனால் திவ்யாகமம் "புதுஎற்பாடு" (New Testament) போன்றதாகும். கிறிஸ்தவர்களின் புதிய வேற்பாடானது இவ்வுலகத்தினோர் மூலையிலுள்ள ஓர் நாட்டிலுண்டான "கிறிஸ்துவை" நம்பவெனக்கூறியது. இப் புதிய வேற்பாடோ எவ்விடத்துமுள்ள எவ்வான்மாக்களிலும் உண்மையிற்பதிந்த கிறிஸ்துக்களைக்கண்டு பாமரனைப் போதிப்பதாகும். அதாவது "தன்னுண்மை கண்டு தலைவனையனுபவிக்கக்" கூறுவதாகும். கிறிஸ்தவர் புதியவேற்பாடும் அறிவாளிகளால் பழயனவென்று கழிக்கப்பட்டு வேறுபல புதியஏற்பாடுகள் புதுக்கப்படுந்

நிலையினின்றது. திவ்வியாகமமோவெனில் என்றென்றைக்குந் தெவிட்டாதுளத்திற் றித்திக்கும் புத்தமிர்தையே யொக்கும். இதுகாரணம்பற்றியே அடிக்கடி "ஸர்வலோகோபகாராய" எல்லாஉலகத்தின் க்ஷேமத்தின்பொருட்டே யருளப்பட்டதென்றும், "ஜகதாம் ஶ்ரேயஸே" ஜகத்திலுள்ளார் உய்யும்பொருட்டே வெளியிடப்பட்டதென்றும் ஆகமங்கூறும் இதனாலேயே "ப்ரகடயஸ்வம் ஜ்ஞானம்" இந்தஞானத்தை உலகெங்கணும் விரிக்கவென வறிவாளிகளுக்கு ஓர் சாஸனமும் பிறந்ததுணாக. சைவாகமங்களிற் பெறப்பட்ட பெருநலமோ எல்லாமதங்களிலாழ்ந்தும், அன்பிற் கரைந்தவெல்லா வான்றோருமடையும் பேறுகளையே வெளியிடுதலாம். "ஒரு நாமமோருருவ மொன்றுமில்லாற் காயிரந் திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ" "ஏகம்ஸத்விப்ரா பஹுதா வதந்தி" என்ற முதுரைகளின்படி இன்னவுரு, இன்னநிறமென்று கூறவொண்ணாத் தனிமுதல்வனை எப்பேரிட்டழைப்பினு முண்மையாய் வழிபடுவோரடையுங் கதியொரே விதமாகும். இவர்களடையு மிகப்பரப்பேறுகள் ஒரேவிதமாகும். இங்குப் பேறென யாங்கூறியது தன, தான்யாதிகர்மப் பேறுகளையன்று. உண்மை ஞானிகள், உண்மையன்பர்கள் (The Sages and the Saints) பெறும் பெரும்பேறுகளையுற்றேயாம். உள்ளவாறுண்மையா யுள்ளங்குழைந்துமபர்பிரானைத் தொழுதெழுவார்களிம்மையிலே யடையும் பேறுகளைத் திவ்வியாகமங்களே அவைகட்குறிய ஏதுக்களுடன், எடுத்துரைக்கும். அவையாவையெனின்,

"ஶாந்தி꞉ ச ப்ரஶாந்தி தீ³ப்திஶ்ச ப்ரஸாத³ஶ்ச தத꞉ பரம் । ஶாந்தி꞉ ஸர்வாபதா³ம் ஶாந்திரித்யபி⁴தீ⁴யதே । தமஸோ ஸர்வதோ நாஶ꞉ ப்ரஶாந்திரபி⁴தீ⁴யதே । ப³ஹிரந்த꞉ ப்ரகாஶோ யோ தீ³ப்திரித்யபி⁴தீ⁴யதே । ஸர்வஸ்வாயாஸம் ஸ்வச்ச²தா ப்ரஸாத³꞉ ப்ரஸீத³த꞉ । காரணானி ச ஸர்வாணி ஸதா³ஹ்ருத்³யம் தராணி ச । ப்ராப்ய ப்ரஸாத³கம் க்ஷிப்ரம் ப்ரஸன்னானி ப⁴வந்தி த" என்ற

ஆகம வாக்கியங்களால், சாந்தி, பிரசாந்தி, தீப்தி, பிரஸாதத்வம் முதலியவைகளே யுண்மையன்பர்களடையுமிகப் பேறுகளென்றுணர்வாம். இதில் சாந்தியாவது யாதெனில் எவ்வித வாபத்துக்கள் வரினும் மனந்தளராமை, பிரசாந்தியென்பது அகவிருள் புறவிருள்களின் நாசம். அகத்தும் புறத்து மொளியை விரித்தல தீபதியாகும். உள்ளத்திற் றெளிவுடைத்தாகியென்றும் ஸந்தோஷமாய்நிற்றல பிரஸாத

மாகும். அன்றியும் "தேஜ: ப்ரபாவோ வீர்யஞ்ச க்ஷமாகாருண்யமேவச" எனும் வாக்கியத்தால், தேஜஸ், பிரபாவம், வீர்யம், பொறுமை, இரக்கமீதூறல் முதலியவைகளு மவர்களுடைமைகளாகும். உண்மை ஞானிகளின் தேகம் வனப்புடைத்தாதலும், ஒளியுடைத்தாதலு முண்டென்பதை ஸ்ரீ சேக்கிழார்பெருமான் தொண்டர்புராணத்தில் பற்பலவிடங்களில் தெளிவாய்க்கூறியுள்ளார்.

"பாச மற்றில ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற் காயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈச னைத்தொழு தேதொழு தேகினார்"

என்று ஸ்ரீஞானஸம்பந்தப்பெருமானை யுற்று மிகவும் ஜ்வாலிக்குந் திருமேனியையுடையவரென்றும், தூரத்தில் வரும்போதே ஸ்ரீசுந்தரமூர்த்திகளின் திருவுருவம் ஒருபெரிய தேஜஸ்ஸாகவே உபமன்யு முதலிய இருடிகணங்கட்குக் காணப்பட்டதென்றும், விளக்கியருளினார். யோகநூல்வல்ல ஸ்ரீகாளிதாஸனும் யோகாப்பியாஸம்புரிபவர்களுக்கு "ஜ்யோதி: ப்ரபா மஹேசஸ்ய சிரஸ:" எனசிரஸினின்று ஜோதியின் கிரணங்கள் எங்கும்பரவுமென்றும் கூறினார். *இயேசுநாதரும் நாற்பதுநாள்வரை யோகாப்பியாசம் புரிந்து அஞ்ஞானமெனு மகவிருட்பிசாசையோட்டித் துறத்தி உல

* ஸர் ஆலிவர் லாட்ஜ் எனும் பண்புடைக் கிறிஸ்தவரும், சாஸ்திரமுதிர்ச்சி யுடையோரும் (Scientist) ஆகிய மகாபண்டிதர் மனபா தாமெழுதிய "Man and the Universe" எனும் கிரந்தத்தில் பின்வருமா றெழுதுகிறார். "The whole Idea of the Manhood (of Christ) is that he was a man like ourselves, subject to human needs, open even to temptation, obedient to pain and death. That his spirit was superior to ours, few deny, but that his body was essentially different, seems to me like superstition His raiment at any rate was made in the ordinary way, yet it too shared in the glory of the transfiguration The transfiguration was a splendid episode, typifying the dignifying and dominating of matter by he indwelling spirit The shining in the eye of genius the almost visible glow pervading the body in moments of exaltation—this raised to a higher power permeated and suffused the poor human body and travelworn peasant garments of Christ, till the few privileged witnesses had to shade their eyes. So it is reported concerning Moses after his solitary communion with Jehovah; so it may have been with Joan of Arc, so it may be again, from time to time, with the most exalted saints."

கத்தாரை ஏடேற்ற வெளிப்பட்டகாலத்தில் ஓர்தினம் "முகம் சூரிய மண்டலத்தின் பிரகாசத்தையும், உடைகள் ஜோதிகளேயாகவும்" தனது சீடர்களுக்குப் பிரகாசித்தனனென்றும், அனேகர்கள் கண்கள் நாதனைக்காணக்கூச அவர்கள் அவனடிவணங்கி, நடுக்குற்றார்களென்றுங்கேட்டோம். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் "திவ்யம் ததாமி தே சக்ஷு: பஸ்ய மே யோகமைஸ்வரம்" நினக்கு தெய்வக்கண்களைத் தருகின்றோம் "எனது ஈசுவரஸம்பந்தமான யோகத்தைப்பார்" என்று அர்ஜுனனுக்கு மொழிந்து விசுவரூபத்தைக்காட்டினதும் அவ்வர்ஜுனன் அநேககோடி சூரியர்களின் தேஜஸ்ஸையுடைய முகமண்டலத்தைக் கண்டனனென்றும், அவனதுகண்களும் அவ்வொளியைக் காணக்கூசினவென்றும் கேட்டிருக்கிறோம். இவ்வாறே ருஷியாதிகள் யோகப்பிரபாவத்தால் தேஜோரூபிகளாய் விளங்கினார்களென லௌகாதிகளிற் கண்டோம். பதினோராந்தின் பண்பாலடியார்களுக்கே யிவைகிட்டுமெனச் சைவாகமங்களே முரசிடும். நமக்குத்தொலைக்குக் கிறிஸ்தவ நண்பர்களெழுதும் பக்தர்களின் சித்திரப்படங்களில் சிரஸ், முகம், தேகம் முதலியவைகளைச் சூழ்ந்து ஒளிகள் மண்டலமிட்டிருப்பதாக அவர்கள் எழுதுவது மேற்றமுடைத்தே. ஸெயிண்டு பிரான்சிஸ் (St Fransis of Azzizzi) எனு மன்பர் முதல்வனைத்தொழுதுத் திருமபுகாலையில் முன்னினும் பன்மடங்கு ஒளியுடைக் கண்களுடனும் முகமண்டலத்துடனும் காணப்பட்டாரென அவரது திவ்வியசரித்திரத்திற் கூறப்பட்டுளது. இவ்வுண்மையை, திருக்கோயில்களிற் பிரதிஷ்டிக்கப்பட்டு விளங்கும் திருவுருவங்களைச் சுற்றியமைந்திருக்கும் பிரபைப் பிரபைகளும், உலோஹ விக்கிரகங்களின் சிரங்களையொட்டி யிசைத்திருக்கும் "சக்கரம்" போன்ற ஒளிமண்டலங்களும் நிறுத்தும்; அன்றியு மாராதனைகாலங்களிலொவ்வொருவகைத் தீபங்களினாலும் "நேத்ரே, சக்ஷுஷி, நாஸிகே, கர்ணயோ: ப்ரதிவே ப்ருகுடிகம் ப்ருணவாகாரஞ்ச வேஷ்டயேத்" முகம், கண், மூக்கு, செவி, உருவமுதலியவைகளைச்சுற்றி, பிரணவாகாரமாக ஒளிகளைக்காட்ட விதித்த ஆகமவிதிப்படி அநுட்டிக்கப்படுவதும் மிவ்வுண்மையை ஐயமறத்தெளிவிக்கும். மேலும் அடியார்களுக்கொருநீரமும உண்டாவதா யுண்மையாகமங்களுரைக்கும். எமது வாதவூர்பெருமானும் "யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம் ..... ...மேவினோ மவனடியாரடியாரோடு மேன்மேலுங் குழைந்தாடியாடுவோமே" என்றும், அப்பர்சுவாமிகளும் "நாமார்க்குங் குடியல்

லோம் நமனையஞ்சோம்.........பிணியறியோம் பணிவோமல்லோம், கோமாற்கே யாமென்றும் மீளாவாளாய்க் குறுகினோம்" என்றும், "அஞ்சுவதியாதொன்றுமில்லை-அஞ்சவருவதுமில்லை" "சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்கிருமாந்திருப்பன் கொலோ" என்றுமடியார்களுக்குள்ள தீரத்தை விளக்கியருளினார்கள். இயமனைத்தைரியம் பரமனுக்காட்பட்ட பணியினாலுண்மையில் வருமென்பதை "எளியேனமேலன் திருவாலவாயா னிற்கவே" என்று காழிப்பிரான் கருணைகூர்ந்தார். மரணம் நேர்ந்தகாலத்தும் கிறிஸ்துவும் அவர் கொள்கைக்காகப் பலருமுயிரிழந்தார்களென்று கிறிஸ்தவர் கூறிக்கொண்டு பெருமைபாராட்டுவதெல்லாம் அன்பர்களுக்குண்டாகுந் தன்மைகளென்று சிவாகமங்களிற் கண்டவைகளேயாம்.

இவையன்னத்திறகுங் காரணமினைத்தெனச் சிவாகமங்களேசெப்பும். உயிர் பளிங்கனைய சித்தென்பது திவ்வியாகமத்தேற்றம். பளிங்கானது எவ்வளவுக் கெவ்வளவு அழுக்கு நீங்கப்பெற்று சுவச்சமாயிருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு சூரியனது ஒளியை விரிக்கும். சூரியனது ஸந்நிதியில் மிகவும் ஸ்வச்சமான கண்ணாடி தன்னுருவங் காட்டாது ஒளிமயமாகவே விளங்கும். அழுக்கிருந்தால் மாத்திரம் கண்ணாடி தோன்றும் இன்றேல் தோன்றாது. அதுபோலப் பளிங்கனையசித்தாகிய வுயிரும் ஆணவமெனுமழுக்கு நீங்கப்பெறின் சிறிதும் வேறறுமையின்றிச் சிவவொளியைப் பிரஸரித்துச் சிவமாய் விளங்கும். உயிர் சார்ந்ததன் வண்ணமென்பதூஉந் திவ்வியாகமத்தேற்றம். "[illegible]" என்ற வாக்கிய மிதைநிறுத்தும். சிவனைச்சார்ந்தவுயிர் மாலின்னியம் (அதாவது ஆணவவழுக்கு) நீங்கினகாலத்து "சைவீபிரகிருதியுடைத்தாகும்" சைவீபிரக்ருதி யுண்டானதும் தனுகரணாதிகளும் சிவவொளியைத் தாங்குங்காரணத்தால் சிவதனு, சிவகரணாதிகளாய் மாறும். பசுகரணங்கள் சிவகரணங்களாய்ப் பவிக்குமென்று சிவதீக்ஷையிலேதான் கூறப்பட்டது. இவ்வாறெம்மதங்களுமங்கீகரித்த வுண்மைகளத்தனைக்கும் சிவாகமங்களே வதுக்களெடுத்துரைக்கும். இதனாலே எம்மதவுண்மைகளுக்கும் அருட்டிறவுகோல் சிவாகமமே என்பது திண்ணம். இதற்குக் காரணம் யாதெனில் பதிநூலாகிய சிவாகமத்தில் இயற்கையில் எவை யுண்மையோ அவையே செப்பப்படுவதாலென்க. ஆயின் "பஸ்மதாரணம்" முதலியவை சைவத்திற்குறிய சிறப்புக்குறிகளல்லவோவெனில்,

சைவத்தினின்றும் பிணங்கியவர்களுக்கவ்வாறு தோன்றுமேயன்றி வேறல்ல. பஸ்மதாரணம் பசுத்வ நிவிருத்தியைக் காட்டும் குறியென்பது எவருமெளிதிலறியக்கிடக்கின்றது. திவ்வியாகமங்களிவ்வாறே செப்புகின்றன. ஏனைய மதவாதிகள் பஸ்மதாரணஞ் செய்யாவிடினும், அது அவர்கள் கோட்களுக்கு விரோதமுற்றதன்றாம்; மற்று ஒத்ததேயாகும். பூர்வீகமதங்கள்யாவும் பஸ்மத்தைப் போற்றியே வந்தன. மோஸஸ் எழுதிய புத்தகத்தில் நீற்றை நிறையப்பூச விதியுண்டு. ஜொராஸ்டர் "ஜெண்டு" (Zend) நூலும் நீற்றைப் போற்றியதுண்டு. பூர்விக ஈஜிப்து நாட்டிலும் சாம்பரைச் சேரித்து வைத்தனர். வேதத்திலுள்ளது நீறே. நவீனத்தோராகிய கிறிஸ்தவர்களும் (Ash Wednesday) சாம்பற்றிருநாளென்னவோர் விழாக்கொண்டாடுகிறார்கள். முஸ்லீமான்களின் மருந்துகளில் பூதியளிப்பதின்னாட்டிலுண்டு. இதனால் எக்காரணத்தாலும் "பூதிசாதனம்" ஓர்மதத்திற்கெனவெழுந்த சிறப்புக்குறியென்பது தவறு. கட்புலனுக்கெட்டாக் கர்த்தனையடையக்குறிகளை விரும்பிய எம்மதக் குறிகளுக்கும் இதுவே மிக்ககுறி. ஆயினுஞ் சைவாகமத்தில் சிறப்பு வழியாய் நீற்றைக்கொள்வதுமுண்டு. உண்மைகளின் குறிகள் (Truths' symbols) என்றும் உண்மைகளை (Ultimate Truths) என்றும் இருமுறையாக காலவேறுபாட்டையும், பக்குவ வேறுபாட்டையுநோக்கி தீக்ஷாதிகளும், சரியையாதிகளும், திருவுருவாதிகளும் கொள்ளப்படும்போது சாமானியவாசிரியனூ லுண்மையின் குறிகளாகவும், பிறப்பையகற்ற முடிவிலவரும் இறைவனுருவாகிய "ஸத்குருவினால்" உண்மையேயாகவும் எடுத்தாளப்படும். இவ்வாறுலகமனைத்துமுய்யவேண்டியே உம்பர்பிரான் உண்மையாகமங்களை யுரைத்தருளினர். ஆயினதிகாரிகளின்றோனா எடுத்தோதவில்லையோவெனின்பிறப்பைக்காரணமாக வெடுத்தெங்குங் கழறியதில்லைகண்டீர். எத்துணைப் பாவமியற்றி வருந்தியிருப்பினும் "பஸ்சாத்தாபம்" (பின்னுருகுதல்-Repentence) கொண்டு, தன்னகங்குழைந்து, தனிமுதலைத்தேடினோர் அதிகாரிகளாவார், பூததையுள்ளோரே யிதற்கதிகாரிகள்என்று கூறப்பட்டிருக்கின்றது. கிறிஸ்துநாதன் பரிசேயர்கள் (Pharisees) முதலிய வெளிவேடத்தாரைக் கடிந்து, எப்படிப்பட்ட பாதகியாயினுமகங்குழைந்தழுவாராயினவரையுமேற்றருள்தரித்ததுபோன்று சைவாகமும் "ஸம்ஸாரஸாகரவிபாகஜ்ஞ" (டம்பாசாரங்கடிந்தவனும்) நிஷ்ப்ரபஞ்ச விஹீநஸ்ய" பொய்ஞானம் விண்டவனும்) "யதிம்ஷி த்வேஷஸேவ

ஸங்க்ருதம் வா யதீ³ஷ்டதம் । தத்ஸர்வம் க்ஷந்த்ருதாம் தே³வ வரிவஸ்ய ப்ரு ணம் தத³ஸ்து தே ॥” “பிழைத்தவெல்லாம் பொறுத்தருள்செய் பெரியோய்” என்று அகங்குழைந்து அழைத்தலறிநிற்பின் சிவதர் மத்திற்கதிகாரி என்று வேதம்வியந்துகூறும். அந்தியஜனாயினும் அதமனாயினும் பாவத்திற்குப் பஸ்சாத்தாபம் பொருந்தினவனாயின் அதிகாரியென்று வாயுசங்கிதைவழங்கும். இதனாற் பெறப்பட்டது யாதெனின் யாவருஞ்சைவராகலாம் யாமெல்லோருந் தோஷமுடை யோமே. தோஷமில்லாதவர் யாவருமின்று. இவ்வுண்மை “சதாசிவா திகளுந் தோஷமுடையவர்களே” என்ற “ஸதா³ஶிவா த்³ய ஸர்வே ப்ரதிக்ருத்யா வ்யாப்ருதா: ப்ரதிக்ருத்யா ஸர்வவிராமா ப்ராணா தோ³ஷாஸ்ஸர்வே வ்யாஸக்தா: ॥” எனவரும் வாக்கியம்நி றுத்தும். இறைவனொருவனே என்றுஞ்சுத்தன் :—

“ த்ராதீ ஹ்யேஷ ஸர்வோத்க்ருஷ்ட: ஸர்வாத்மா ஸர்வக: ।
ஸத்யம் தவாஶிவஸ்ய தஸ்ய ஸதா ஸ்வாபம் ஶிவஸ்ய ஸ்ம்ருதே ॥”

என்ற வாக்கியம் பிறந்தது. அஞ்ஞானம் பழுத்தொழுகி மலப்பிணிப் புண்ட சாம்பிரமங்கள் கூடி நாம்பிரமமெனத்தருக்கி யவஞானம் பேசு வதும், மலமுதிர்தசதும்புமுடலைச் சுமந்தவெர்மனோரிற்சிலர் கல்விச் செறுக்கு, பணச்செறுக்கு, ஜாதிசசெறுக்கு, உததியோகசசெறுக்கு முதலியவைகளைக்கொண்டு யாம்பெரியாரென்று செறுக்குவதுமெற்று க்கோ. “குற்றமே பெரிதுடையேம்” என்றார்குணமெனுங்குன்றேறிய கொற்றவரும். ஆகலின் எத்துணைப் பாவியாயினு மவனையுமாதரித் துப் பாவிப்பஸ்சாத்தாபம் போதித்துப் பரமனுக்காட்படுத்துதலே பண்புடையார் பரிசு. இவன் மாபாவி இவன்கூட்டுறவு கொடிதென் றும், இவள் பெரியவிபசாரி இவளுடனுரையாடலாகாதென்றும் தரு க்குவதெல்லாம் பசுநூற்கொள்கைகள். கண்டவுடன் சீற்றங்கொள் வதுபசுக்களியற்கை. “ஶிவஸ்ய ப்ருஷ்டாணாம் த்வஸாநாத்வஶிவ ஸ்யாத்” என்றவசனத்தால் பேரிரக்கங்கொண்டு எம்மனோர்க்கருளுங் குணமுடைத்தாதலேக்கியே எம்மிறைவனுஞ் சிவனெனப்படின், சிவனைச் சார்ந்து சைவராகும்யாமும் அவ்விரக்கங்கொண்டருள் வழி பற்றி அருளுங் குணமுடைத்தாலன்றிச் சைவராகோம். ஆகவே' எவ்வகைப் பாவிகளையுங் கடிந்தொதுக்காமற் சைவராக்கவேண்டி யது சைவர்கடமை; அப்படியே எல்லோரும் சைவராகலாம். ஆனால்

சைவரான பிறகு நடைகோணுவது மொழுக்கங் குன்றுவதுங் கொடிது. மதுபானம் புரிவது மகாகொடிது. மதுபானம் புரிப வர்க்குக் கடவுள் கொடுத்த அற்புத ஆநந்த வுலகம் பொய்த்து மது செய்த வுலகம் மெய்த்தும் விடும். ஆதலின் அது கொடிது. அதி லுங்கொடிது உயிர்செகுத்துண்ணல். இவைகளை யறவே யொழித்தா லன்றிச் சைவராதல் முடியாது. சைதன்னியரெனும் தன்னியர் இனிய கானங் கொண்டுக் கடைவழிசென்றபோது கயவர், களவர், கடியர், வெறியர், கள்ளுண்டோர், காமங்கொண்டோர், வேசிகள், எல்லோ ருமோடோடிக் கண்ணீர்சொரியக் காதாளம்போட்டுக் கனிந்தவரு டன் குழுமிக்கூத்தாடினர் என்று கேட்டோம். ஆ! என்ன ஆநந்தம்! சதுரிழந்தார் சாதுக்களானார். ஆனாலன்பாய்த்திரிந்த வன்னார்மீண்டுங் கோணலைக் காணாராயினர். ஆகையாலுய்யவேண்டினோர்உயிர்செகுத் துண்ணுமையைக் கொள்ளவேண்டும். எவ்வுயிர்க்கும் அபயப்பிரதானம் செய்வதைத்தவிர வேறுதானம் கிடையாது மதுமாம்ச விவர்ஜனம் சைவர்கட்கின்றியமையாதன. அந்தோ! மேற்றிசையிலுள்ளாரும் அவ ரைப பின்பற்றிய கீழ்நாட்டாரும் தெய்வஸம்பத் ஆத்துமஸம்பத் தின்றி நன்மைகள்போற்றீமைகளையும், அறிவுபோலறியாமைகளை யுமியற்றுவதைக் கணணுறும்போது எந்நெஞ்சம் பதைபதைத் தந்தோவெனப் புண்ணுறாத போது கிடையாது. உதாரணமாக கொலைக்களம் (Slaughter house) குடித்துறைகள் (Liquor shops) முதலியவைகள் எங்கும் பரவிநின்றன. கப்பற்றுறைகளிலும் ரயில்ஸ்டேஷனகளிலும் சூடிக்கக்கூவியழைக்கும் போர்டுகளையும் பல் லுயிர்செகுத்து விருந்திறகு விரும்பி யழைக்கும் விளம்பரங்களையுங் கண்ணுறும்போ தெம்மனம் வெந்துகிடக்கும். "அந்தோ! உலக மடங்கலும் முணமையுணர்ந்து அன்பை வளர்த்து, அளவளாவி அருளை நாடி நிற்குமோ, அக்கால மெக்காலமோ, கடவுளின் குழந்தைகளுட் கலகமொழியுமோ, கபடங்கள் நீங்குமோ, வருத்தந்தணியுமோ, பிணிகள்பாறுமோ, அங்குமன்பும், இங்கு மன்பும், எங்குமன்புமாய் என்று தழைக்குமோ" என ஏங்குவேம் புன்மதம் பேசிக் புலப்பு மொழிகேட்போமாயின் "அந்தோ! இறையையுற்று நிறையன்பில்லா வாழ்வுமொருவாழ்வா? இறையன்பிறகுதவாத ஞானமுமொரு ஞானமா? இறையன்பிற் கிணங்காத கிரியையு மொருகிரியையா? "இறைவன் கழலேத்து மினபமின்பமே" "சிறறம்பலமேய செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே" என்பேம். மற்றையின்பத்திற்கும் செல்வத்திற்கும் உலகர் படும்பாடு என்னென்பேம். தற்காலம் வெகு

சிலர் தவிர மறைறையோர் கண்டதேதகாக்ஷி கொண்டதே கோலம் என்று செம்மறிகளையொத்துச செததுவீழ்கின்றனர். படித்தவர்க ளிவ்வாறு பணததிறகு மிநதிரிய வினபததிற்குமே மாண்டு மண்ணு வதைக் காண்டொறுங் "கல்லாதவரே நலலவாகள் நல்லவாகள் கறறு மறிவிலாப பேதைகளுக் கென்சொலலுவேன்" என்று இரங்கிய நந்தாயுமான பிரபுவின் திருவாக்குமனதிறபடும். மிருகபபிராயாக ளாயுள்ள கல்வியில்லாப பெணடிருடன் கறறறிவுடைய ஆடவாக ளாகியயாம் படிநதுன்பம மலைபோனிறகவும, கறறறிவுடையாடவர் களு மிபபடி அருள்ஞான மில்லாது அவஞானம பேசியும, அருளை மறநதும் திறபி னக்கோலமெவர்கள மனதைததான் புணணுககாது. இறைவன் கழலேததுத மிசைசங்க கலவியை ஆண்பாலா, பெண்பால ரிருவாகளும கற்று அருளை நாடாதவமையில உலகததில் துனப மொழியாது. இவ்வெண்ணங்கள் எமமனதிறபடவே யாமபடட துயாமினைத்தெனச் சொலலமுடியாது. ஒருபெரும பூமபொழிலைப போன்ற இபபுவனமானது முடகளமூண்ட பாலைவனமாயிறறே என்று எநநெஞ்சமநொநதது. ஆறுதலும பூர்ணசநதிரன்பால மாரி பொழிநது தனது வெண்கிரணஙகளை வீசிவிசிறிநின்று வானையும பூமியையுமொரே யானநத வெள்ளததமிழ்த்தியதைக கண்டறும ஒருவாறெமமனந்தேறி "பெற்றதாய் ஒருத்தியிருக்கப் பிள்ளைக்குத் துயரேன்" என எம்மனத்துயாமாறியது. ஓர்பக்கநதுயருமோர்பககங் களிப்புங்கொண்ட வக்கணம முதல்வனையுறறு "ஐயனே யருள் பெருகுமா றருளுதி - அன்பே யோஙகுமா றுன்னுக - கருணையே யுன்னைக் காணுமாறருளுதி - அன்னாய் என்னை நின்மடிமீதிருத்தி - உயிர்க்குறு துணைவ உலகனைததும் முன்வயமே வாப்புரிவாய் ஒப்பிலா வொருவ ஓலமிதை கேடடருளுதி அருளே! அன்பே! இன்பே!" எனவுடல் குழைநது தலைதாழததி மனததால முதலவன குஞ்சித பதத்தை யிறுகத்தழுவி, முததமிடடு, கண்மலர்சாத்தி, கறறுவின் மனம்போலக் கசிநதுருக அருள்புரிக என்று மனநெக்கி அவனருள் வழிநின்றேம்.

அன்றிரவுமுதல் எலலாச செமமை நலங்களுக்கு முறைவிட மாகிய சைவாகமங்களின் மாட்சியை யுலகின ருணர்நதுய்யுமா றுப கரிக்க வேண்டுமெனு மடங்காவாசை எமமிதயததிற குடிகொண் டது. சைவாகமங்களின் பெருமையைத திருவருட்டோன்றல்களாகிய "ஞானஸம்பந்தாதி நம்பரமாசாரியார் நால்வர்களுங் குறிப்பாலுய்த் துணா வைத்தருளினர். உண்மை பாஷியக்காராாகிய ஸ்ரீ கண்ட

யோகீந்திர ரிவ்வாகமங்களின் பெருமைகளை மிக்கமகிழ்ந்து போற்றினர். அண்ணலாகமங்களி னருமையை யருணலமுணர்ந்த அரதத்த மூர்த்திகள் அவனியோரறியுமா றகமகிழ்ந்தருளினர். புன்னெறியாளர் பொறாமையுடன் பொறித்த தூடணங்களை நிர்மூலப்படுத்திய ஸ்ரீமத் - அப்பயதீக்ஷிதர் பெம்மானருளிய பெரியவாகமங்களின் பெற்றியை பேரன்பிற்பரிந்து கொண்டாடினர். மற்றும் "பிரம்மவித்யாதீர்த்திரர்" "நிஜகுண யோகீந்திரர்" முதலிய புனிதவாசிரியர்களிவைகளின் மாட்சியை மணந்தருளினர். வித்தியாரண்யரு மாகமங்களின் இன் சுவையைப் பருகிவாழ்ந்தனர். வேதவித்யா பாரங்கரிலர்கள் வியந்து கொண்டாடும் மெய்யாகமங்களின் மேன்மையை யுணர்ந்துய்ய வழியறியாத பொல்லாப் பொய்மையாளர் புலம்பிய பொய்யுரைகளைக் கடிந்த ஸ்ரீலஸ்ரீ - சோமசுந்தரநாயகர் அவர்களும், தூர்த்த தூமதவாதிகளின் தூக்கற்ற துருத்திகளைத் துலைத்து நன்மத நறுமணங் கமழுரைகொண்டு வெற்றிக்கொடிநாட்டி இறையருளிப் பற்றிலே யின்பவாழ்வாக்கக் கொண்ட வெம்மெந்திரர்தம்பர் அவர்களும் சிவாகமநிந்தை புரிந்த சிறியோர்களைச் சினந்தும் தண்டம்புரிந்தும் சீர்படுத்தினர். இவ்வா றுலகாசெய்த தவப்பயனுயுண்மையை நிலைநாட்ட வெழுந்த சைவநன்னெறியாளர் நாட்டிய நல்லாகமங்களின் றிறத்தையுணரும் பாக்கிய மடையப்பெற்ற யாமும் சிலகூறுவானெழுந்தமைக்கு வேறோர் காரணமுண்டு. யாம் பிரபன்னகாயத்ரி யென்று வைணவர் கொண்டாடும் "இராமாநுஜ நூற்றந்தாதி" பாடிய "திருவரங்கத்தமுதனார்" எனும் வைணவப்பிரபந்தகர்த்தர் மரபிற்றோன்றியவரேயாம். எமது பிதாமகரும் வைணவப்பற்றும் மாயாவாதஞானமுமொருங்கே கொண்டு கைவல்லிய நவநீதம் ஞானவாசிட்டம் ரிபுகீதை முதலிய நூல்களைக் கனவிலும் மறவார். இராவா வழிவழிவந்த வைணவ வபிமானமு மெம்மைவிட்டதின்று. மாயாவாதமலைவு மெம்மை வாட்டியதுண்டு. வெகுநாள்வரை வேதாந்த தேசிகர் பிரபந்தங்களையும், தென்கலைப் பிரபந்தங்களையுங் கற்றுவந்தே மாயினும் பாரபக்ஷமின்றிப் பல்மதங்களையுஞ் சீர்தூக்கிப் பார்க்கும் பெரும்புண்ணியவசத்தால் சைவநன்னெறியைச் சாரும் பாக்கிய மடைந்தேம்.

யாமாங்கிலங்கற்றத திரிசிரபுரத்திற கிறிஸ்தவர் கலாசாலையிற் பயின்றகாலத்தில் கிறிஸ்து மார்க்கத்தைப் படிக்கநேர்ந்தது. அன்றியுமாங்கில நூல்வல்ல ஹக்ஸ்லி (Huxley) டிண்டல் (Tyndall) ஹ்யூம் (Hume) மில் (Mill) இங்கர்ஸால் (Ingersoll) முதலி

நாத்திகர்களியற்றிய நூற்களையுமதிகம் பாராட்டிவந்தேம். மதவிஷயமாய் எந்தநூலகப்படினும் அவாவுடனூணுறக்கம் விட்டு வாசிப்பதெம்மியற்கை. திருவருட்பாங்கவ்வழியிலேயே செலுத்தியது. இன்றும் சமாசாரப்பத்திரிகைகளை வாசிக்கும்போது நாட்டு விஷயம் மோட்டு விஷயமாதிகளை யொதுக்கி மதவிஷயங்களேதாவது காணப்படின் அதையே படிப்பேம். அந்தக் காலத்தில் எமக்கு சைவசமய மின்னதென்னவும், சைவ நூற்களிவை யெனவுந்தெரியாது. F. A. கிளாஸில் படித்து வந்தபோது மதவிஷயங்களிலதிக வூக்கங்கொண்டு யாம் படிப்பதையும் பலசந்தேகங்களைக்கொண்டு மனந்தளர்ந்து முகம்வாடி வருந்துவதையும் அடிக்கடி கண்ணுற்ற எமது நண்பரொருவர் "அன்பரே மலைக்கோவில்நூற்றுக்கால் மண்டபத்தில் ஒருவர் மிகவுந் தார்க்கிக நெறிமுறைப்படி நியாயம் பிறழாது வெகு அருமையாய்ப் பிரசங்கம் செய்கிறார்; நாம் போய்க் கேழ்ப்போம்" என்றுசாவினர் அப்பிரசங்கியார் யாவரெனின் எம்மைப் போற்பலரையு மீடேற்றுமாறுவந்த ஸ்ரீலஸ்ரீ - ஸோமசுந்தரநாயகர் எனும் பெருந்தகையாரே அன்று அவருணலங்கொண்டு பிரசங்கித்ததும் "திரிபதார்த்தம்" எனும் பெரியவிஷயமாம். அவரது பிரஸங்கத்தின் காம்பீர்யத்தையும், மாதுர்யத்தையும், அன்பையும், முன்பின் முரணின்றி நியாயநெறிப்படி மதிநுட்பத்துடன் பிரஸங்கித்த வன்மையையுங் கேட்டது தான் யான் சைவத்தைப்பற்றி முதன் முதலில் கேட்டதாகும். அப்பெரியவருடன் பழகாத பக்ஷத்தில் நாத்திகனாயிருப்பேனோ, அன்றிக் கிறிஸ்தவராயிருப்பேனோ, அன்றி மாயாவாத மருட்டலைக்கேறி சாதியபிமானங்கொண்டு சதுரிழப்பேனோ, அல்லது ஒன்றினும் படாதுண்பதுமுறங்குவதுமாயிருந்து காலங்கழிப்பேனோ தெரியாது. அப்பெருமானுடன் மூன்று நாளவரை யிடைவிடாதண்டிப் பல கேள்விகளை நாத்திகரீதியாகவும், வைணவரீதியாகவும், மாயாவாதரீதியாகவுமவரைக் கேட்டேம். குழந்தைகளிடமன்பு பாராட்டுவதுபோல எம்பாலன்புகூர்ந்து எல்லாவற்றிற்குந் தகுந்த விடையளித்துத் தாமியற்றிய "ஆபாஸஞான நிரோத" முதலிய நூற்களடங்கிய ஒரு தொகுப்பை (Set) எனக்குதவித் தோன்றுஞ் சந்தேக மனைத்தையுங் குறித்து அடிக்கடி எழுதியனுப்புமாறு கட்டளையிட்டனர். பிறகு யாமடைந்த பேறுகளை யிங்கு விரிக்கவேண்டியதில்லை. சைவசித்தாந்தமே மெய்யத்துவிதமென மெய்யும் புளகமாக யாமுணர்ந்தனுபவிப்பது முழுமையும் அப்பெருமானாற்றான்.

இனி யிவைகளுபநிடதங்களிற் பெறப்பட்டதோ வென விசாரிக்கவேண்டியதாயிற்று. சூத்திரர் புனைந்த பிரமாணமற்ற புதுமதமென்றார் பல பிராமணர். வேறுசிலரிதை வேதபாஹ்ய மென்றார். பாஷ்யாதாரமற்ற மதமென்றார் வேறுசிலர். அக்காலத்திற்றான் ஸ்ரீமத். அப்பய தீக்ஷிதமூர்த்திகளருளிய சிவதத்வ விவேகம், பிரும்ம தர்க்கஸ்தவம் முதலிய நூற்களையான் படிக்க நேர்ந்தது. சிதம்பரம் பிரம்ம வித்தியா பத்திராதிபராயிருந்த ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரிடமிருந்து அந்நூற்க ளெனக்குக் கிடைத்தன. உபப்பிரும்மணங்களி னேற்றத்தை யது முதலாகத் தான் யானுணர நேர்ந்தது. சங்கரருள்பட மற்றைய பாடியக்காரர்க ளெல்லாரும் தவறிப்போய் தாறுமாறாய்ப் பிதற்றிய பொய்யுரைகளென் மனத்திற்பட்டது. இப்பாடியக்காரர்களுக்கு முந்திய இலிங்க கூர்ம ஸ்காந்த சைவாதிபுராணங்களில் உபநிடத வுண்மைகள் விளங்கக்கிடந்தமை யெனக்குத் தோன்றியது. ஸ்ரீகண்டரென வொருவர் பிரமஸூத்திரங்கட்குப் பாஷிய மியற்றி யிருக்கிறாரெனக் கேட்டேனேயன்றி அப்படியொரு பாஷிய மிருப்பதாகக் கண்டதில்லை. ஒருவாறு பிரமாணங்களினாதாரங் கொண்டு "சிவோத்கர்ஷம்" பலபட்டதேயன்றி சைவ சித்தாந்த விஷயங்கள் உபநிஷத்துக்களிற் பெறப்பட்டிருக்கும் விஷயமாராயவேண்டியிருந்தது. இப்படிச் சிலநாளிருக்கையில் ஸ்ரீ ஹரதத்தாசாரிய மூர்த்திகளுடைய "சுருதிசூக்திமாலை" யொன்று "சிவலிங்க பூபதிகள்" வியாக்கியானத்துடன் கிடைத்தது. அதற்குப் பிரதியொன்று யாமெழுதி வைத்துக்கொண்டு சிவதத்வவிவேகத்துடன் ஒத்துப்பார்க்கும்போது ஸ்ரீ ஹரதத்தா ஆண்ட கக்ஷிகளையே ஸ்ரீமதப்பயதீக்ஷிதர் பெருமானெடுத்தாண்டமை வெளியாயிற்று. திரிபதார்த்த வுண்மையும் வேதசம்மத மென்பதை நன்றாய்த் தெரிந்து கொண்டேம். இச்சந்தர்ப்பத்தில் மன்னார்குடி இராஜு சாஸ்திரிகளவர்களுடைய நல்லபிப்பிராயத்துடன் "முத்துசிவத விஜர்" என்பார் கிரந்தலிபியில் வெளியிட்ட ஸ்ரீகண்டபாஷ்யமு மெமக்குக் கிடைத்தது. சைவம் உபநிஷத்துக்களிற் பெறப்பட்ட தென்பதை யாமுணரவே உபநிஷத்துக்களை மற்றுமொருமுறை யத்தியயனஞ் செய்யத்தொடங்கினேம். அதன்பிறகு சங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலியவருரைத்த பாஷ்யங்களையும், ஸ்ரீகண்ட யோகிகளின் பாஷ்யங்களையும் உபப்பிரும்மணங்கட்கிணங்க கூர்ந்து யோஜிக்கவே, சிலபாடியக்காரர்கள் செய்த சூழ்ச்சிகள் வெட்டவெளியாயின. உபநிஷத்துக்களில் நிர்க்குணப்பிரமம் சகுணப் பிரமமென்பவைகளின் பிரஸ்தாபமே கிடைக்கவில்லை யென்

றும், ஜகன்மித்தை, ஜீவன்மித்தை, ஈஸ்வரன்மித்தை யென்பவைகள மிகைத்ததில்லை யென்றும், மாயையிற்றளையுண்ட ஈஸ்வரன் கிடையாதென்றும், அநீசுவரர்களாகிய பிருமம விஷ்ணு ருத்ராதிபசுக்கள ஈச்வரரல்லரென்றும், ஸத்தியமாயுரைத்தேம். வேதபாஹ்யமதம "பிரச்சன்ன பௌத்தமே" யன்றி சைவம் வேதமய மென்பதையுங் கண்டேம். இவ்வாறு யாமாராய்ச்சி செய்துகொண்டு வருகையில காசிவாசி - செந்திநாதையர் அவர்கள் "விஜயத்வஜம்" என்னும பத்திரிகையில் உபநிஷத்திற்குச் சிறியார் செய்தபொய்யுரைகளை யெல்லாம் வெட்டவெளி யாக்கினமை யெமக்குக் கிட்டியது. அதற்கு மறுப்புப்போல பிருமவித்யா வென்னும் பத்திரிகையிலெழுதப்பட்டதும் எமக்குக் கிட்டின. நாகை நீலலோசனி, விவேகதிவாகரன்முதலிய பத்திரிகைகளிலும் பிருமம வித்தியா பத்திரிகைகளிலும் சைவமாயாவாதசாக்ஷிகள வெகுவாய் வந்தன. இரண்டையும் பாரபக்ஷமின்றிச் சீர்தூக்கின காலையில வெற்றுரைகளனைத்தையும் வெறுத்துச் சைவ விஷயமே சான்றெனக்கண்டேம். யுக்திவாதமாக மாயாவாத மதத்தை மறுத்துயாமெழுதிய பகுதிகளுமுண்டு எமக்கிவ் விஷயத்தில ஸ்ரீ செந்திநாதையர் அவர்களுடைய திவ்யோக்திகள் செய்த வுபகாரமெம்மாற் சொல்லுந் தகைமைத்தன்று. ஈச, கேந, கட, பிரச்ன, முண்டக, மாண்டூக்கிய, தைத்திரீய ஐதரேய, சாந்தோக்கிய, பிருகதாரண்ணிய, சுவேதாசுவதர, ஜாபால, அதர்வசிரஸ், அதர்வசிகை, கௌஷீதகி, மைத்ராயண்யாதி முக்கியோபநிடதங்களிற் சைவவுண்மையே வெளிப்பட்டதன்றி வேறெதுவும் பெறப்படவில்லை யென்று நன்றாய்த் தெரிந்துகொண்டு ஸ்ரீகண்டர், ஹரதத்தர், ஸ்ரீமத் - அப்பயதீக்ஷிதர், முதலியவர்களின் நூலைகொண்டு "உபநிஷத்" விஷயமாக எமதாராய்ச்சியை யொருவாறு எழுதிவைத்ததுண்டு. ஒருமந்திரத்திலோ பாதி சகுணப்பிரம விஷயமென்றும், மற்றோர் பாதி நிர்க்குண பிரமவிஷயமென்றும் எந்தவாதாரங்கொண்டு பிரிப்பது? சகுணப் பிரம விஷயங்களென்பவை முன்னும், நிர்க்குணப் பிரம விஷயங்களென்பவை பின்னும் வந்திருந்தாலும் முந்தியது பூர்வபக்ஷம்; பிந்தியது சித்தாந்தமெனக் கொள்ளலாம். முன்னும் பின்னும் பின்னும் முன்னுமாகக் கிளம்பிய வசன சமூகங்களிற் கொஞ்சமும் நியாயமின்றி எவ்வாறப்படிக் கொள்வது? ஓரே பரவஸ்துவைக் குறித்து "அபஹதபாப்மா" முதலிய தர்மங்கள் சொல்லப்பட்டதுபோல "சத்தியகாம சத்தியஸங்கல்பாதிகளும்" விரிக்கப்பட்டதுண்மை. "இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுப

பிரம்மயேத்" என்ற வாக்கியத்தின்படி இதிஹாஸ புராணங்களின்
மூலமாக உபநிஷத்துக்களின் அர்த்தஞ் செய்யப்படல் வேண்டுமென்று விதி
யிருக்கப் பித்தந் தலைக்கேறிப் பித்துரை பகர்வதெல்லாம் பாஷ்யமா
மோ? இராமானுஜர் விஷயமாக தீக்ஷிதர் பெருமானுபயோகித்தடிக்
கடிக் கூறிய வசனங்களான "ஸிம்ஹ ஹ்ருதய ஸ்ருதி காக ஜெகோஜோ
உபவேத்ரு ஹரிஷ்ட்ருதி" "வைபாஹ்யதீர்த்தவை காசு க்ருபாகரிஷ்டிபோஹ்ரு வே
த்ரு ஹணீ" யுக்திவாதத்தைக்காட்டிலும் உபப்பிருமமணம் பலமு
டைத்து "ஜைஷிஷி நிதுஸ்ரிதே க கவிதாஸா காஸ்ரா ஹா க்நாஹ்"
ரிஷிகள் ஏற்கனவே நிச்சயத்திருக்கப் பெரியார்களையமேன்" என்
பனவைகளைச் சங்கர பாஷ்யவிஷயத்திலுமுபயோகிக்கவேண்டியதா
யிற்று. அவர் பண்ணிய கிலுஷ்டகல்பனைகளும் ஒவ்வாவுரைகளும்,
முன்பின் முரண்களும் எமக்குச் செம்மையாய்த் தோன்றின.
மூலோபப்பிருமமணங்களையும் வரவழைத்துச் சோதிக்கும்போது யான்
கொண்ட வபிப்பிராயங்கள் வேரூன்றின. எம்மை யீடேற்றவன்றோ
கடவுளைப்பற்றிய விசாரணை. அப்படியொரு கடவுளுண்டென்று
கூறியு மக்கடவுளும் பொய்மைபோல மாண்டுவருகின்றதென்றும், அது
வும் பலபந்தங்க ளடைந்ததனவென்றுங் கூறுவதாயினது ஈச்வரநிந்
தையல்லவா? உபநிஷத்துகளில் அத்துவாக்களைக் கடந்த அம்பலத்
தானே பரனென்றுணர்த்தியதையும், அவன், உமை, தேவாக்மசக்தி,
ஆகாசம் பரவியோமம் முதலிய பெயர்களா லழைக்கப்பட்ட மாது
மணாளன் என்பதையும் பார்த்துத் தேர்ந்தேம். கிழிட்ட 24-தத்து
வங்கள் பேசப்பட்டபடியே மேலிட்ட சாலநியதியாதித் தத்துவங்க
ளும் சாதாக்கியாதித் தத்துவங்களுமுண்டென உபப்பிரமமணவாதா
ரங் கொண்டு தெரிந்தேம். எம்மைப் பெற்றெடுத்த பேரன்னையே
தத்துவதாத்துவிகங்களிற் கலந்து ஸம்ஸாரதிசையிற் றிரோதாயியாக
மறைந்து மறக்கருணை புரிவதையும் இருவினையொப்பு மலபரிபாக
முற்றகாலத்தி லவளே சற்குருவாகி ஸம்ஸ்காரஞ்செய்து அறக்கருணை
புரிவதையு முணர்ந்தேம். சைவத்திலேயே மகாவாக்கியங்கள்
சாமான்ய வாக்கியங்களாகாது மகாவாக்கியங்களாயினமைகண்டு மகி
ழ்ந்தேம். முன்னிலைச் சுட்டொழிந்து முன்னேனிலென்னை யிழந்
தின்பநுகர்வதன்றி முனைத்துத் தோன்றுவது பந்தமென்றுணர்ந்
தேம். பிரபஞ்சப் பலவிளையாட்டயர்ந்த பாலன், பேரின்பப்பசியுற்ற
காலையிற் பாதம்பற்றி அம்மே அப்பா வெனும்போது கண்ணே
யென்று கையாலெடுத்துத் "தம்மிருவர்க்கு மிடையிலிருத்தி யின்ப

முண்டுவோ" என்றமையே பேறெனப் பெற்றேம். இன்பநிகழ்த்து விதமே யினிய பிருகதாரணிய மொழிந்தமைகண்டு மகிழ்ந்தேம். உபநிஷத்தும் பிரமசூத்திரமும் சைவமணத்தையே கொண்டு கமழ்ந்ததை நுகர்ந்தேம்.

எல்லோருங் கண்டு களிக்குமாறுணர்த்துங் குறிகளான கோயில்களும் திருவுருவங்களு மெய்வுண்மையை விளக்குவன என்ற வுண்மைகளையும் ஆராய்வித்தப் முயற்சியாயிற்று. பன்னூல்களும் பகர்ந்த சைவசித்தாந்தப்பண்பையேயிவைகளும் போற்றினமையைப் பார்த்தேம் அன்றே வுத்தமாகட்கட்பட்டு சைவநெறியே யுய்யு நெறியெனப் படிந்தேம் மெய்கண்டான் வழியே மெய், மெய், மெய், மற்றைப் பொய்கண்டார் புதித்த பொய்வழிகள் பொய், பொய், பொய், பொய்யே யெனவின்றேம். மேற்றிசையார்களி லன்பு மறிவுங்கொண்டு பொய்களனைத்தையும் போக்கி, மெய்யிது வெனத் தேர்ந்தமையுஞ் சைவாகமவே யிருப்பதை யாமுணருமபோது யானடைந்தவின்ப மிவ்வளவென்று சொல்லமுடியாது "பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா" "இராஜாங்கத்தி லமர்ந்தது வைதிக சைவ மழகிதந்தோ" என்ற தாயுமான பிரபுவின் றெய்வ வாக்கின் றன்மைதெரிந்தேம் யாகவழி மோகவழி போக்கி, யோக வழி ஞானவழி பற்றினேம். யாம் கஷ்டப்பட்டுக் கனிவடைந்த காரணத்தால் எஞ்சகோதரர்களாகிய என்றவெல்லாமாந்தர்களுமிதை யடையட்டுமென்று "புசிப்பதற்குச் சேர்வாருஞ் சகத்தீரே" என்ற படிச் சிலசொல்ல வெண்ணினேம். தூத்துக்குடிச் சைவசித்தாந்த நண்பர்களென்னைப் பொருட்படுத்தி யழைத்தபோது "சைவாகமபிராமாண்யம்" எனு மிவ்வுபந்நியாஸத்தையே விரோதிகிருதுவருடமார்கழிமீ 3௨ (18-12-911) ஸோமவாரத்தன்று மசிற்றறிவிற் கெட்டியவரையி லொருவாறெடுத்துரைப்பேமாயினேம்.

சைவாகமப் பிராமாண்ய மெனுமிக் கிரந்தத்தில் சைவாகமங்கள் பிரமாணங்களென்பதற்குரிய வைகளையே முக்கியமாய் எடுத்துரைக்க நேர்ந்தது. [சிவாகமங்களிற் பெறப்படும், முப்பொருளுண்மை, நாற்பதவிளக்கம், ஐந்தொழிலியல்பு, அத்துவிதவுண்மை, அத்துவா சோதனை, அவத்தைகளிலக்கணம், தசகாரியம், தீக்ஷைகளின்றிறம், முதலிய பலவிஷயங்களும் மிகுந்த பேரொலிமுழங்கும் மஹாசமுத்திரம்போன்று கிடக்கின்றமையால் விரிவஞ்சி சைவாகமப் பிரமாணம் மென்பதற்கு எவ்வளவுவேண்டுமோ அவ்வளவு வரையிவைகளை யிதிலெடுத்தாண்டு விரிக்காது விட்டேம். இன்னசிலகாரணத்தால்

வேதநூற் பிரமாணத்தை யொப்பினோர்க்கேயிஃது மிக்கபயனை விளைக்கும். முன்னரே யாங்கூறியவாறு சைவாகமங்களிற் பெறப்படும் விஷயம் மெய்ச்சமயத்தார்களுக்கும் மூலமாய் நின்ற மெய்ம்மையையே கொண்டதாகையால், சமயநோக்கத்துடன் இதனையெடுத்துரைக்கவெண்ணியுள்ளேம். இதுவரையிலும் அவ்வுண்மைகளை யொருவாறாங்கில முணர்ந்தார்களறியுமாறு ஆங்கிலத்திலுஞ் சிலவெழுதியுள்ளேம். யாமாங்கிலப்படிப்பிற் சிறிது தூரஞ்சென்றவளவிலெமக்குண்டாகிய வையநிகழ்ச்சிகளே யெம்மைப் போன்ற வாங்கிலங்கற்றார்க்கு முண்டாயிருக்குமென்றெண்ணியே பெரும்பாலு மாங்கிலத்திலுரைக்கப் புகுந்தேம். "நலமிதொன்றுடைத்தற் கிடையூறுநாதனைப் பலவுளவன்றே" என்றார் பெரியார். இடம், பொருள், ஏவல் முதலியவைகளெம்பா லமைந்திராத காரணத்தாற் போலும், சைவவுண்மையை வெளியிட யாங்கொண்ட வெண்ணம் நிறைவேறவில்லை. என்றாலும் மனந்தளராது "முயற்சியினை வாராதுறுதிகளுளவோ" என்ற பட்டினத்தடிகள் வாக்கைக் கடைப்பிடித்து முயன்றேம்.

யாமிதுகாறு மெழுதியவைகளில் ஆங்கிலத்தில் (1) The Inner Meaning of Siva-Linga (சிவலிங்க விளக்கம்) (2) The Theory of God (இறையையுற்றவுரை) (3) The Rationale of Symbolic-Worship (திருக்கோயிற் றிருவுருவாதிகளினுள்ளுரை விளக்கம்) (4) The Ways of Sanctification or the Esoteric significance of the Four Paths (நாற்பதங்களினுட் பொருட்குறிப்பு) (5) The Satguru-darsana (ஸத்குருதரிசனம்) (6) The Malatrayas (மலத்திரயம்) (7) Samsara Chakra or the Wheel of Progress என்பவைகளும்; திராவிடத்தில் (1) வைதிகசைவப்பிரபாவம், (2) சைவாகமப்பிராமாண்யம் (3) மலத்திரயம் (4) ஸித்தாந்தசைவமென்பவைகளுமாம். இவைகளித் தக்ஷிணதேசத்திற் கூடிய சைவமகாஸமாஜங்களிலும், ஆங்காங்குள்ள அங்கசபைகளிலுமெம்மாற் பிரசங்கிக்கப்பட்டன. பிரயாகை (அலகபாத்) யில் நடந்த விரண்டாவது "ஸர்வமதமகாஸபைக்கெம்மைச் சைவத்திற்குப் பிரதிநிதியாகச் சைவஸமாஜத்தார் அனுப்பியபோது ஆங்கிலத்தில் "Symbolism—a Study of its Rationale" எனும் விஷயத்தை யொருவாறு சுருக்கிக் கூறினேம். இவை எஞ்சிற்றறிவுக்கெட்டியவரையில் "புறச்சமயிகளுநன்றி விசாரிக்காத காரணத்தால் நஞ்சமயத்தின்மீது பொறித்ததுருக்திகளைத் துலக்கி யுண்மைகளெவ்வாறையமறப் பிறருக்குப்போதிக்கப்

படவேண்டுமோ அவ்வாறு தகுந்த பிரமாணங்களுடன் எடுத்துரைக்கப்பட்டவைகள். கல்கத்தா ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்தானத்தை மிக்க தண்மையுடன் வகித்துக்கீர்த்திபெற்றவரும், இப்போதும், தேசத்திற்கும், மதத்திற்கும், விடாதுழைத்துவரும் வீர தீர சிகாமணியாயிவ்விந்தியாவிற்கோர் இரத்தினமாகிய "ஸாரதாசரணமித்திரா" சிறியேம் பிரயாகையிலுரைத்த விஷயத்தை "The Best Essay on Hinduism" "ஹிந்துமத விஷயத்திலெழுதிய பலவியாஸங்களிலுத்தமமானது" என்று கௌரவித்தார்கள். மீண்டும் அவர் எமக்கன்புடன் வரைந்த நிருபத்திலும் பின் வருமாறுரைக்கின்றார்:—

85, Grey Street,
CALCUTTA, 20th MAY, 1912.

Dear Rangaswami,

Many thanks for your letter of the 11th May. Your thesis was really interesting and almost new of its kind so far as North India was concerned. You will do a service to the Hindu Religion if you explain the meaning of the symbols of our religion and so far as I am concerned I shall help you with all my heart

Yours sincerely,
(Sd.) SARADACHARN MITRA.

"(பிரயாகையில்) நும்மால் படிக்கப்பட்ட விஷயமுண்மையில் குதூகலத்தை யுண்டாக்கிற்று. வடவிந்தியா சம்பந்தப்பட்டவரை இதுவேறக்குறைய மிக்கபுதிதாகும் நஞ்சமயத்திலுள்ள விக்கிரகாதிகளினுள்ளுரையை மிக்கவிளக்கினீர் ஹிந்து மதத்திற்கே யுழைத்ததாகும் என்னைப் பொறுத்தமட்டில், என்னிருதயபூர்வமாக யானிதற்குதவிபுரிகின்றேன்" எனவெழுதியுள்ளார்.

மேற்கண்ட விஷயங்கள் முக்கியமாய் வெளிப்படுத்தத்தக்கவை என்பதற்குச் சீமையிலிருந்து, ஆரியமதப் பண்டைநாட் பரிசுக்குப் பரிந்தெழுதும் புண்ணியவானாகிய புகழ்பெற்ற ஆநந்த. கே. குமாரசுவாமி என்பாரும் பின்வருமாறெழுதுகின்றார்:—

2-6-12. 39, Brook field, West Hill, High Gate, N.

Dear Sir,

I am very glad to hear of your intention to publish a work on the Iconography of Indian Art. It is very

much needed * * * You could send a paper on the subject to the Royal Asiatic Society or the Indian antiquary I hope to hear from you about the work and wish you every success.

Yours sincerely,

(Sd ) ANANDA K. COOMARASWAMY.

"விக்கிரகங்களினுள் ஞரையைப்பற்றிய புஸ்தகமொன்று வெளியிடப் போகிறதாகக்கேட்டு மகிழ்ந்தேன். அஃது மிகவும் வேண்டற்பாலதொன்று........ராயல் ஏஷியாடிக் ஸொஸைடிக்காவது, இண்டியன் ஆண்டிக்குவெரிக்காவது ஒருவியாஸமெழுதியனுப்பலாம். இக்கிரந்தத்தைப்பற்றிக் கேட்கவென்னவல். இம்முயற்சிகை கூடுமாறு விரும்புகிறேன்." என எழுதியுள்ளார்.

வேறனேகர்களுமெழுதிய நற்சாக்ஷிப்பத்திரங்களுமுண்டு. "காசிநாதஸஹ" எனும் வங்காளநண்பர் பிரயாகையால் "சக்தி" விஷயமாயெழுதிய படித்துள்ளார் அவர் யானெழுதிய சக்தி ஸொரூபத்தை விரும்பிப் பல கடிதமெழுதியுள்ளார். இவ்வாறே விஷ்ணு விக்கிரக விளக்கத்தைவிரும்பினர் வேறு சிலர்.

இத்தனைக்கும் காரணமெம்மைச்சென்ற பதினைந்தாண்டாக வெவ்விஷயத்திலும் பொருட்படுத்தி முன்னுக்குக் கொண்டுவர முயன்றுவருமெமது அத்தியந்த ஆப்த நண்பரும் உலகப்பிரசித்தி பெற்ற சிவஞானசிகாமணியுமாகிய ஸ்ரீமான் - நல்லசாமிப்பிள்ளையவர்களின்றூண்டுதலேயாம். அவரதுபிரேரணையின்பேரி லவரது ஆங்கில சித்தாந்ததீபிகைப் பத்திரிகையிலிவைகளிற் சிற்சில வம்சங்கள் வெளிவந்தன. ஆனால் மாதாந்தப்பத்திரிகையிற் கொஞ்சங் கொஞ்சமாய் வருவதாயின் காலநீடிப்பதனால் இடம் பொருளேவலொன்று மியற்கையிற் பொருந்தாதவனாயினும் திருவருட்டுணையை முன்னிட்டே யாரம்பித்த வித்துணிவைச் சிவநேசர்கள் முற்றுவிப்பார்களென்பது எம்முழுநம்பிக்கை. பேரூக்கங்கொண்டு பெருமானருமைகளை வெளியிடக்கங்கணம்பூண்ட வன்பர்களின்றுணையின்றி யாமொன்றுஞ் செய்யவல்லேமல்லேம். எம்மையிவ்விஷயத்தி லுற்சாகப்படுத்தி யூக்கமுண்டாக்கிய சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையார்க்கும் தூத்துக்குடி சைவசித்தாந்தசபையார்க்கு மெம்மனமுவந்த வந்தனத்தைக் கனிவுடனளிக்கின்றேம்.

முடிவிற் சைவ நன்னெறியாளர்க்கு யாந்தெரிவிப்பதொன்றுண்டு. யாமவடநூல் வல்லேமல்லேம். தென்மொழி தெரிந்தேமல்லேம் சைவசித்தாந்தப் பெருஞ்செல்வர்க்குத் தொண்டுபூண்டொழுகுங்காரணத்தாற சில கற்றுளேம சொறசுவை, பொருட்சுவைகளையெங்குற்றமமலிநத வெறறுரைகளிலெதிர் பாராது சில சொலவேமென வெழுநதவெஞ் சிறுமையையும பொறுத்து, பெருமான் விஷயமுமீதிலுண்டெனப் பெருமை படுத்துமாறுப பிரார்த்திக்கின்றேம்.

இங்ஙனம்.

சைவசித்தாநதச்செலவர்க்கடிமை,

அ. அரங்கஸாமி அய்யர்.

**காழிப்பிரான் கருணை பாலிபபாராக.**

மெயகண்டதேவன் றிருவடி வாழ்க.

சுபம்.

॥ ஶிவமயம் ॥

ஸ்ரீ ஜ்ஞாநஸம்பந்த பரமாசார்யேப்யோ நம: ॥

# சைவாகமப்பிராமாண்யம்.

## நூல்.

திருச்சிற்றம்பலம்

இன்னவுரு வின்னநிற மென்றறிவ தேலரிது நீதிபலவுந்
தன்னவுரு வாமென மிகுத்ததவ நீதியொடு தானமர்விடம்
முன்னைவினை போமவகையி னுனைமுழுதுணர்ந்து முயல்கின்ற முனிவர்
மன்னவிருபோது மருவித்தொழுது சேரும்வயல்வைகாவிலே.

ஈசனெ மையாளுடைய வெந்தைபெருமா னிறைவனென்று தனையே
பேசுதல செயாவமணா புத்தராவா சிந்தமணையாவவனிடந்
தேசமதெலா மருவிநின்றுபரவித்திகழ நின்ற புகழோன்
வாசமலரானபல தூவியணையும் பதிநல்வைகாவிலே.

அத்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச
சத்திரத்தின்மடிந்தொடிந்துசனங்கள்வெட்குறநக்கமே
சித்திரக்கொளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே.

(ஸ்ரீஞானசம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்.

மனிதர்காளிங்கேவம்மொன்றுசொல்லுகேன்
கனிதந்தாற்கனியுண்ணவும்வல்லிரே
புனிதன்பொற்கழலீசனெனுங்கனி
யினிதுசாலவுமேசற்றவர்கட்கே.

வானந்துளங்கிலென்மண்கம்பமாகிலென்மால்வரையுந்
தானந்துளங்கித்தலைதடுமாறிலென்றண்கடலும்
மீனம்படிலென்விரிசுடர்வீழிலென்வேலைநஞ்சுண
டேனமொன்றில்லாவொருவனுக்காட்பட்டவுத்தமர்க்கே.

திருச்சிற்றம்பலம்.

காணப்படு மிவ்வுலகம் யாது? காண்போனாகிய "யான்" யார்?—என்னு மிவ் வினுக்கள் எனது பிரயத்தன மின்றியே என்

னுள்ளத்தில் நிகழ்கின்றன. இச்சைதுவேஷம்; இன்பம் துன்பம்;
கம். ஆஃதின்
முதலிய வெண்ணங்களென்பானிகழவும், இவ்வெண்ணங்கட் கேறப யாதொன்றுமின்றி யடங்கியும் வரவும், இவையனைத்து மின்றி என்றுற் சேஷ்டிக் கப்படும் நிலையிலிருக்கின்ற திவ்வுலகம்; அன்றியும் யான் காணும் போதும், கேட்கும்போதும் சில காக்ஷிகள் சில கேள்விகளோடு மாத்திரம் அமையாமல் யான் காண்கிறேன், கேட்கிறேன் என்னும் ஓர் உள்ளுணர்வும் நிகழ்கின்றது அம்மட்டோடு மமையாமற் பின்னும் யான் விரும்பினதைக் காணவும், கேட்கவும், விரும்பாவிடின் காணாமலுங் கேட்காமலிருக்கவு மோர்சுதந்தரமெனக்கு வாய்ந்திருக்கின்றதையும் யானுணர்கிறேன். இவ்வாறே நன்றிது தீதிதென்றுணருஞ் சக்தியும் அதற்கேற்ப ஒழுகவும், ஒழுகாமலிருக்கவு மோர் "சுதந்தர" மெனக்குண்டென்பதையும். இச்சுதந்தரமெனக் குண்டென்பதை யுணருஞ்சக்தி விசேஷமொன்றென்பாலமர்ந்துள்ளதென்பதையும் யான் உணர்கின்றேன். எனவே "யான்" என்பது "சேதனமாகிய" ஒருபொருளென்றும், "எனதெனு மிப்பொருள்" ஜடமாகிய வேறொரு பொருளென்றும் இச்சடப் பொருளை யொருவாறு சேட்டிக்கவும் அறியவும் ஓர்சிறுதொழிலும் சிற்றறிவு மிச்சேதனப் பொருளிலமைந்துள்ளதென்பதும் பெற்றாம் இக்காரணம் பற்றியே "சைதந்யம் ஜ்ஞாநக்ரியாரூபம் தச்சாஸ்த்யாத்மநி ஸர்வதா" சைதன்யமென்பது அறிவுந் தொழிலு முடைத்தாந் தன்மை. அத்தன்மை ஆன்மாவினிடமுள்ளதென்று" திவ்வியாகம முரைத்தது. இதனால் அறிவுந் தொழிலு மான்மாவினிடமமைந்த தன்மைகளென்றும், அஃதின்மை ஜடமாகிய அனாத்மாவின் றன்மையென்பதுந் தேர்ந்தாம். இவ்வுண்மையையே, கணாதர், கௌதமர், முதலியவர்கள் தாங்களியற்றிய வைசேஷிக நியாயஸூத்திரங்களில் எக்காலத்தவரு மெளிதி லுணருமாறு ஸூத்ரித்துள்ளார்கள். ஸ்ரீ கௌதமரும் பிரசஸ்தபாத பாஷியத்தில் ஆத்மாவினுண்மையைச் செவ்வனே விளக்கி யுள்ளார் "ஆத்மத்வாபிஸம்பந்தாதாத்மா। தஸ்ய ஸௌக்ஷ்ம்யாதப்ரத்யக்ஷத்வே ஸதி கரணை: ஶப்தாத்யுபலப்த்யநுமிதை: ஶ்ரோத்ராதிபி: ஸமதிகம: க்ரியதே। வாஸ்யாதீநாம் கரணாநாம் கர்த்ருப்ரயோஜ்யத்வதர்ஶநாத் ஶப்தாதிஷு ப்ரஸித்த்யா ச ப்ரஸாதகோऽநுமீயதே, நஶரீரே

[illegible]

இதனைச்சுருக்கிச்சொல்வாம்: ஸூக்ஷுமமான ஆத்மாவினாலறியப்படுகிற சரீரேந்திரியங்களினால் ஆத்மாவிஷயீகரிக்கப்படுவதன்று. என்று

னும ஏககாலத்திலேலாவிதச் சேர்வுமின்றிக் கண் செவிமுதலியஇந் திரியாதிகளின வியாபாராதிகளினு லொருவாறுணரபபடும. இவ் விந்திரியாதிகள நியாமகனுகிய ஒரு புருஷனுடைய செய்கைக் குரிய கருவிகளே யென்பதற கையமினறு. சபதம, ஸ்பரிசம, ரூபம், ரஸம், கநதம முதலியவைகளவிஷயீகரிககபபடுமபோது, அதாவதுஸ்வீகரிக கப்படுமபோது, இவைகளை ஸ்வீகரித்த வொருவனுளன் என்பது சரியான அனுமானமேயன்றி வேறினறு. இவவாறு சபதாதிகளை ஸ்வீகரிததது சரீரமனறு, இநதிரியமுமனறு, மனதுமன்று; ஏனெனில அவைகளிடததில "ஸவீகரித்த தனுபவிக்கிறேம்"மெனனுமஅறிவுகாணபபடாமையான. இசசரீரமோவெனில உயிரறற, அறிவறற, சேட்டையறற ஜடவணுககளின கூடடம. பாவை சட்டியைப போன்றது. மேலும சரீரத்திற்கே உண்மையில அறிவுண்டெனின, மாணத் திறகுப பிறகு அறிவு நிகழுககாணகிலை. இநதிரியஙகளுக் கறிவுண் டெனிலமுதலமுதலில இவவிநதிரியஙகள வேறுபொருளான சபதாதி களை ஸ்வீகரிபபதறகுரிய கருவிகளே யனறி வேறிலலை; மேலு மிவவிநதிரியஙகளுககுஊனமுணடாகிலஅறிவினறிநிறகவேண்டும;அதா வது கண், குருடானகாலததும, காது செவிடான காலததும, வாய் ஊமையானகாலததும, மறறு மஙகஹீன முணடானகாலதது மறிவு நிகழாமலிருக்கவேணடும. அனறியும பிணததிறகு மிவ விநதிரியங களுள வாகையாலபபோதும அறிவு நிகழவேண்டும. கண் கெட்ட பிறகு காக்ஷிமுடியாதாயினும முனனா கணடபொருளை நினைததல சாலும்; அனறியு மிவ விநதிரியஙகளைத் தனனிஷ்டபபடி யடக்கி யாணடு நினைதத மாததிரததில மூடவும திறககவும சகதியுடைய வேறொரு வஸது வொனறுளது. இனிமனமாதிகளறிவுடைததெனில அபபோது, ஓரிநதிரியத்தின வழிசெனறபோது, மறறொரு இநதிரியம வியாபாரமினறி நிறககக்காணகிறேம. ஆகையாலஇவைகளை யடக்கியாளும வஸ்து எதுவோ அதுவே ஆனமா வெனபபடும. இவவாதமாவானது முதலமுதலில ஒரு இரததததை நடததும சாரதி போன்றது. சாரதி தனது சாமாததியததினுல் குதிரைகளை யடக்கி யாண்டு தன்னிஷ்டததை நடததுவதுபோல, பிரவிருததி நிவிருததி (வேண்டுதல, வேண்டாமை) முதலிய விஷயங்களில தனக்கின்பங் கொடுக்கககூடிய வஸ்துககளி லாசக்தியுண்டாயினதற கேற்றபடி சரீரேநதிரிய மனதுகளை யேவி யிஷ்டத்தைப பூர்ததிசெய்து கொள் ளுகிறது. இரண்டாவது கொலலனொருவன் துருத்திவழியாய்க் காற்றை யுள்வாங்கி அக்கினியைவளர்ப்பதுபோன்று ஆன்மா உச்வாச

நிச்வாசாதிகளால் நற்காற்றையுள்வாங்கி, துற்காற்றை வெளிக்கிளப்பி எல்லாத்தேகவுறுப்புகளையும வளரச்செய்கிறது. மூன்றாவது, விநோதியொருவன் ஸூத்திரங்களி (கயிறுகளி)னாற் பதுமைகளையாட்டுவிப்பதுபோல இமைத்தல் முதலிய எல்லாவியாபாரங்களிலும் நரம்புமுதலியவைகளைச் சரிவர நடாத்துகின்றது. நான்காவது, சில்பியொருவன்உள்ள சிலகருவிகளைக்கொண்டு அப்போதைக்கப்போது வீட்டைப் பழுது பார்த்துவருவதுபோல் ஆன்மா தேகத்தை வளர்த்துப் பழுதுபார்த்து வருகின்றது. ஐந்தாவது, ஒரு சிறுகுழந்தை சிலபூச்சியையெடுத்து மூலைக்கு மூலையாய்க் கொண்டுபோய் விளையாடுவதுபோல ஆன்மா ஜாக்கிரசொப்பன சுழுத்தியாதிகளிற் கருவியாதிகளை யொடுக்கியும் விரித்தும வருகின்றது. ஆறாவது, ஒரு அதிகாரி உயர்ந்த மேடையிலுட்கார்ந்துகொண்டு வீட்டின் ஜந்நலகளின் வழியாக வெளியில்நடக்கிறவைகளைக் கவனிப்பதுபோல ஆன்மா இவையனைத்திற்குஞ் சாக்ஷியாய் நின்றுகாண்கின்றது. ஆகவேயாத்மா சரீரத்துடனொன்றியும், சரீரத்திற்கந்தர்யாமியாய்நின்றும், சரீரத்திற்கதீதமாய் சாக்ஷியாய் நின்றும எல்லாத்தன்மைகளையு மொருங்கே கொண்டு விளங்குகின்றது. ஒரு பழமொன்றைக் கண்ணாற் கண்டபோது, அதனுருவம் நிறம்முதலியவைகளைக் கண்டதுமாத்திரமன்று. அவ்வித பழத்தை முன்னர் நுகர்ந்திருப்பின் அதனது ருசியும் மனதிற்குக் கொண்டுவரப்படுகின்றது. உடனே நாவில் ரஸமூறுகின்றது. இஃதான்மாவின் செய்கை. இவ்வாறே எவைகளிலும் இச்சை, சுகதுக்கவுணர்வு, பிரயத்னம், தர்மாதர்ம விவேசனம, புண்யபாபவிவேகம், எண், பரிமாணமுதலிய அளவைகளை யுணர்தல், "இருக்கிறேமென்னுமுணர்ச்சி," விருப்பு வெறுப்புகளைக்கொண்டு ஒன்றுதல் பிரிதல, அன்புமருளுங்கொண்டு உயிர்க்கிரங்கல், இன்பதுன்பாதிகளை நுகர்தல் முதலியனயாவும ஆத்மாவின் குணங்களேயன்றிப் பிறிதொன்றின் குணமல்ல.

இனிபூதவணுக்களின் சேர்க்கையினாலுண்டாவதே அறிவென்னுஞ் சாரரைநோக்கிச் சிவாகமங்கள் கூறுவது யாதெனின், அப்படியாயின் அப்போதைக்கப்போது மாத்திரம ஓர் வெளிச்சம்போன்று அறிவுண்டாகவேண்டுமேயன்றி, சென்றகாலங்களில்நிகழ்ந்தவைக பற்றிய நினைவுண்டாக ஏதுவேயில்லை. இப்படி வெகுநாளைக்கு முன்னுண்டான வியாபாராதிகளைப் பிரயத்தனத்துடன் கூர்ந்துயோஜித்து நினைவுக்குக் கொண்டுவந்து பிரவர்த்தித்து பிரகாசிப்பதால், காயத்திற்கு வேறான வொருவனுளன்" என்று மிருகேந்திரங்கூறுகின்றது.

" [illegible] ।
[illegible] "

ஆகமோபப்பிரமாணமாகிய வாயுசங்கிதையும் பின்வரும் வினாவிடைகளையெடுத்து விளக்கிநின்றது

[illegible] ॥

புத்தி இந்திரியம், சரீரம் இவைகளுக்குத் தனியாக ஆன்மாவென விளிக்கப்பட்ட ஒருவஸ்து எவ்வாறு கொள்ளப்படும் என்று இருடிகள் வினவப் பின்வருமாறுச் சுருக்கமாக விடையளிக்கப்பட்டது.

[illegible] ॥ "

இதன் முக்கிய தாற்பரியம் யாதெனின், நிஸ்சயமாகப் புத்தி, இந்திரிய சரீரங்களுக்குத் தனியாக ஆத்மா என்று சொல்லப்பட்ட வஸ்துவொன்றுளதே. அதற்கு ஏது அல்லது காரணம் மிகுந்த கஷ்டமெடுத்துக்கொண்டு விளக்கினும் அறியற்பாலதன்று புத்தி இந்திரியம், சரீராதிகளுக்கு ஆத்மதத்தன்மை ஸத்துக்களால் அங்கீகரிக்கப்படுவதன்று. மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவருவதாலும், தடையின்றிச் செல்லும் அறிவு அன்பு முதலியவைகளினாலும், தேகாதி சுட்டி யறிவதனாலும், அனுபவித்தவைகளை உணருகின்றவ

ளுய் அறியப்படுமெல்லா விஷயங்களையுமறிபவனும், வேதவேதாந்தங்களில் உள்ளிருந்து செலுத்துபவன் என்று பாடப்படுபவனும், அவனில் (தேகேந்திரியாதிகள்) எல்லாமிருந்தும் (தேகஇந்திரியாதி) எல்லாவற்றிலுமவனிருந்தும் ஒருவனுலும், ஓரிடத்தும், தனியாயறியப்படாதவனுகவும், கண்ணினுலும் மற்ற இந்திரியங்களினுலும் மறியப்படாதவனுயும், நன்ருக விளக்கப்பட்ட மனதினுல் மாத்திரம் ஒருவாறு தெளியக் கூடியவனுகவும், ஆண் பெண் அலி அல்லாதவனும், மேல் கீழ் நடுபக்கமில்லாதவனும், அழியக்கூடிய சரீரத்திலழிவற்றவனுய, அநந்தர் முகமாய் அறியப்படுபவனுயுள்ளவன் ஒருவன் உண்டு. அதிகஞ் சொல்லுவதாலென்; புருஷன் தேகத்திற்கு வேருனவன் யாவர் தேகத்திறகு நியமாக ஆன்மாவைக் காணவில்லையோ அவர்கள் ஆன்மாவைக் காணுதவாகளே (அவர்களமதம் பொய் என்பது பொருள்) என்று விடையிறுத்தார்.

தேகத்திற்கு வேருக "ஆன்மா" வைப்பாக்காத மதத்தினை கொள்கையைக் காமிகாகமத்தில "ந்த்ருக்கோதிம் ஹம் ஶரீர வ்ருத்திரேகிணம் । ... ஜவா ... । ... தஸ்மாத் ... நஸ்தீ ।" என்னும் வாக்கியங்களால்வெளியிடப்பட்டுளது அன்றியும் ஸுஷுப்தியில் ஆத்மாவில்லை யென்பாரையுற்று "ஸுஷுப்தௌ ... ஷுப்தாவஸ்தாம் ... ஸுஷுப்தி ... கர்த்ருத்வம் ... ஹம் ॥" "ஸுஷுப்தியில ஜீவனில்லை யெனில், தூங்கிவிழித்ததும நான் ஸுகமாய்த் தூங்கினேன என்று ஸுஷுப்தி சுகத்தையனுபவித்தவன் யார" என்று காமிகங்கூறிற்று. ஸ்வாராஜ்யஸித்தி யெனும நூலில் பின்வருமாறு காணப்படுகின்றது:

"பால்யாதிஷ்வவஸா ஸஹஸ்ரஹஸ்ரீ திம்யு தேந்த்ரியக்ஷோ விஹினோ, ஸ்வய்க்ஷா ஜாக்ரத்ராதிவ் நிஜஹஸாயு ஸ்வோ த்விவேதியுவா ஹம்காரபரீஷு வ்ருத்ஸி ... ஸவுஸ ... ஷுஷுப்தி ... ஶௌவ்ய ஸாக்ஷீ உபஷுப்ரேஷோபாக் ... ஸ்வதந்த்ரீ ஸ்ஸொ வ்யக்தி ஸ்ராத்ஸூமாத்ர"

பால்ய, யௌவன, கௌமார, விருத்தாப்யாதி பலநிசைகளிலும ஏகரூபனும் அதாவது வேறுபடாதவனும் ஒரு ஆத்மாவே நான்

நான் எனுமுணர்ச்சியுடன் நிற்றலாலே, (அதாவது இவ்வவஸ்த்தைகளோரும் அனுபவித்தவன்றானெனவே யுணர்தலாலே) ஸுஷுப்தியிலுமிவ்வான்மா அனுபவியாய் நிற்றலாலனான்மா அறிஞன்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

“எப்போது மிருப்போமென்று விரும்புவதால மாறுதல்களைக்கண்டு கடந்து நிற்குமானமாசுகரூபி” இன்னும விளக்கப்புகின், ஸ்தூல திருஷ்டியால சமயலறை, ஸ்நாநசாலை, சயனசாலை, பூஜாஸ்தானம, முதலிய பலவித விடுதிகளமைக்கப்பெற்ற ஒரு விசித்திர கிரகத்தைக் கண்டதும் இக்கிரகத்தில வசித்து, அதை அனுபவித்துப் பாதுகாத்து வரும் கிரகஸ்தனொருவனுளனென்றும், அக்கிரகம வேறு அதை அனுபவிக்கும் கிரகஸ்தன வேறெனறும, அக்கிரகஸ்தனது போஜனம, ஸ்நாநம, சயனம முதலிய வியாபாரத்திற்காகவே அக்கிரகத்தில் அந்தந்த விடுதிகளமைக்கப்பட்டன வென்றும எவ்வாறறிகிறோமோ அவ்வாறே பல்வேறுதொழில்களுக்குரிய கருவி காரணாதிகளமைக்கப்பெற்ற இச்சரீரத்தைத் தாங்கிய சேதனன வேறென்றும, சரீரம் வேறென்றும் இச்சரீரத்திற்றங்கியசேதனனுடைய அனுபவத்திற்கே இப்பல்வேறு இந்திரியங்களும கரணங்களும, மனோவியாபாரங்களுமமைக்கப்பட்டிருக்கின்றன வெனறும அறிந்துகொள்கிறோம. இவ்வுண்மையையே “ஏஷ ஹி த்ரஷ்டா ஸ்ப்ரஷ்டா ச்ரோதா க்ராதா ரஸயிதா, மந்தா, போத்தா கர்த்தா விஜ்ஞாநாத்மா புருஷ:” புருஷனாகிய இவ்வாத்மா கண்ணினாற் காண்பவன், “சாமத்தினால ஸ்பர்சிப்பவன, காதினாற் கேட்பவன், மூக்கினால நுகர்பவன், நாக்கினால் ருசிப்பவன், மனதினாலெண்ணுபவன், புத்தியினாலறிபவன், அவயவங்களினாற் செய்பவன்,” என்று பிரசினோபநிஷத்தம கூறிற்று. இவ்வாறே ஒவ்வொரு மனிதனிடத்தும் தான்றான் செய்யுங் கிருத்தியங்களுக்குத் தான்றானே “உத்தரவாதி” (Responsible Agent) எனுமோர் அகவுணர்ச்சியமைந்துளதென்பது கண்கூடு.

ஆன்மாவொருவனுண்டென்றுணர்ந்தோம். அனான்மாவாகிய விச்சடங்கள் இவ்வான்மாவிற்குக் கருவிகரணங்களாயமைந்தமையு

முணர்ந்தோம். இனி இவ்வாறேனமைந்தது? யாரமைத்தார்" எனும்வினாக்களிதன்மேலுண்டு. ஏனமைந்ததென்னு மிவ்வினாவிற்கு விடை, இவையமையாமலிருந்தவமயத்தையா முற்றுநோக்கின்வெளியாகும். அவ்வமயஞ்சரீராதிகளைப் பெற்றபின்னா கிட்டுவதரிதாயினும் அதற்குநிகரெனச் சொல்லத்தகுந்த வமயமிங்குண்டு அதுசுழுபதியேயாம். சுழுபதியில ஞானேந்திரிய கர்மேந்திரியங்களும், ஒருவாறந்தக்கரணங்களும் ஏவலை செய்யவில்லையெனபது நாமுணர்வோம். " [illegible] " என்றபடி ஒன்றுமறியாதிருந்த வவசரமேயது. அவ்வவசரத்தில ஆதமாவிறந்நிந்த துணைக்கருவிகளில்லை துணைக்கருவிகளிலலாததினால அறிவின்றியும செயலின்றியுங்கிடந்தது இவ்வாறறிவறறுச்செயலறறுக்கிடந்தவானமாவிறகு, அந்தககரணங்கள சேர்ந்ததும ஸ்வப்நாவஸ்தையுண்டாயிறறு. அப்போது ஏதோசிலவற்றையுணர்கினறது இந்திரியங்களுடைய சேர்க்கையையுமடைந்தபோது, அதாவது ஜாக்கிராவஸ்தையையடைந்தபோது ஆன்மாவிறகுஅறிவுசெயலகள விளங்கிடககாண்கிறோம. இதனறு கருவிகாணுதிகளின் சேர்க்கையால நாமடைந்த பிரயோசனமின்னதென ஒருவாறறிகிறோம.

ஆன்மாதம ஸ்வரூபமாகிய இச்சாஞானக் கிரியைகள வெளிப்படும் பொருட்டென்று நாம அறியலாம். ஆன்மாதனது நிலையில் நிற்குமபோது அதனது இச்சை ஞானக்கிரியைகள விளங்காமலிருந்தமையும அந்தக்கரண ஞானேந்திரிய கர்மேந்திரியங்களின் துணையைக்கொண்டு அவைகள் விளங்கினமையும் பெறறும "இந்த்ரியாபேக்ஷ [illegible] காரணஸாபேக்ஷவான் [illegible] பவேத் ॥" எனும் பௌஷ்கராகம வச [illegible] விளங்கும். "ஆத்தவீக்ஷணம்" எனபது சாதாரணப் பொருளறிதலையுற்று மாத்திரங் கூறியதன்று; மற்று "அறம்பொருளின்பமவீடென்னும" புருஷார்த்தங்களை அறிதலையுங்குறிக்கும். இச்சாஞானக்கிரியைகள் சைதன்ய தர்மங்களாயினும் இவை விளங்காமைக்குக் காரணமவைகளை விளங்காமற பண்ணுந "தடை" யொன்றிருப்பதனாலென்க "ஸத்வ்யாவ்ருதம் [illegible] வ்யஜ்யதே" என்ற வாக்கியத்தின்படி தடையொன்றினாலேயே அவை விளங்காமை வெளியாகும். இதனால் "திரோஹிதோஹி [illegible] ஆவரணாத் ஸம்வ்யஜ்யதே" மறைப்பொன்றினால்

மறைவுண்டுயிர் செய்கையின்றிக்கிடந்தது என்று பௌஷ்கரமும், "[illegible]" மலத்திரைந் தடையுற்ற ஞானக்கிரியைகளை யுடைத்தாதலால் அதைச்சேதிக்கும் பொருட்டே அஞ்சவஸ்தைகளென்று ரௌரவாகமமும், "[illegible]" குணமற்று செய்கையற்று, அறிவற்றுக் கிடந்தமையினால் இவ்வான்மா "போக்தியனாகவும் (எழுப்பப்பட வேண்டியவனாகவும்) சோதியனாகவும்" (சுத்திசெய்யப்படத்தக்கவனாகவும்) இருக்கின்றான் என்னும் "[illegible]" என்ற வாக்கியத்தின்படி மலமென்னும் நித்திரையில் விசேஷமாக மூடத்தன்மை கொண்டு அறிவின்றிக் கிடத்தலால் இவ்வான்மா "மலநித்திரையினின்று எழுப்பப்படவேண்டிய நிலையிலிருக்கின்றது" இதனால் பெறப்பட்டது யாதெனில் கருவிகரணங்களியாவும் ஆன்மாவினறிவை மறைத்த மலப்பிணிப்பை யகற்றுங் கருவிகளாகும் மலத்தைச் சேதிப்பதனால் ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் தடையின்றிப் பிரகாசிக்கும். இவ்வாறு பிரகாசிப்பதும் ஆன்மா புருஷார்த்தங்களை யுணர்வதற்கேயாம் புருஷார்த்தங்களை யுணர்தலாவது நன்றிது தீதிதென்றுணர்தலும் அதற்கேற்ப நன்னெறி கைப்பற்றியுய்யும் வழி தேடுவதுமே.

எம்மையே எமக்களித்த விப பேருபகாரம் யாராலேற்பட்டது அறிவற்றுச் செயலற்றுக் கிடந்து அறிவுஞ் செயலு மெழுப்பப்பட வேண்டிய நிலையிலிருந்த யாமே செய்துகொண்டோ மென்பதற்கு வழியின்று. எல்லா நலங்களுமமையப் பெற்ற வித்தன்மையில் அதாவது மானிடஜன்மத்தில் எனக்கமைந்த அங்கஹீனங்களையும் அறிவீனங்களையும் மாற்றிக்கொள்ள வகையறியாத யானா தானே அறிவற்றுச்செயலற்றுக் கிடந்த முந்த வவதாரத்தில் அறிவுஞ் செயலுமுண்டாக்கிக்கொள்ளும் வகையறிந்து தேடவல்லேன்! மற்று விகாரித்துத்தொழிற்படுந் தன்மையிலிருக்கும் ஜடமிதையுண்டாக்காது. அன்றுகாந்தத்தின் சந்நிதியில் இரும்பு சேஷ்டிப்பதுபோல் சேதன ஆன்மாவின் ஸந்நிதியில் அசேதனந் தொழிற்படுமெனில், அறிவுஞ் செயலும் பிரகாசிக்குந் தன்மையிலது பொருந்துமேயன்றி, ஆன்மாவுக்குரிய சிற்றறிவுஞ் சிறுதொழிலும் மாண்டு "சார்ந்ததன்

வண்ணமாதலினால் மலத்துடனிருந்து மலமாகவே நின்று ஸ்வரூபமே கெட்டிருந்த வத்தன்மையிலிது பொருந்துமாறு யாங்ஙனம்? சிறுதொழிலுஞ் சிற்றறிவும் வெளிப்பட்டேவ கருவிகாரணாதிகளின்றுணையை எதிர்பார்த்து நிற்குமிவ்வான்மாவிற்கு அசேதனங்களைத் தொழிற்படுத்துமாற்றலென்னவிருந்தது. இருந்தாலும் இவ்வவஸ்தைகளைப் பேதாபேதப்படைந்து பிறகே அறிவுஞ்செயலுந் நிகழவேண்டிய வவசரமேனோ? கருவாதிகளையடைந்து அறிவென்று பிரகாசிக்குமவஸ்தையிலும் "பற்றினது பற்றுயழுந்தி" இந்திரியங்களுக்கடிமையாய் நிற்குந்தானே, அறிவற்றுச் செயலற்றுக்கிடந்த மூர்ச்சாவஸ்தையில் அசேதனத்தைத் தொழிற்படுத்துமாற்றல் வகித்தது? அன்றியும் அதன் சந்நிதியென்பதிருந்தாலன்றோ தொழிற்படும். மலங்குறுக்கேநின்று மறைத்து ஸ்வரூபந் தெரியவொட்டாது தடுக்கும்போது ஸந்நிதியேது? ஸூக்ஷ்மக்கருவிகளாஞ் சிற்றொளியால் மலமெனுங்கல் தகர்ந்தபின்னரன்றோ சந்நிதியுண்டாயிற்று "இதனாலே புருஷன ஸந்நிதியில் பிரகிருதி தொழிற்படும்" எனவும் ஸாங்கியக் கொள்கை இங்கு பொருந்தாதென்க. தநுகரணாதிகளைப் பெற்றபின்னர், ரக்தோட்டம், உச்வாசநிச்வாசம், நிமேஷோன்மேஷம், ஜீரணஞ்செய்தல் முதலிய பலதொழில்கள் சேதனவானமாவின் சந்நிதியில் தொழிற்படுமென்பது உண்மையே. ஆன்மா புருஷத்தன்மையையடைந்து புருஷனான பிறகன்றோ பிரகிருதி யதன்ஸன்னிதியிற் தொழிற்படும். புருஷத்தன்மையையடைவதற்குமுந்திச் சில ஸூக்ஷ்மதத்துவங்களுடன் சேர்ந்தாலல்லவோ புருஷனாகிறான். இதனாலான்மாவுந்தானே ஒருவிதப்பிரயத்தனமுஞ் செய்துகொள்ள சக்தியற்றிருந்தது. ஜடத்திற்கறிவே கிடையாது. அப்போது ஆன்மாவினுடைய இச்சாஞானக்கிரியைகள் உள்ளவாறு பிரகாசிக்குமபடி தத்துவங்களையுடன்கூட்டிய பேருபகாரம் புரிந்தவன் யார்?

எவனொருவனெனக்குப் புறமே பல்லாயிரங்கோடி மைலகளுக்கப்பாலுந்த வாகாயத்திற்சுற்றிச் சுழன்றுவருமிவ்வண்ட கோடிகளையுண்டுபண்ணியவனோ அவனேதான் இத்தத்துவங்களை அறிவற்றுச் செயலற்றுக்கிடந்த வான்மாவுடன் கூட்டி அறிவையுஞ் செயலையுந் நிகழுமாறு கருணைபுரிந்திருக்கவேண்டும். எவனொருவன் சூரியன், சந்திரன், பூமி, மற்றைய கடல், மலைமுதலியவைகளை யுண்டுபண்ணினானோ அவனே தானென்னை யெனக்களித்திருக்கவேண்டும். அப்புளனோ?

கேவலம அனுமானப்பிரமாணத்தாலேயே பற்பல பௌதிக சட்டதிட்டங்களை "இபபடித்தானிருக்கவேண்டும்" "அப்படித தானிருக்கவேண்டும்" என்று நம்பும் நவீன வானசாஸ்திரியொருவர் தமது தூரதிருஷ்டிக்கண்ணுடியா லாகாயத்தைத்துறுவித்துறுவிப் பார்ததும் கடவுளைக் காணவில்லையென்றாராம்! பௌதிக சாஸ்திர ஞானத்திற்கும் முக்கியமான அனுமானபபிரமாணத்தை யெடுத்தாண்டிடின் கடவுளை நிஸ்சயஞ்செய்ய வருமென்றுணர்ந்தே பிரத்தியக்ஷப் பிரமாணத்தாற கடவுளை யில்லையென்று சாதிக்க முநதினுர் போலும்! அனுமானப் பிரமாணம் நிஸ்சயமாக "ஈசுவரன்" ஒருவனுளன் என்பதைத தீர்மானிக்க உபயோகமாகுமென்பதை நியாய வைசேஷிகாதி ஸூத்திரங்களையியற்றிய கௌதம கணுதாதிமகரிஷிகள செவவிதினுணர்த்தியருளினுா. "அனுமானபபிரமாணம்" இறைவனில்லையெனபதறகு ஓர் எட்டுணையும பிரயோஜனப்படாது. ஆகையால் முற்றிலுமனுமானப பிரமாணததையே யெடுததிசைப்பதிலும் வேறு வழிகளினுலிவ்விஷயத்தையுறறு நோக்குவதுந தகுதியென்றெண்ணி யவ்வழியையும் பற்றுவோமாயினேம.

ஒவ்வொருகாரியத்தை யியற்றும்போதும யானிரண்டுவித தர்மங்கள் அல்லது தன்மைகளைககொண்டே யியற்றுகின்றேன். ஒன்று உணர்ச்சி (Feeling) மற்றென்று ஊகம (Reason). இங்கு உணர்ச்சியென்பது அன்பின் றன்மையென்றும் ஊகமென்பதறிவின் நிகழ்ச்சியென்றுமோர்க இவ்வுணாச்சியே யொன்றிலாஸக்தியை யுண்டாக்குவது. ஊகமென்பததனைப்பற்றி யாலோசிபபது "உணர்ச்சி"யினறேலொன்றிலு மாஸக்தியெனக் குண்டாகாது. இவ்வாறே "யூக" மின்றேல் பல வேறுஉணர்ச்சிகள் அல்லது ஆஸக்திகளில் விழுந்துமானிக்க முடியாது திகைககவேண்டும். உணர்ச்சியென்பது மன்ஞத்மா பற்றும குணமும, ஊகமென்பது பறறி யதைததீர்மானிக்குங் குணமுமாம். இவ்விரண்டிலு மாஸக்தி அல்லது உணர்ச்சியே முநதியதாகும். யானேரிடத்தைவிட்டு வேறேரிடத்திற்சேககவேண்டுமென்றெனக் குணர்ச்சி அல்லது ஆஸக்தி முன்னருண்டாகி அவ்வாறேகுவது சரிதானென்று ஊகம் பின்னர் ஒபபி, அதற்குறிய வழி முதலியவைகளைப்பறறி யுற்றுநோக்கும். ஒவ்வொரு காரியத்திலுமிவ்விரண்டின்பிரேரணையின்றி யானென்றும் நடத்துவதில்லை. இனி "ஈச்வர" விசாரத்தில் இவைமுறறுப் பெறுகின்றனவோ வென்பதைவிசாரிப்பாம். வெறுமூகமேயென்னை ஈச்வரவிசாரணையி லிழுத்ததன்று. எம்முணர்ச்சி ஈச்வரவிஷயத்திற்ப ற்றியபின்னரே, எம்மூக

மதையங்கீகரித்தது. எம்முணர்ச்சி "ஈச்வரவிஷயத்தைப்" பற்றிய துண்டோவெனின், *கூறுதும். முதல்முதலில் "யாமிருக்கிறோ மென்று தர்க்கித்துப்பார்த்துத் தீர்மானித்தபிறகா யாமிருக்கிறோ மென்று கொள்ளுகிறோம். அன்று. யானிருக்கிறேனென்று முதலில் யானுணர்கிறேன். பின்னர் அவ்வுணர்சசி வழியிலேயேசென்று யென்னுாகமுமொப்பியது. எனவே "யாரொருவனுண்டு" என்று இருவகையாலும் ஸித்தித்தது. என்னுணர்ச்சிக்கு ஊகம் மாறுபடி ஞொன்றுஞ் சித்தியாது. இவ்வாறென்னுணர்ச்சி காணப்படாக் கட வுளைப்பற்றியதா?

சிலருரைப்பதாவது: "ஆதிகாலத்தில் நாகரீகங் குறைவா யிருந்தகாலத்தில் இடிமுழக்கததைக்கேட்ட வொரு அறிவீனன் பயந்து யாரோவொருவன் றன்னைக்கொலல யத்தனித்து அவ்விடி முழக்கத்தை யுண்டுபண்ணுகிறான் என்று நினைத்துத் தன்னைக் கொல்லாவண்ணம் பயந்து வேண்டினான். இதுதானீர்சவரக்கொள் கைக்குக் காரணம்". இதையே வைத்துக்கொள்வோம். இடியே இடிக்கட்டும். இதனாற் காணாத வேறொருவனுடைய வெண்ணமேன் புதிக்கவேண்டும். இடியை இடியென்றுணரட்டுமே. அல்லது பெருஞ்சப்தமென்றுணரட்டுமே. அதற்குப் பயந்து அவன் ஒளிந்து கொள்ளட்டுமே! "தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு அவ் வாறு செய்தான். தற்காப்பென்பது மிருகாதிகளிடத்து முண்டு" எனின் — "தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு ஓடியொ ளித்தாற் போதாதோ;*காணாத வேறொருவனைப்பற்றிய நினைவு ஏனுண்டாகவேண்டும். மிருகாதிகள் திடுக்கிட்டுப் பயந்தோடுகின் றன. விலங்கு வேறொரு புருஷனைப்பற்றி நினைக்கின்றதா? நினைந்து வழிபடுகின்றதா? பின்னர் மாந்தர்க்கேனவ்வித உணர்ச்சி யுண்டாக வேண்டும்! "தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட் டப்பேருணர் வுண்டாயிற்று" என்பது பெரிய வுண்மைதான். எல்லாமாந்தர்க ளும எல்லாக்காலத்திலும் கடவுளொருவ ருண்டென்றுணர்ந்து வழிபட்டு வந்தார்கள். பெரும்பான்மையோராவது வழிபட்டு வரு கின்றார்களென்பது ஸித்தம். ஏனவ்வாறு கொண்டார்கள்? பயத்தி ஞற் கொண்டார்கள்; மூடத்தன்மையினாற் கொண்டார்கள்" என்பது 'ஏன் கொண்டார்கள்' என்பதற்கு விடையாகாது. கேட்டதையோ அல்லது கண்டதையோ கேட்டபடியே அல்லது கண்டபடியே கொள்வதைவிட்டுக் கண்டதிலோ அல்லது கேட்டதிலோ ஒருவ ரையோ அல்லது பலரையோ நுழைத்து ஏன் பற்றினார்கள் என்பது

தான் கேள்வி. இதற்குத் தகுந்த விடைகாணின், ஈச்வரேச்சை வேண்டியதா, வேண்டாததா, நியாயமா அநியாயமா வென்பதற்கு விடை கண்டுவிடலாம். வேறொருவனைப்பற்றி நினையாமலும், அவ் வேறொருவனை வழிபடாமலு முள்ள விலங்குகளைக் குறுக்கே கொண்டுவந்து போடுவது சரியன்று. பயத்தினாற் சிலர் பற்றியிருப் பின், வேறு சிலர் அற்புதவாநந்தக காக்ஷியையும், அழகையும் பெரு மையையுங் கண்டு மனங்கரைந்தன்பினாற் பற்றியிருக்கலாம். பயந்து ஓடித்தன் தாயினது முழந்தாளைப் பற்றுவதுமுண்டு. ஆநந்தத் தாலோடி கட்டித் தாயைத்தழுவி சந்தோஷிப்பதுமுண்டு. பயத்தி லிருந்து காப்பாற்றுந் தாயே ஆநந்தத்திற்கு முறைவிடம். பயங் காரணமாயிலென்? - அன்பு காரணமாயிலென? புகுமிடம் வேறொரு காணுதகடவுளென்றேன் கொண்டார்கள் என்பது தானுரைக்கத் தக்கது.

இனியுண்மையாதெனின், "தன்னுண்மை தலைப்பட்டவுடன், அதாவது தானிருக்கிறேமென்னுஞ் சிறிது ஞானமுண்டானவுடன பரிதிருச்யமான விபபிரபஞ்சம தோனறுகின்ற காரணத்தாற் றன்னை யறியாமலே ஆன்மாவின்கண்ணோ நிகழ்ச்சி அதாவது ஒரு கேழ்வி யுண்டாகின்றது. இந்நிகழ்ச்சியே கடவுளைப் பற்றிய வுணர்ச்சியா கும். இன்றேல வியப்புண்டாகக் காரணமில்லை வியப்புண்டாகு மிடத்தில் ஒருவனது சாமர்த்தியங்கொள்ளப்படும். இவ்வியப்பு அல லது உணர்ச்சிதான் "கடவுளைப்பற்றிய உணர்ச்சி". இவ்வுணர்ச் சியே வூகத்தினாற்றிருடீகரித்துப் பலபல சமயங்களாய் நிலவியது. இதுதானுண்மை. தற்காலத்தில் மாந்தரிற் பலரிக்கேள்விகளைவாய் விட்டுக்கேட்காவிட்டாலும், மனதிலுணாந்து, அக்கேள்விக்கேற்பபல பலமதங்களைத் தங்கள் பெற்றோர்களும, தேசத்தார்களும கொண் டிருப்பதால் அவவுணர்ச்சிக்கேறபச் சரேலென்று அவ்வம்மதங்களைச் சிரமமின்றி யபபடியப்படியேபற்றி யொழுகுகின்றனர். இக்கேள் வியைக்கேட்டா, மாந்தரெல்லோரும மதங்களைபபற்றுகின்றனர் என்று சந்தேகிக்க வேண்டாம். தனக்குமிவ்வித பிரபஞ்சத்திற்கு முள்ள ஒருவிதத் தொடர்பை யுணர்ந்தபின்னரே பற்றுகின்றனர் என் பது ஸத்தியம்.

இவ்வுணர்ச்சியின் சொரூபத்தை யொருவாறாகிப்பாம். இவ் வுணர்ச்சி எங்கிருந்துண்டாயதெனில் "ஆத்ம சொரூபத்தினின்று மென்பது" ஸத்தியம். கேவல மிருகத்தன்மையாகிய உண்பது உறங் குவதினின்றுந் தாண்டி அறிவறியுந்தன்மை யடைந்தவுடனே, ஒவ்

வொரு மாந்தர்க்கு மிவ்வுணர்ச்சி நிகழ்கின்றது. நாஸ்திகர்களுங் கூட எங்கும் நீலநிறமாயிருக்கு மாகாயத்தில் பல்கோடி நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கும்போதும், பூரணசந்திரன் பிரகாசிக்கும்போது மதனைக் கண்டு ஆ! ஆ!! என்ன அழகிது, என்ன ஆநந்தமிது என்று எக்காரணத்தைக்கொண்டு தம்மைமறியாதுருகி யவ்வானந்தத்தில் அமிழ்கின்றார்களோ அவ்வுணர்ச்சிதான் இங்கும் நிகழ்கின்றது. இக்கேள்வியை ஒவ்வொருவனுடைய ஆத்மாவுங் கேட்கின்றது. அதற்குவிடையையு மொருவாறுணர்கின்றது. இதனை வேதமானது "அபித்வா ஶூர நோநுமோ(அ)துக்தா இவ தேநவ: । ஈஶாநமஸ்ய ஜகத: ஸ்வர்த்ருஶமீஶாநமிந்த்ர தஸ்துஷ: ।"—"ஏ! ஸர்வசாமர்த்தியமுடையவனே கன்றுகள் தாய்ப்பசுவைத்தொடர்வதுபோல இவ்வுலகத்திற்கீசனான விண்ணிலுறைநின்னை வணங்குவோம்" என்றது. இவ்வாக்கியம்கர்மகாண்டத்தின் மத்தியிலும், ஞானகாண்டமாமுபநிஷத்திலுமுண்டு.

பரிதிருச்யமான இவ்வுலகத்தில் ஆரம்பித்தவிடம் முடிவிடமென்பனவின்றி எங்கும் பரந்தவிண்ணையும், அதில் நக்ஷத்திரங்கள் பல்லாயிரங்கணக்காய்ப் பிரகாசிக்கவும், சந்திரசூரியர்கள் மனதிற்கெட்டாதபொலிவுடனும்மொளியுடனும் பிரகாசிக்கவும், கரையென்பதுதட்டாமல் நீலநிறத்துடன் வெகு கம்பீரமாய்ப் பரவிநின்றமகா சமுத்திரங்கள், உயர்ந்தபனிமூடும் மலைகளிவைகளைக் கண்ணுறும்போது தனதுசிறுமையுமவைகளின் பெருமையுந்தோன்ற வுணர்கிறான். ஓரோர்கால் பச்சைப்பசேலென்ற பசும்புற்றரைகள்கூட வென்னைமறக்கச்செய்கின்றன. இவ்வற்புதவானந்தக் காக்ஷியானது தோன்றவே ஒருணர்ச்சியுண்டாகின்றது. இவ்வுணர்ச்சி அல்லது அகமகிழ்ச்சி அல்லது வியப்பு (அதைஎப்பேரிட்டழைப்பினுஞ்சரி) என்னை யிறைவனிடந் தூண்டுகிறது. அவ்வுணர்ச்சி நிகழுங்காலத்தில் யான் தர்க்கிப்பதின்று. காரணந்தேடுவதின்று ஊகிப்பதின்று. குழந்தைதாயைப்பற்றுவது தர்க்கித்தா? காரணமுணர்ந்தபின்னரா? இவ்வற்புதவானந்தத்தையென்று மநுபவிப்பாய் என்றகாலத்திலெனக்கானந்தமும். "நீசாவாய்" என்று கூறும்போது எனக்குத்துக்கமுமுண்டாகின்றது. எது எனக்குத்துக்கத்தை விளைப்பதோ அதுவெனக்கு ருசிக்காததாய், எனக்குப் பொருந்தாததாய், அதாவது என்னியற்கைக்கு விரோதமுள்ளதாய், அதாவது பொய்யாய் இன்மையாய் ஒழியும். எதுவெனக்குப் பொருந்தியதோ அதுவுண்மையாகும். அதுவே என்னியற்கைக்குப் பொருந்தியதாகும். அக்கா

லத்தில் "வாலாக்ரஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச । பாகோ ஜீவஃ ஸவிஜ்ஞேயஃ ஸசாநந்த்யாய கல்பதே ॥" வெகு சிறுமையாயுள்ள ஜீவன் "ஆநந்த்யாய"— (Eternity) முடிவென்பதின்றி மகிழும் என்ற உபநிஷத்தின் காம்பீர்யந்தலைப்படுகின்றது. இத்தகைய வுணர்ச்சியே ஈச்வரனைப்பற்றுவதாகும்.

உணர்ச்சி சென்றவழியே "யூகமுஞ்செல்லும். உணர்ச்சியின் வழியிற செல்லாத தூகமுமன்று. (அது யாதாயிருக்குமோ அதற்குப் பெயரென்னவோ) உணர்ச்சி சென்றவழியே யூகமுஞ் செல்லுமென்றோம். இனியூகமெவ்வாறு நிர்த்தாரிக்கின்ற தென்பதை யாலோசிப்பாம.

உணர்சசியா லுணர்வது போலவே அறிவால் ஆலோசிப்பதும் மாநதரிடத்தமைநத சக்திவிசேடமேயாம. உணர்சசியைப்போலவே யிதுவுமியறகையிறபொருநதிய தொன்று. விலங்குகட்கும் மாநதர்கட்க்குமுள்ள வேற்றுமையாவும் இவ்வூகமெனுஞ் சக்திவிசேஷமொன்று மாநதரிடத்தமைந்த காரணத்தாலேயேயாம். எந்தவிலங்கு புண்ணியபாப மினைத்தெனவுணருமா? எநதவிலங்கு நன்றிது தீதிதென்று உணருமா? எந்த விலங்கு அரசுரிமை நாடுமா? எநத உயர்தர விலங்கு "நீதி நூறறெரிக்குமா"? விலங்குகட்கெனச் சட்டங்களுண்டோ? நியாய சாஸ்திரங்களுண்டா? மற்றெதுதா னுண்டு? இப்பகுத்தறிவென்னும் பண்பால சிருஷ்டிவர்க்கததுற றலைமையெய்தினவனாக "மனிதனன்றோ" பிரகாசிக்கிறான். இங்ஙனமஊன்றி விசாரிக்குஞ் சக்தி மானுடரித்துச் செயறகையாலமர்நததா? இயறகையிலமர்ந்ததா? எனின் இயற்கையிலமர்நததைச் செயற்கையில் விருத்திசெய்யலாமன்றி, இயற்கையிலமையாததை விருத்திசெய்யமுடியாது. நூற்களும், கல்விச்சாலைகளு மியற்கையிலூன்றி விசாரிக்குங்குணமுள்ள மாந்தர்க்கேயன்றி மற்றைவிலங்குகடகல்ல கணிதசாஸ்திரம், வானசாஸ்திரம் முதலிய அற்புதஅறிவுபயிற்சி நூற்களில் வல்லவன் மானுடனன்றோ? மாநதர்க்குஇயற்கையிலமைந்த அவ்வற்புத வூகசக்தியால், மாந்தர் செய்வது யாதெனின் "இது என்ன, இது ஏன், இது எற்றுக்கு, இதென்னசெய்யும்;" என்பனவாதி வினாக்களை வினவுகிறான். இப்படி யொவ்வொன்றையு மூன்றி விசாரிக்குங்காரணத்தினாலேயே இவனையுண்டாக்கிய ஸர்வசக்தியானது உண்பன, உடுப்பன முதலிய எல்லாவிஷயத்திலுமிவனை யுழைத்தே அதாவதறிவை யுபயோகித்தே விர்த்திக்கும்படி விட்டு ஊகமில்லா விலங்கு

களுக்குப் புல்லையுந் தழையையும் உணவாக்கி அவைகளின் மடித்த தோலகளையே உடையாக்கிவிட்டது கண்டீர். அது மாத்திரமா. இப்பௌதிகத்தன்மையையடக்கி, அறிவையே ஆதாரமாகக்கொண்டு அறிவுநூல்களையே நினைக்கவும்பேசவும் வல்லவனுயிருக்கிறுன். அறிவாற்பெற்றபய னறிவுநூற் பழகுவதன்றி வேறுயாதென்பேம்! " அறிவறிவதறிவே " என்றூர்பிறரும.

இத்தகைய ஆழ்ந்து அறியும் கூர்ந்து யோசிக்குங் குணத்தாலொவ்வொருமனிதனும் " யாமார் எமக்கிவ்வுடலேது " என்ற பெருங் கேள்விகளிலிறங்குகிறுன். இப்படி யிறங்குவதினுலேயே அறிவினுலிவைகளைச் சோதித்து முடிவுகாணலாமென்பது ஸித்திக்கும். அறிவுடை யொருவனுக்கு அறிவின் பயிற்சி, அறிவின் முயற்சியினுலடையத்தக்க வின்பமே வின்பமாகும. இவவின்பததிறகல்லவா அறிஞர்களும அன்பர்களும் பாடுபட்டனா.

இவ்வா றெத்தன்மையிலும் காரியத்திற்குக் காரணங்கண்டு பிடிக்க வல்லஇவன் இப்பிரபஞசத்தையுநதன்னையுங்கண்டு காரணந் தேடாதொழிவானே! அவவாறு "காரியத்தைக்கண்டு காரணத்தைத் தேடுமேறிவு இவன்பாலமையாதிருந்தாலன்றே" இவனவ்வாறு கேட்பதினின்று மொழிவான. அபபோதிவனை யிநத பிரயோசனமற்ற அலுவலினின்று ஒழிநது நில்லென்றெருவரு முரைக்கவேண்டுவதில்லையே!!! ஏன்? அநதஞானமே யில்லாதபோது யாரெடுத்துரைக்கநேரும்!

ஆழ்நது யோஜிக்குமறிவினு லிபபிரபஞ்சமான காரியத்தைக் கண்டதும் காரணமுண்டோவெனச சோதிக்கின்றுன். சோதிக்கும் போது பலவுண்மைகளையறிகிறுன். முதலமுதலில தேகத்தையே பார்ப்போம்: கண்ணென்றை யெடுத்துக்கொள்வோம். இக்கண்ணினமைப்பைப் பாருங்கள். படமபிடிபபவனை (Photographer) க்கேட்டால் உருவமமைவதறகு வேண்டியவைகளை யெடுத்துரைப்பன். படம்பிடிப்பவன் படம்பிடிக்கும் மூடுபெட்டியொன்றையும், ஒளிகளைபிடிக்கும் கண்ணுடிகளையும்,மற்றுமுள்ளகருவிகளைக்கொண்டு தூரத்திலோ சமீபத்திலோஒருவாறு திட்டஞ்செய்து உருவமெடுக்கிறுன். இவ்வாறு கண்ணில் ஒளிகளைச் சிதறவிடாது வாங்கும் இருபக்கமு மூடிகளையொத்த விமைதோல்களைக்கொண்ட கண்ணுகியபெட்டியும்அதிலடங்கிய ஒளிகளை யேற்கும் வளைந்தகண்ணுடி ( Chrystalline lens ) போன்ற (Aqueous humour,) எனப்பட்ட ஒரு மினி மினிப்புச் சதையும், (Vitreous humour) என்று சொல்லப்பட்ட உருவமைக்

கும் கண்ணுடி (Refracting lens) யும் Retina என்னும் விழி Ground glass என்று சொல்லத்தகுந்த ஒருவகைக் கண்ணுடி முத லியவைகளுடன் இருபக்கங்களிலுமுள்ள கண்ணின் போர்வைகள் தூரத் திலிருக்கும் வஸ்துக்களையும், சமீபத்திலுள்ள வஸ்துக்களையும் காண்ப தற்குத்தக்கவாறு விரிந்தும் குவிந்தும் வர்த்திக்கின்றது. உள்ளிருக்கு மாத்மாவே படம்பிடிப்பவன (Photographer) ஒரு உருவமமைவ தற்குப் படம் பிடிப்பவன் எவ்வளவு கருவிகளைக்கொண்டிருக்கிறான். இவ்வாறே ஓசையைச்சேட்கும் காது மததளத்திற் கமைநத பூச்சு களைப்போன்று சில பூசசுகளையும கொண்டது இப்படியொவ்வொரு இந்திரியஙகளும, மறற எல்லா வுறுபபுகளும எவ்வளவு திறமையான வேலைப்பாடுட னமைந்திருக்கின்றன. மலையிலருவிகளோடி நதிக ளாகி வழிவிட்டுக் கொண்டதைபபோல விவ்வமைப்புக்களைச்சொல்ல முடியுமா. எவ்வளவு முனயோசனையுடனும, கூாநதபுததியுடனும், கார்யாகார்யநதெரிநத ஒரு பேரறிவாலிது விளைநதிருக்கவேண்டும். ஆண்பெண்ணமைப்பும் மற்ற கருவிகளினமைப்பும. ஆஹா! இதை விட வேறு வியபபு என்ன விருக்கின்றது. அந்தோ! இவைகளை எவன் பிரயோஜனத்திறகாக அமைக்கபபட்டனவோ அவனையே யில்லை யென்று வேண்டுமென்றே சுழலில வீழ்நது மயங்கி மடிகின்றவர் காணப்படாத கடவுளை மறபபது ஆச்சரியமன்று!!!

"The adaptation of means to an end is the mark of Intelligence"

இன்னபடிதான் யியற்றபபட வேண்டுமென்று முன்னுணர்வுடன் அதாவது ஒரு உருவங்காணப்பட வேண்டுமானுல இவ்வளவு கருவி களின்னின்னவழியாயமைக்கபபடவேணடும என்று முன்னுணர்நதே யல்லவா எல்லாம் வல்லபேரறிவுள்ள ஓர் சக்தியமைத்திருக்கவேண் டும். இவ்வளவு பேரறிவு நிகழத்தக்க ஓர் அற்புதச் செயலைக்கண்டும் நாமப்பேரறிவை நம்பாவிடின், சமயலறை, ஸ்நாநசாலை, முதலியபல விடுதிகளமைநத ஒரு கிரகததைக்கண்டு, போஜனம், ஸ்நாநம் முத லியவைகளைசசெய்யும் புருஷனுடைய வஸதிக்காகவே, இவைகள் அமைந்ததென்றுணரும்புத்தி எற்றுக்குண்டாயிற்று? அதைப்போல வே ஒருவனதுபார்வை, கேள்வி, நினைப்பு, முதலியவைகளுக்காகவே கருவிகாணங்கள் அமைந்தன. அவன் குடியிருக்கும்பொருட்டே அக் கிரகம் ஒருவனுலமைக்கப்பட்டது போலவே, இவ்விசித்திர வமைப் புள்ள தேகமும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினிவ்விட்

டைக்கட்டினவனை நான் காண்கிறேனே. இறைவனைக்காணவில்லையே யெனின், காணவில்லையே யென்று மாத்திரங்கூறலாமேயன்றி, காணாததாலில்லையென்று கூறுதல்பொருந்துமோ! காணாவிட்டாலும் இவ்வாறமைத்த சக்தியொன்றுளதுவென்றுநாங்கொள்வோமானால் அஃது பேரறிவுடையது, பேராற்றலுடையதுஎன்று நாங்கொள்ளவேண்டும். இப்பிரயோஜனத்துடன் அமைந்த இவ்வமைப்பையும், அப்பிரயோஜனத்தை யடைந்தனுபவிக்கும புருஷனையுங்கண்டும் பிரயோஜனத்தை முன்னுணர்வுடன் புரிந்தவஸ்துவை யில்லையென்றாவது, அல்லது குருட்டுச சக்திகளொன்றோடொன்று முட்டிக்கொண்டு இவ்விதவமைப்பை நிகழ்த்தியதென்று கூறுவது நாம்வேண்டுமென்றே கண்ணைமூடிக்கொண்டு ஒரு வஸ்துவைக் காணமாட்டேனென்று கூறுவதை யொக்கும். அவவாறுரைப்பது அறிவைப்பெற்ற யாமவ்வறிவின் பிரயோஜனத்தை யிழப்பது போலாம்.

இனிக்கடவுளைக் கண்ணாறக் காணவில்லையே என்றவாசங்கையைப்பற்றிச் சிறிதாராய்வாம். ஊன்கண்ணுக்கு விஷயமாகாததெல்லாமில்லையென்று கூறுவதாயின் அபபோது அனேகவஸ்துக்களை நம்பாமலிருக்கவேண்டிவரும். காற்றொன்றிருப்பதை நாம் ஏன் நம்பவேண்டும். அஃதோ கண்ணுக்கு விஷயமாகவில்லை ஏன் அஃதிருப்பதாக நம்பவேண்டும். நம்மேல் காற்றடிப்பதை ஸ்பர்சத்தாலுணரவில்லையோவெனின், கண்ணுக்கு விஷயமாக வில்லையே? மரமுதலியவைகள் அசைவதைக் கண்டோமேயெனின் காற்றினது காரியமாகமரமசைவதைக்கண்டோம என்பதுண்மையே. ஆனால் காற்று கண்ணுக்கு விஷயமாகவில்லையே? அதனால் கண்ணுக்கு விஷயமாகாத காற்றை எவ்வாறு நம்புவது? இனியாம வீணை வாசிக்கக்கேட்டேம். அதனாலுடலம் புளகாங்கிதமாகிச் சந்தோஷமடைந்தேம. வீணாகானத்தைக் கண்டோமா? அது எம்மை இன்பத்தாழ்த்ததுவாமன்ன. ஐம்புலன்களுக்கு விஷயமான சுவையொளியூறோசை நாற்றமென்பவைகளில் ஒன்றுக்கு விஷயமாவது மற்றொன்றுக்கு விஷயமாவதில்லை. இதனால் ரூபமொன்றையே கிரகிக்குங் கண்ணிற்கு வேறு சில விஷயமாகாததினால் அவையில்லையென்றெவ்வாறு கூறலாம். ஐம்புலன்கள் நிற்க, ஒன்றும் ஒன்றும் இரண்டென்றேன். ஒரு முக்கோணத்தின் மூன்று மூலைகளுஞ் சேர்ந்து சரிமத்தியில் நேராக வெட்டுண்ட இரண்டு கோடுகளினாலாய நான்குமூலை களிலிரண்டு மூலைகளுக்குச் சமானமென்றெண்ணினேன். இஃது ஐம்புலன்களுக்கும் விஷயமாவதில்லை. இவ்வாறே அங்ககணிதம், பீஜகணிதம் மற்றெவ்வகை அளவை

கள் ஆகிய இவைகளுண்மை யென்பதற்குத் தடையென்ன. இஃது கேவலமந்தக் கரணங்களின் வியாபாரம். அன்றியும் நான் ஒருவனைக் காண்கிறேன். காணும்போது அவனுடைய ரூபம் என்கண்ணுக்கும் அவனது சப்தம் காதுக்கும், அவனது ஸ்பர்சம் என் உடலுக்கும் விஷயமாகின்றன. நான் பிறர் எண்ணமறிதல் முதலிய ஸூக்ஷ்மஅறிவுவிஷயங்களிற் பயின்றிருப்பின், அவனது மனோஎண்ணங்களைச் சொல்லவல்லேன். அவ்வாறு சிலர்சொல்லக் கண்டிருக்கிறேன். இதை மனோவியாபாரம் அல்லது அறிவின் வியாபாரமென்னலாம். அவ்வுடலைத்தாங்கிய சேதனனை நான் காண்கிலேன். ஏன் காணவில்லை. இஃதவன் குற்றமுமன்று. என் குற்றமுமன்று. "சேதனன்" கண்ணிற்கு விஷயமாகான் "ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா நாந்யைர்தேவைஸ் தபஸா கர்மணா வா" என்ற வசனப்படி இந்திரியாதிகளுக்கு விஷயமாகாத ஜீவனை எவ்வாறு அவ்விந்திரியாதிகளுக்கு விஷயமாக்குவது. சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸகந்தாதிகளும் கண், காது, முதலியவைகளும், சேதனாத்மாவுக்கு விஷயமாகும. சேதனாத்மா இவைகளுக்கு விஷயமாகாது. இவ்வாத்மாவே கண்முதலியவைகளுக்கு விஷயமாகாதாயின், பரமாத்மா எவ்விதமாக கண்ணுக்கு விஷயமாவன். "த்ருஷ்டாந்த ப்ரதீதி தத்ர ஜீவாத்ம பரமாத்மனோ:"— "காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற், காணவுளத்தைக்கண்டு காட்டலின்" என்று சிவஞானபோதம போதிக்கின்றது. முழுதும் பார்ப்பவனை முழுதும்அறிபவனை எவ்வாறுஇந்திரியாதிகளுக்கு விஷயமாக்குவது.

"கேநகம் விஜாநீயாத் யேநேதம் ஸர்வம் விஜாநாதி தம் கேந விஜாநீயாத் விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் ந த்ருஷ்டேர் த்ரஷ்டாரம் பச்யே: ந ச்ருதே: ச்ரோதாரம் ச்ருணுயா: ந மதேர் மந்தாரம் மந்வீதா: ந விஜ்ஞாதேர் விஜ்ஞாதாரம் விஜாநீயா: ஏஷ த ஆத்மா ஸர்வாந்தர:" எவனுலிவைகளை யறிகின்றேமோ அவனை எவ்வாறறிகிறது. எல்லாமறிபவனை எவ்வாறறிவது. கண்ணின்காக்ஷியைக் காண்பவனை எவ்வாறு காண்பது. செவியின் கேள்வியை கேழ்ப்பவனை எவ்வாறு கேழ்ப்பது. மதியின் நினைவை நினைப்பவனை எவ்வாறு நினைப்பது. அறிவின் அறிவை அறிபவனை எவ்வாறு அறிவது. "அவ்வாத்மாவே எல்லாவற்றிலுமுள்ளான்" என்று பிருகதாரணியம் கூறிற்று. இவ்வுண்மையை ஸ்ரீமாணிக்கவாசகசு

"நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினாற்
றினைத்த னையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
யனைத்து லகு மாய நின்னை யைம்பு லன்கள் காண்கிலா
வெனைத்தெ னைத்த தெப்பு றத்த தென்றை பாத மெய்தவே."

என்றுபதேசித்தார்.

பின்னவனை யெவ்வாறுதான் காண்பது? "அத ஹைநமுஷஸ்தஶ்சாக்ராயண: பப்ரச்ச யாஜ்ஞவல்க்யேதி ஹோவாச யத்ஸாக்ஷாதபரோக்ஷாத்ப்ரஹ்ம ய ஆத்மா ஸர்வாந்தரஸ்தம் மே வ்யாசக்ஷ்வ" என்று யாக்ஞவல்கியமுனிவரை ஸர்வத்திலுள்ளிருக்கும் பரமாத்மாவை யருளிச் செய்கவென்று சாக்கிராயணர் கேட்டகாலையில் "ந த்ருஷ்டேர் த்ரஷ்டாரம் பஶ்யே:" என்று ஆரம்பித்து "ந விஜ்ஞாதேர் விஜ்ஞாதாரம் விஜாநீயா ஏஷ த ஆத்மா ஸர்வாந்தர:" காக்ஷியைக்காணுமொருவனை எப்படிக்காண்பது. அறிவையறியு மறிவுடையானை எவ்வாறு அறிவது - அவன் "ஸர்வாந்தரன்" (எங்குமுள்ளான்) என்று விடை பிறந்தது. இதில் "ஸாக்ஷாத் அபரோக்ஷாத்பிரம்மய ஆத்மா ஸர்வாந்தர:" என்றபகுதியால் ஸர்வாந்தரனுயுள்ள பரமாத்மாவான பரப்பிரமம் அபரோக்ஷத்தாலறியத்தக்கதென்று வெளியாயிற்று. பரோக்ஷஞான மெனில் இந்திரிய துவாரா அறியுமறிவாகும். அபரோக்ஷஞானமெனில் அறிவிலூறுமன்பினுல் (அவ னருள்தன்னை) விழுங்கிக்கொள்ளத் தானனுபவிப்பது. இதையே "ஸர்வமாத்மைவாபூத்தத்கேந கம் ஜிக்ரேத்" எ6

தாரம் அரே கேநவிஜாநியாத்" என்று "எல்லாமாய்நின்று எல்லா வற்றையுமபார்த்து, அறிந்துநிற்கும் பேறறிவாளனை எவ்வாறறிவது என்றது, உபநிடதம். "ஸர்வமாத்மைவாபூத்" என்றதையே மணிவாசகப்பிரான் "அனைத்துலகு மாயநின்னை யைம்புலன்கள் காண்கிலா" என்று திருவாய்மலர்ந்தார். அபரோக்ஷத்தினுலேயே யறியத் தகுந்தவன் பிரானென்பதை,

"புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக வன்பு நின் கழற்கணே
புணர்ப்ப தாக வங்க ணாள புங்க மான போகமே."

என்று மாணிக்கவாசகமூர்த்தியே யெடுத்திசைத்தார். "ஹேதுவதேஶமஹிம்ஸம் யதஸ்தவ பரோக்ஷம் ப்ரவக்ஷ்யதே" என்றும், "அபரோ

க்ஷாவாநந்: ஸ்ரோத்ராதநவநா த்ருஷ்டி" என்றும் பெறப் பட்ட திவ்வியாகமவாக்கியங்களால் ஹேதூபதேசாதிகளால் பெறப் படுவது பரோக்ஷமென்றும், " அன்பினாலவனை யன்புமயமாயிருந் தனுபவிப்ப தபரோக்ஷமென்றும் பெற்றேம்.

இவ்வுண்மையே சிவஞானபோதத்தில் " ஜ்ஞாத்ருத்வம் ஜ்ஞேயத்வ வோ ஜ்ஞாத்ருத்வஞ்ச ஜ்ஞேயத்வஞ்ச | ஸம்ஸாரஸ்தஸ்ய சக்திரேகேண ஜ்ஞேயம் ரூபம் விஜ்ஞாநயா:" " உணர்உரு அசத்தெனின், உணராது இன்மையின், இருதிறன் அல்லது சிவசத்தாமென, இரண்டுவகை யின் இசைக்குமன் னுலகே" என்று 6-ம் சூத்திரத்திலும் "விஜ்ஞாதா நிஜ்ஞேயஸ்ஸம்" "ஊனக்கண் பாசம் உணராப் பதியை - ஞானக் கண்ணிற்சிந்தை நாடி" என்று 9 - ம் சூத்திரத்திலும் பெறப்பட் டது. இதனுண்மை யாதெனின், காணுமறிவாகிய தானும் காட்டுமறிவாகிய பேறறிவு மத்துவிதமாய்க் கலந்து புணர்ப்பதன்றி தனித்தனியாய் பிரிந்து நிற்பதொன்றன்று. ஆற்றாயினும் காணு மறிவு காண்பதேயாகும். காட்டுமறிவு காட்டுவதேயாகும். அதா வது, " ஞாதா " ஞாதாவே, "ஞேயம" ஞேயமே. இவ்வுண்மையே "யதிர்வாஸநாயாஸ்ரூஸே தத்வக்ஷணக்ஷீ தாநு ஜ்ஞாக்வா ஜ்ஞாநேந தேநேவஜ்ஞாதாஹம் ஜ்ஞேயம்ரூபம்ஸ்வ ஜ்ஞாநம்வஸ்வாத் நிஷ்டம் தஸ்யைவைவிஷயம்ஸ்து ||" என்றபடி, ஞேய சிவனை ஞாதா வாகிய தன்னி லனனியமா யனுபவிப்பதாகும். தேவிகாலோத்தரத் தில் "நஸ்தூலம் ஸூக்ஷ்மம் நசூந்யம் ஸர்வகாரணம் வோ ஜகந்நேகரூபம்:" பாசம்போற் ஸ்தூலமுமன்று, பசுவைப் போற் ஸூக்ஷமமுமன்று, அன்றிச் சூனியமுமன்று, பின்னர் ஜகத் துகெல்லாம் பெரியபந்துவாகிய பதி அறிவொன்றையே உருவாக் கொண்டவன் என்றது. இக்கூற்றையே பின்வரும் வேதவாக்கியங் களும் நிறுத்தும் "நஸம்த்ருசே திஷ்டதி ரூபமஸ்ய நசக்ஷுஷா பஸ்யதி கஸ்சநைநம் | ஹ்ருதா மநீஷா மநஸாபிக்லுப்தம் ய ஏநம் விதுரம்ருதாஸ்தே பவந்தி ||" இவனதுருவம் கண்ணினுற்காணப்படுவ தன்று. இவனைக் கண்கொண்டு காண்பதின்று. ஹிருதயத்தினல் யாவர் அறிகின்றார்களோ அவர்கள் அமிர்த ராவார்கள். "ஓம் || கேநேஷிதம் பததி ப்ரேஷிதம் மந: கேந ப்ராண: ப்ரயதி:

ப்ரைதி யுக்த:। கேநேஷிதாம் வாசமிமாம் வதந்தி சக்ஷு: ஶ்ரோத்ரம் க உ தேவோ யுநக்தி" எவனால் ஏவப்பட்டு மனம் பற்றுகின்றது - எவனாலேவப்பட்டு வாக்குகள் பேசுகின்றன - இவைகளைச் சேர்த்த கடவுள் யாவன்? "ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் மநஸோ மநோ யத் வாசோ ஹ வாசம் ஸ உ ப்ராணஸ்ய ப்ராண: சக்ஷுஷஶ் சக்ஷு:" அவன் கண்ணுக்குக் கண், செவிக்குச் செவி, பிராணனுக்குப் பிராணன். "ந தத்ர சக்ஷுர் கச்சதி ந வாக் கச்சதி॥" அங்கு கண் செல்லாது, வாக்குகள் செல்லாது. "யச் சக்ஷுஷா ந பஶ்யதி யேந சக்ஷூம்ஷி பஶ்யதி। ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே" (கேநோபநிஷத்) கண்ணினாலெதைக்கண்டாமோ அது பிரமமல்ல, எவனால் கண்காணுமோ அது பிரமம். "த்ருஶ்யதே த்வக்ர்யயா புத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்ஶிபி:॥" (கடோபநிஷத்) கூர்ந்த புத்தியினால் நுண்ணறிவாளர்களால் அறியப்படும். "தமாத்மஸ்தம் யேऽநுபஶ்யந்தி தீராஸ் தேஷாம் ஶாந்தி: ஶாஶ்வதீ நேதரேஷாம்।" ஆன்மாவிலுறைபவனை எவர் காண்கிறார்களோ அவர்களுக்கே சாந்தியுண்டாகும்.

"திவ்யே ப்ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோம்ந்யாத்மா ப்ரதிஷ்டித:। தத் விஜ்ஞாநேந பரிபஶ்யந்தி தீரா: ஆநந்தரூபமம்ருதம் யத் விபாதி॥" பிரமபுரத்தில் ஆகாயத்தில ஆன்மா தங்குகிறான். அதை புத்திமான்கள் விசேடித்த அறிவினாற் காண்கிறார்கள்.

"ஹிரண்மயே பரே கோஶே விரஜம் ப்ரஹ்ம நிஷ்கலம்,"

நிஷ்களமான பரப்பிரமம் இரண்யமான இருதயகோசத்திற் காணப்படும்.

"ப்ரபஞ்சோபஶம: ஶிவோऽத்வைத ஏவமோங்கார ஆத்மைவ ஸம்விஶதி ஆத்மநாத்மாநம்॥"

ஆன்மாவே ஆன்மாவினால் எல்லாவற்றிற்கும் புகலிடமாகிய பரமான்மாவில் நுழைகின்றது.

"ததேதத் ஹ்ருதயஸ்தம் பாவிதவ்யம்,"

உள்ளிலிருப்பது பாவிக்கத்தக்கது.

"தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம் ॥"

உள்ளிருப்பது தேடத்தக்கது.

"ஸ தம் விஜ்ஞாய நித்யோ தேவாத்மஸம்ஸ்தம் ।"

என்று மான்மாவிதுறைபவனை அறியத்தகுந்தது.

"ஜ்ஞாநம் தத்ஸம்ருதம் யேநம் பரிபச்யந்தி தேவம் ஸூக்ஷ்மம் பராத்பரம் யேந பச்யேம் । ஸாதிதேவம் ஸத்யரூபம் ஜ்ஞாநம் சிவதத்த்வமேவ ஹ:"

எண்ணத்தால் அடையத்தகுந்த சிவதத்வம் ஜடமன்று, வெகு சூக்குமமானது.

"ஸாவதந்தம்" எண்ணத்தாலடையத்தகுந்தது. எனப் பல வசனங்களெழுந்தன.

இதனாற் பெறப்பட்டது யாதெனின், கண்ணினாற் சில வஸ்துக்களினுண்மையை யறிகிறோம். காதினாற் சில வுண்மைகளை யறிகிறோம். கண்ணாற் காணத்தக்க வுண்மைகளைக் காதினா லறியமுடியாது. அவ்வாறே மனதினா லறியத்தகுந்த வுண்மைகளை இந்திரியங்களா லறியமுடியாது. திரஷ்டாவாகிய வான்மாவைக் கரணாதிகளா லறியமுடியாது. ஆன்மாவை யதன்றன்மையாகிய அறிவினா லறியலாம். அறிவினாலறியவேண்டிய வொன்றை இந்திரியங்களா லறிய முடியவில்லையேயென்று கூறுதலடாது. எதனெதன்றொழில்களெதற்கமைந்ததோ அவ்வாறுதான் நடக்கும். ஸ்வச்சமான அறிவானது கடவுளைப்பற்றவும், அவனைப்போற்றவும், "ஸர்வேச்வரன்" என்றுசொல்லவும், மனந்தாழவும், இவ்வுடலையே மறந்துன்னததிசையினிற்கவும், தன்மைவாய்த்து அப்படியே தொன்றுதொட்டுப் பலகோடி மாந்தர்களவனை வழிபட நூல்களையும், கோயில்களையும், குரு சிஷ்ய பரம்பரைகளையுங்கொண்டு குணப்படுகின்றார்கள். பலவித நியாயங்களும் பலவித ஒழுக்கங்களும், பலவித அன்பைக் காட்டு மறச்சாலைகளு மவ்வோருவன்றன்னையேபற்றி இவ்வுலகில் ஆதிகாலமுதல் நிகழ்கின்றன. மதங்களினாற் சில கேடுகளுண்டாயிற்றென்று சிலமாந்தர் கூறுவ தவர்களறியாமையையே தெரிவிக்கின்றது. ஒருமதஸ்தன் வேறொருமதஸ்தனைக் கொலைச் செய்யும்போதும், வருத்தும்போதும், கடவுளையும், மேனோக்கங்களையும் வேண்டுமென்றே கைநழுவவிட்டு இவ்வுலகவாழ்க்கைக்கும், செல்வாக்குக்கும், அரசுரிமைக்கும், ஆற்றலுக்கும் இரத்தவெறிக்கு மடிமை

யாகித் தீயகுணங்களுக்குத் தாஸனுகிப்புரிந்தார்களேயன்றி வேறல்ல. இவ்வுண்மையை யறியமாட்டா மாந்தர்களே கடவுளேயும், கடவுளேப் பற்றிய மார்க்கங்களேயுங் குறைகூறுவார்களென்க. கடவுளுண்டெனு ஞானத்தால் என்றும் நன்மைகளே விளைந்தன. விரிக்கிற் பெருகும். இவ்வாறறிவினுற் கடவுளேப் பற்றத்தக்க தண்டன்மைகளே யிறைவ னெம்மிடமமைத்துளான். அது கெடாவண்ணம் பாதுகாப்பதே எம் முக்கியச்செயலாகும். அவன் அறிவிததாலன்றி யறியாவுளங் களாகியயாம் அவனே அன்பினு லறிவிற பற்றுவதன்றிக் கண்ணுக்கு விஷயமாகும் கல்கட்டைகளேப்போன் றெவ்வாறு காண்பதாகும்? எம்மிலந்தர்ப்பூதமாய்நின்று எம்மை எமக்குக்காட்டு நாதனே சுட் டற்ற சுகாதித நிலேயிலே யனுபவிப்பதன்றி எமமாற் சுட்டி யறியப் படும் பாசஜாலங்களேப்போல எவ்வாறறிவது? ஓர்கால் பிரமசமா ஜத்தலேவாகிய "ராஜாராம் மோஹனராய்" என்பவர் கல்கத்தாவி லிருநதகாலேயில, ஒருத்ஸவத்திற் பல இந்துக்கள் விககிரகங்களேத் தூக்கிசசெல்லுஞ் செய்தியை யவருடைய நண்பர்க ளவரது காதிற போட்டபோது, அவர் "ஐயகோவென்று தேமபி யழுதுக் கண்ணீர் வடித்தாராம் மோஸஸ், மகம்மது, நாநக், தயாநநதர் முதலிய வன்பர்க ளிக்காரணம்பற்றியே விக்கிரகாராதனையைக் கண்டு மனம் வெதும்பினுர்போலும். இறைவனேக் கண்ணுறகாண விரும்பினேர் இறைவனேப் பாசமாக்க விரும்பினதாகும. அன்னேர் "ஊனக்கண் பாசம், உணராப்பதி" என்பதை யுணர்வாராக.

மரமசைதல் முதலிய காரியத்தைக்கண்டு காரணமாகிற காற்றை ஸ்பர்சேந்திரியத்தா லுணர்வதுபோலவும, தேக மீடுபடல் முதலிய காரியத்தைக் கண்டுக் காரணமான இனிய கானத்தின் செய்கை யீதென்று செவியினுலுணர்வதுபோலவும், மிகவும் விசித்திரவமைப் பாகிய காரியத்தைக்கண்டு, இன்னின்ன திவ்வா றமைக்கப்படவேண் டுமென்று முன்னுணர்நதமைத்த காரணனை முதல்வனேச் செவ்வறி வினுற் பற்றுவோம். புத்திமாணுகிய வொருவனுலேயே முன்னுணர் ந்து நடத்தவேண்டியவைகளே நடத்துவதைக் கண்டிருக்கிறும். எமக்குப் புறம்பேயுள்ளவைகளே யிந்திரியாதிகளாற் கண்டேம். எமக்குள்ளிருந் தெல்லாவற்றையு மெமக்குக்காட்டும் முதல்வனே அறிவினுலன்றிப் பின் னெவ்வாறுதா னறிவது?

"உலகத்தில் புத்திமானெருவனே இன்னின்னகாரியம் நிறைவே றுமபொருட் டின்னின்னவிதமாகத்தான் செய்தல்வேண்டுமென்ற

முன்னுணர்வுடன் செய்வதைக் கண்ணுற்றேம். அசேதனங்கள் அவ்வாறுசெய்யக் காண்கிலேம்: ஆயினிப்புத்திமானுந் தேகேந்திரி யகாரணங்களைக் கொண்டல்லவோ செய்யக்காண்கிறேம்” எனின் கூறுதும். இவ்வாசங்கையை மிருகேந்திராகமமே “காயாத்யம்ஶரீரயாக்கேந க்ருதா வ்யாப்ருதம்ஸ்வதேஹவத் I யோகேவ வீக்ஷதா த்ருஷ்டம் க்ருத்யம்யோவ்யாஸ்வதாதிவத்” என வெடுத்திசைத்தது. இவ்வினை வையுற்றநோக்கின் இறைவன்கண்ணுக்கு விஷயமாகவில்லையே என்று ஏங்கியவன் “இறைவனைப்” பாசப்பொருளாக்க நினைந்தது போன்று, இவ்வாசங்கைநிகழ்த்துவோ னிறைவனைப் “பசு” வாக்க நினைந்தவனுவன். பசு அல்லது ஜீவன் விஷயத்திற்கூட, ஜீவன் தநுவாதிகளைப் பெற்றபின்னர் அதனது சந்நிதியில் உச்வாச நிச்வாசம, நிமேஷோன்மேஷம, முதலிய பலதொழில்கள் பிரயத்னமின்றி நிகழ்வதைக் கண்ணுற்றோம். மற்ற தசேந்திரியாதிகளாற் செய்யப்படுவன வற்றைமாத்திரம் கருவிகரணாதிகளைக்கொண் டியற்றுகின்றதென் றுணர்ந்தேம். இவ்வாறு ஜீவனுக்கு ஏற்பட்டகாரணந்தான் யாதோவெனின், முன்னரே யாங் கூறியவாறு “ஆத்மா மலாவிருதன் அம மலத்தைச் சேதிக்கும்பொருட்டும் அதனிச்சா ஞானக்கிரியைகள் விளங்கும்பொருட்டுஞ் சில ஸூக்ஷும தத்துவங்கள் சேர்க்கப்படுகின்றன. இன்றேல் ஆத்மாவே யில்லையென்றுசொல்லுந் தன்மையிலேயே நிற்கின்றது. ஸ்ரீ பௌஷ்கரத்தில்,

“தத்ராயம்ஸம்ஸாரீ பும்ஸாம்ஸாத்யாதிகர்மவிதி: I யதோ தாவிநாயத்வேஷாம் ஸம்வேத்ருத்வமவிஸ்ருதி I தத்வேந்த்ரியம் ஸம்வ்யாஸ வேத்ருத்வஸம்விநா I ருஹணாஹாவதஸ்தத்ர ராஹஸம்வேத்ருவஸ்வீத:” என்றும், பராக்கியையில் “ஸ்வரூபவித வேத்ருத்வ: வித்யாதிபிரதோராக: I ராகணாம்ஜிதஸாவிலை ஸ்யாதிகாரணையத:” என்றும், வாயுஸம்ஹிதையில் “த்ருக்கியாவ்யம் ஜிகேவித்யாகலோரா: வ்யவதக: I காலோவலேதகஸ்தத்ர நியதிஸ்ந நியாதிகா” என்றும் காலம், நியதி, கலை, வித்தை, ராகமாதி ஸூக்கும தத்துவங்களினாலேயே ஆத்மாவிற் காத்மதத்தன்மையாகிய சைதன்யப் பிரஸாரமுண்டாயினமை வியக்தம்’ இவ்வாறு இத் தத்துவங்கள் சேர்க்கப்பட்ட பின்பு ஆன்மாவினது நிஜஸ்வரூபமான கிஞ்சிஞ்ஞதை வெளிப்பட்டது. இக் கிஞ்சிஞ்ஞதைக்குத் துணை சேர்ந்தாலன்றி அதனது இச்சாஞானக்கிரியைகள் முற்றுப்பெறு

வெனக்கொண்டு அந்தக்கரண, ஞானேந்திரிய, கர்மேந்திரியாதிகள் சேர்க்கப்பட்டன. அதனாலிச்சா ஞானக்கிரியைகள் விளங்குகின்றன. எமக்கிவைகளைத் தந்தருளுகின்ற பேரறிவாளனாகிய ஸர்வேச்வரனுக்கு எற்றுக்கோவித்துணைகள்? அவனது சைதன்யமும் ஜீவசைதன்யத்தைப்போல் மலப்பிணிப்புடையதோ? "மாயைதான் மலத்தைப்பற்றி வருவதோர் வடிவமாகும்" என்றார் பெரியார். மலமிருந்தாலன்றோ முதல்வனுக்கு மாயையிற் றநுவாதிகளும், அவைகளைப்பெற்ற பின்னர் இச்சாஞானக்கிரியைகளின் நிகழ்ச்சியும் வேண்டப்படும். வாயுசம்மிதையில், மலப்பிணிப்பினாலேயே ஜீவனுக்கு விஷயங்களை யறிவதற்கு மாயையிற் றநுவாதிகள் வேண்டப்பட்டமையும், அஃதின்மையால் சிவனுக்கவை வேண்டப்படாமையு மோரிடத்திலேயே குறிக்கப்பட்டுள்ளன.

"ஆணவாஜ்ஞானவிச்சித்யை கிஞ்சித்கர்த்ருத்வஸித்தயே | க்ருதா ஸாவிநாஸாமாந்யஸ்ய ஸ்வாக்ஷாநமேஷத: | காலோபேண ஜ்ஞானக்ரியாவரோத்யக்த: | கலாவித்யாதயஸ்தஸ்ய ஸர்வாய ஜ்ஞானஹேதவ: | யத்ருச்சாவஸிதம் ஸத்தத்தகாஸ்ய ஶிவ: | நாநாத்மநேவஜ்ஞானாதிகலாஸ்ய ஸர்வஜ்ஞஉச்யதே ||" என்பதனாலறிக.

எனக்காத்மாவெனப் பெயரமைந்தது "வசித்திட வரும் வியாபியாய்" இவ்வுடலில் எனக்கு வியாபகம் ஏற்பட்டு .தேகஸ்பந்தனம் முதலியவைகளை என்னிஷ்டப்படி யான் செய்தல் கூடுமாப்போல, ஸர்வேச்வரன் எங்கும் வியாபியாகி எல்லாஞ்செய்ய வல்லவனாதனோக்கி யவன் பரமாத்மா எனப்பட்டான் யான் செய்வதென்பொருட்டு. அதாவது ஸ்வப்பிரயோஜனக்கருதி. அவன் செய்வதுமென்பொருட்டேதான். ஆனால் அது பரப்பிரயோஜனத்தின்பொருட்டு. "த்ருணாதிஶிவபர்யந்தம் விஶ்வஸ்யாதிக்ரமக்ரம: | ஸந்நிக்ஷு க்ருபயா ஸித்யதி வர்த்ததே || ஸர்வகாருண்யதோ ஸர்வஶ்ரேயோவிதாயினே" "புல்முதல் சிவதத்துவம் வரையுள்ள விச்வத்தின் கிரமமானது சிவசக்திகளினுடைய சந்நிதியிற்றானே நடைபெறுகின்றது. எல்லாவற்றையுந் தன்னிடங்கொண்டு எல்லோர்க்கும் நன்மையை விளைவிக்கிறார்கள்" என ஈச்வரசொரூபம் வெளியா

பெருமானாகிய பேரறிவன் சந்நிதியிலேயே எல்லா வுலகமுஞ் சேஷ்டிக்கின்றது. எல்லாந் தத்தந்தொழில்களை நடத்துகின்றன. சூரியன், ஸமுத்திரங்கள் மேகங்கள், ஆறுகள், நதிகள்—எல்லாம் அவன் புகழைக்காட்டி எமக்கே யுதவுகின்றன. சூரியன், சந்திரன், ஓஷதிகளெல்லா மவன் பெருமையைக்கூறி யெமக்குப் பிரயோஜனத் தைச் செய்கின்றன. அவனெங்கு மிருப்பதனாற்றான் எல்லாமிருக்கின் றன; இயக்குகின்றன. அவனுடைய கிரணமரீசிகளே யெங்கும் பரவி நிற்கின்றன. ஒரு ஸமுத்திரத்தில் மீன் முதலிய ஜலசரங்க ளெவ்வா றுயிர்வாழ்கின்றனவோ, எவ்வா றவைகளுக்குப் புகலிடம் வேறி ன்றோ அவ்வாறே அவனது கிரணமரீசிகளாகிய மகா சமுத்திரத்தில் எக்காலத்து மெத்தன்மைத்தும் எல்லா முயிர் வாழ்கின்றன. இல்லா விடினிருத்தலே யமையாது. அவைகளவைகளின் றொழில்களை யியற்றா. இஃது ஜீவலோகமாகாது ஆதியில் கேவலம் ஜடமாத்திர மிருந்துழி (பூதங்களாகவோ அல்லது பரமாணுக்களாகவோ, அல்லது பராகாசமாகவோ இருக்கட்டும்) அவையப்படி யப்படியே யிருக்கவேண்டுமே யொழிய பரிணாமாதிகளையும், சலனாதிகளையுங் கொண்டு சாதக சாத்தியங்களா யமையா. ஜீவனு மொன்றையு மியற்றாது. எம்மறிவு மவனைப்பற்ற நேரிடாது; இது சத்தியம், சத்தியம், சத்தியம்.

இப் பெருமசோததிக்குத்தான் பரமவியோமம் என்றும் சிதா காசமென்றும், சிதம்பரமென்றும், பெயர். இதிலேயே பஞ்சகிரு த்தியங்களும் நிகழ்கின்றன. இவ்வுண்மையையே "தைத்திரீயம் கோஹ்யேவாந்யாத்க: ப்ராண்யாத்யதேஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்" "இவ்வாகாயம் ஆநந்தமல்லாவிடின் எவன் நிலைபெறுவன், எவனுயிர் வாழ்வான்" என்றது.

"ஸவா அயமாத்மா ஸர்வேஷாம் பூதாநாமதிபதி: ஸர்வே ஷாம் பூதாநாம் ராஜா தத்யதா ரதநாபௌ ச ரதநேமௌ சாரா: ஸர்வே ஸமர்பிதா: ஏவமேவாஸ்மிந்நாத்மநி ஸர்வாணி பூதாநி ஸர்வே தேவா: ஸர்வே லோகா: ஸர்வே ப்ராணா: ஸர்வ ஏத ஆத்மாந: ஸமர்பிதா:॥" இந்த ஆத்மா எல்லாப் பூதங் களுக்கு மதிபதி. எல்லாப் பூதங்களுக்கும் அரசன் எவ்வாறு ரதத் தின் ஆரக்கால்கள் சக்கரத்தின் உடற்கட்டையிலும் நேமியிலும் பற்றி நின்று சுழல்கின்றனவோ அவ்வாறே எல்லாப் பூதங்களும்,

எல்லாத் தேவர்களும், உலகங்களும், எல்லாப் பிராணிகளும், இந்த எல்லா ஆத்மாக்களும் நிலைபெறுகின்றன" என்று பிருகதாரணியகம் கூ.

" ஸஜ்ஞ்ரூம் விஸ்ருஷ்டவாஹநீநு காரணைநா ஸ்வஶக்திஸா ।
கரோதிஸர்வதா க்ருதாந்யதாயதாவவஸ்தித ॥" இவ்வாறு தடையற்ற வல்லமையுள்ள கருவிகாரணங்களாகிய ஸ்வசக்திகளால் பஞ்சகிருத்தியங்களையும் எச்சமயத்திற் கெவ்வாறு செய்யவேண்டுமோ அவ்வாறு எப்போது மியற்றுகிறார்" என ஆகமம் போதித்தது.

சற்றுமுன்வரை மேற்றிசையிலுள்ள சில பௌதிக சாஸ்திர வல்லோர் கூறிவந்தது யாதெனில் "ஜடமேயிருந்ததாம். அந்த ஜடத்திற்குப் பல சத்திகளுண்டாம். அப் பல சக்திகளுமொன்றை யொன்று முட்டிக்கொண்டுக் கடைசியில் இவ்வத்புத வமைப்பை அறிவின்றியே யுண்டாக்கியதாம். இஜ்ஜடசத்தியே எப்படியோ முட்டி மோதிக்கொண்டு ஒரு சிறு அறிவைத்தாங்கி நகரும் ஒரு சிறு ஜந்துவை யுண்டாக்கிற்றும். இதனோடு நிற்காமல் இவ்வாறு பல ஜந்துக்களுண்டாயினவாம். இப் பல ஜந்துக்களும் முட்டி மோதிக் கொண்டு அதைவிடச் சிறிது அறிவிற்சிறந்த ஒரு பிராணியை யுண்டாக்கினவாம். இப்படியே பல அறிவுடைப்பிராணிகளுண்டாகி, முட்டி மோதிக்கொண்டு அதிலுஞ் சிறந்த ஒரு அறிவுள்ள பிராணியை யுண்டாக்கிற்றும். இப்படியே வெகுதூரம்வரையிற் சென்று வெகு அறிவின்பேதங்களை யுண்டாக்கிக் கடைசியில் அறிவிலும் அன்பிலுஞ் சிறந்த மனிதனை யுண்டாக்கினதாம்." அறிவும் அன்புமுள்ள பிராணிகளை யுண்டாக்கிய அந்தச் சக்திமாத்திரம் அறிவற்றதாகவும் அன்பற்றதாகவும் இருககவேண்டியதென நாம் எண்ணவேண்மோம். இவையெல்லாம் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொண்டு நிலைத்தவைகளாம். யாங் கூறுவது யாதெனின், ஒரு சக்தியே யூடுருவிச் சென்று அவைகளை ஒன்றோடொன்று புணர்த்தியும், சுற்றச்செய்தும் ஏவிநடாத்தியது உண்மை அவ்வொரு சத்தியே அறிவையும் அன்பையும் மேன்மேலும் வளர்த்து உயர உயரச்செய்ததும் உண்மை. ஆனால் அச் சக்தி ஜடமுமன்று; அன்பற்றதுமன்று. அன்பிற்கும் அறிவிற்கு முறைவிடமான பேரறிவும் பேரன்புமுள்ள அருட்சத்தி. அஃது அறிவு கொண்டும் அன்புகொண்டும் நன்றாய்த் தெரிந்து நம்மை வேண்டு மென்றே கைதூக்கி நம்மைக் காப்பாற்றுகின்றது. இல்லாவிடினிருக்க விருக்க உயர்வானேன்? அன்பும் அருளும் அறிவும் விருத்தியாவ

னேன்? அச்சத்தியின் சிறுகாரியமாகிய யாமே நம்மின் மெலியாரை நோக்கி அன்பு மறிவுங்கொண்டே கைதூக்கி விடவேண்டுமென்னும் பூர்ண எண்ணங்கொண்டு புரியவில்லையா? நாம் பிறக்கும்போதே நம்முணவிற்குத் தாயினது அமிர்தகலசம்போன்ற ஸ்தனங்களிற் பாலை நிறப்பிவைத்த பெருங்கருணையைக் கருணைசத்தியன்றென்போமா! இவ்வாறே எல்லாவிதக் கருவி காணங்களையும் அமைத்த ஒரு கிருபாசக்தியை அன்பற்றதென்போமா! அல்லது அறிவற்றதென்று தான் கூறுவோமா! அறிவை வெளிப்படுத்துவதுடன் ஒவ்வொரு அமைப்பும் அன்பையுமன்றோ தெரிவிப்பது. அச்சத்தியின் அன்பல்லவோ முந்தி நிற்கக்காண்கிறோம். ஆகையா லச்சத்தி அருட்சத்தியேயன்றி வேறன்று. இவைகளைக்கூர்ந்து சித்த சமாதானத்தோடு கவனிப்பின் உண்மை விளங்கும். ஆதிமுதலச் சத்தியினோக்கம் "உயர்விக்க வேண்டுமேன்பதே. அன்பையே வளரச் செய்யவேண்டு மென்றும், அறிவை விளங்கச்செய்ய வேண்டு மென்றும் நோக்கத்துடனேயே அறியாமையை அறிவிற்குணவாக்கியும், கேவலம் பாகுபலத்தை அறிவு பலத்திற்கூறுகாயாக்கியும், மறத்தை யறத்திற்குணவாக்கியும் வருகின்றது. குரூரம் முதலிய குணங்களைக் கொண்ட மிருகத்தன்மையெல்லாம் அன்புள்ள மாந்தர் தன்மைக் கடிமையாகின்றதல்லவா? சர்வ சகோதரத்வம், சர்வ சமாதானத்வம் முதலிய எண்ணங்களல்லவோ மாந்தர்பால் தேறுகின்றன. இவைகளை யாங்கவனிக்கும்போது — (நன்று யூன்றி விசாரிக்கும்போது) நம்மை வாழ்விக்குஞ் சக்தியினுடைய ஏற்பாடு (Plan) பேரறிவினுலும் பேரன்பினுலு மேற்பட்டது வெளியாகும். இதனுலேயே "அருளது சத்தி யாகும் அரன்றனக் கருளை யின்றித், தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை, மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட், கிருளினை யொளியா லோட்டும் இரவியைப் போல வீசன்" என்றார் எமது ஞானசாரியர். "அருளெங்கு மான வளவை யறியார், அருளே நுகரமு தானதுந் தேரார், அருளாங் கருமத்தி னதிசூக்க முன்னார், அருளெங்கும் கண்ணனை தாரறி வாரே" என்றார் திருமூல யோகிகளும்.

இத் திருப்பாடலில் "கிருபாநோக்கமே யச்சத்தியின் அளவை என்றும், அக் கிருபையையே எல்லோருமடைந்து அனுபவிக்கின்றார்களென்றும், அதிஸூக்ஷ்மமாக எல்லாத் தொழில்களினுங் காருண்ணியத்தையே கருத்தில்வைத்து இச் சத்தி நடாத்துகின்ற

தென்றும் தோன்றிய விப்பிரபஞ்ச முழுமையிலும் அச்சத்தியின் கருணையையே காணலாமென்றும். திருமூலநாதனருளினு லுணர்த்தினர்.

இம்மட்டோ! அருளிலே பிறந்தோம். அருளிலே வளர்ந்தோம். அருளிலே யிளைப்பாறினோம். (இதையே மரணமென்பர் ; இதையே அழிப்பிளைப்பாற்றல் என்றும், "ஸவிநாஶம் ஸவிஶ்ராநாம் விஶ்ராந்திரேவ" என்றும் வரும் அநுபூதிவாக்கியங்கள் விளக்கும். ஈண்டு விரிக்கிற் பெருகும்) இவ்வுண்மையையே ஸ்ரீ மூலநாதர் ;

"அருளிற் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளி லழிந்தி ளைப்பாற்றி மறைந்திட்டு
அருளான வாரமுதத தானந்த மூட்டி
அருளா லென்னந்தி யகம்புகுந் தானே"

என்றருளிச்செய்தார். ஆன்மாக்களுக்காக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல, அருளல் என்பன அருளினுலேயே நடக்கின்றன வென்பதை திவ்வியாகமங்கள் விளக்கும "ஸர்வாநுக்ரஹோ நராயம் ஹியஞ்ஜா பரிபூர்ணதநோர்ப்ரபோ:" (பௌஷ்கரம்)

(1) ஶிவஸ்ய பரிபூர்ணஸ்ய பராநுக்ரஹஶாலிந: ।
நகிஞ்சிதபி கர்த்தவ்ய மிதிஶாஸ்த்ரே விநிஶ்சிதம் ।
பரம் ஸர்வாநுக்ராஹ்யம் பஶுபாஶாத்மகம் ஜகத் ।
பரஸ்யாநுக்ரஹாயார்த்தம் பத்யாராஜ்ஞா ஸமந்வய: ।
பதிராஜ்ஞாபக: ஸர்வாநுக்ரஹணாதி ஸர்வதா"

(வாயு - பூர்வ)

(2) பரிபூர்ணஸ்ய ஸர்வாத்மநோ ஸ்ருஷ்ட்யாதிப்ரயோஜநம்
பராநுக்ரஹணம் த்வஸ்ய ஹ்யம்ஶஸ்ய கர்ண: ॥

(வாயு - உத்தர)

(3) க்ருத்யப்ரயோஜநாபாவே பராநுக்ரஹணம் விநா ।
ப்ரயோஜநம் ஸமஸ்தாநாம் கார்யாணாம் பரமேஶ்வர: ॥

(பூராணம் - உத்தரம்)

"பராநுக்கிரகத்தின்பொருட்டே பரமபதிக்கு எல்லாத்தொழில்களுமேயன்றி, எல்லாம் நிறையப்பெற்ற அவனுக்கு ஐந்தொழிலெற்றுக்கு" என்பனவாதி வசனங்களெழுந்தன.

# ஸைவாகமப்பிராமாண்யம்

இதிலான்மா தன்னைக்காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுக் கடவுளொரு மெண்ணங்கொண்டதென்று சிலர் சொன்னது முண்மையே. "பேரின்பமதாய்ச்செறியும் பொருணீ, நின்னையன்றிச் செறியாப்பொருளுளன்" என்றார் தாயுமானார். இதனால் கைதூக்கும் காருண்யசத்தி அருட்சத்தியேயன்றிப் பௌதிகர் கொள்வதுபோல் ஜடமன்று.

தெய்வகதியாக எந்தப் பௌதிகசாஸ்திரக் குழுவினருட் சிலர் "ஆன்மா வில்லை, ஈச்வரனில்லை, பரகதியில்லை, இருப்பது ஜடந்தான்" என்று கூறிவந்தனரோ அவர்களுள் முக்கியமானவர்களாகிய "மையர்ஸ் (F. W. H. Myers) க்ரூக்ஸ் (Sir William Crookes) ஆலிவர் லாட்ஜ் (Sir Oliver Lodge) முதலிய முதன்மைப்பண்டிதர்களும், ஆத்மவஸ்து பரீக்ஷாவான்களும் (Psychical Research Society) ஆன்மாவுண்டென்று நிஸ்சயித்ததுபோலவே எங்கு மனுஸ்யூதமான சித்சக்தியொன்று தாய்போல் வளர்க்கின்றதென்று கண்டார்கள். ஆன்மா கடவுளுண்டென் றன்னோர் கூறவே ஆஸ்திகர்களுடைய மனங்களித்தது. ஆனந்தத்திலமிழ்ந்தார்கள். பிறரெண்ணமறிதல், (Thought Reading) தூரத்தில் நடப்பவைகளைக்காணல், (Telepathy) தூரத்திலிருப்பவர்களுடனுரையாடல் (Clairvoyance) (Clairaudiance) முதலிய வுண்மைகளும் வெளிப்பட்டன. யாமே "Thought Reading" பிறரெண்ணமறிதல் முதலியவைகளினுண்மைகளை மூவர் நால்வர்களிடம் பிரத்தியக்ஷமா யனுபவித்திருக்கிறோம். உபாஸனையின்பலத்தா லாச்சரியப்படக்கூடிய பல வற்புதங்களையுங் கண்டிருக்கிறோம். இவையனைத்தும் யோகசாஸ்திரத்திற்கண்டகாக்ஷிகளும் ஸித்திகளுமேயாம். சைவாகமங்களிற் றசகாரியங்களில் "ஆத்மதரிசனம், பரைதரிசனம், சிவதர்சனமாதிகள்" அனுபவிக்கத்தகுந்தவைகளாகவே யெடுத்தாளப்பட்டன. இவ்வபரோக்ஷானுபூதியை ஸித்தித்துக்கொள்ள "யோகஞானமியற்றிடென்று" ஸ்ரீமத் - சகலாகம பண்டிதமூர்த்திகள் உபதேசித்தார் கொஞ்சநாளைக்குமுன் இப் பௌதிகக்குழுவினருள் ஒருவர் (Atoms) "பரமாணுக்களென்பன கிடையா. எல்லாம் (Energy) சத்தியே" யென்றாராம். இவ்வாறே ஜோதிவடிவான Radium முதலியவைகளைக் கண்டிருக்கிறார்கள். இஃது சைவசித்தாந்தத்திற்குப் புதிதன்று. இறைவன் "கேவலம் கிரியாசத்திமயமாய் ஸர்வதேஜோமயமாய் எங்கும் பரவியுள்ள பிந்து சக்தியால் எல்லாவற்றையு மியற்றுகின்றாரென்று "வ்யாவ்ருத்தம்கஷயஃ கிம்சிஜ்ஞகாஷ்டா காரகஸ்யிவ்யாஸவபிந்து ரீதிவ்யாதஸ்ய ஸம்ஞ்யா

ஸேத்யஹ: ॥” என்றும் “ப்ரத்யக்ஷாஸேகா வாராயோநிப்ரஸூதஜ: வாரபேச்வரஸ்மிதிதசீஸ்வரஷேஷா ஸேவாஷாநம் ஸமபிம்ஷவாராட்ச। ஸ்வகஸேதுஸஹகாரீஸ்யாக காயதும் ப்ரஸாகதெஹத்ருகஸ்ய ॥” என்று கோடிசந்திரன்போன்ற பிந்துவை உபாதானமென்றும், ஈச்வரனது சக்தியைத் துணைக்காரணமென்றும், ஈச்வரனை நிமித்தகாரணமென்று மாகமங்கூறும். இப் “பிந்து’ வின் ஒளிகளே தேஜோதிதிகளாகிய இந்த சூரியன், கிரகங்கள் இன்னுமனேக பல்லாயிரங்கோடி ஒளிகளு மென்றும் இப்பிந்துசக்தியே ஒன்றோடொன்று சேர்த்து ஆகர்ஷிக் குஞ் சக்திகொண்டதென்று திவ்யாகமங்கள் கூறும்.

இன்னபல வேதுக்களாலறிவின் செய்கையாய இத்தநுகரண புவன போகாத்மமாகிய விப்ரபஞ்சத்தைக்கண்டு காரணனாகிய ஸர்வேச்வரனை ஸித்தமாயறிகிறோம். இவ் வுண்மையையே பராக்கி யையும் “ஸேதத்ஸாவயவாவதா: நாநாரூபவபுஷா: । ஸ்வரூபாவயவஷ்டக்வாக பாஹிஸெஜத ப்வஜ்கா:। ஈசேதாவஸ்த பாஹிஸாது கஸ்தீஸ்வர ஸஸேவஸ்த:॥” பல வுருவங்களைப் பெற்றுள்ள பல வஸ்துக்களும் உருவங்கொண்டவைகளாயும், செயர்க்கைகளாயு மிருப்பதாலும் புத்திமானொருவனு லேற்படுத்தத்தகுந்த தொழில் களைக்கொண்டதாலும், புத்திமானாகிய ஒருவன், ஈச்வரனென்று கூறப்பட்டு, நன்றாய் விளங்குகிறான் என்றது. மிருகேந்திராகம மும் “ஈயொவஹ்யதெஷாதிவஸ்தகாயதுக்வபஸேதுகஸ்ய । கதூராஸே ஸ்யஜாநீஜோவிஶிஷ்டம்க்வநாஸோநத: ॥” தொழில்களுக்குறிய சில தர்மங்களைக்கொண்ட தேகாதிகளையாங் காணும்போது அனுமானத் தினால் இவைகளுக்குங் கர்த்தன் ஒருவனை அறிகிறோம் என்றது. பௌஷ்கரமும், “விஷாநாஸ்யாவஸிதம் விஶ்வம் விஶ்வவிஜ்ஞதவேஷவ கஸ்ய । காரகவாநாவயொஸ்பிஸம் கார்யம் கடம்ஹாதிகம்யதா ॥” “மாந் தர்களுடைய அறிவிற்கு விஷயமாகி, யாதிதுவென்று விசாரணையாகிய விசேஷவாதத்திற் கிடமாயமைந்த யிவ்வுலகமானது, இவ்வுலகத் தன் மைகளை யறிவானொரு கர்த்தாவினது ஆளுகைக்குட்பட்டது. கடம் போன்ற காரியமாகவே நமக்கிருத்தலால் என்க” என்றது. அதாவது கண் காணவும், காது கேட்கவும், அமைந்துள்ளதுபோலவே எல்லா வஸ்துக்களும் பிரயோஜனத்தோடுகூடிய காரியமா யமைந்ததா லென்க.

வேதோபபிரும்ஹணமாகிய வாயுஸம்ஹிதை அடிக்கடி இவ்வுண்மையைப்பகரும். வாயுஸம்ஹிதை பூர்வபாகம் நான்காவது அத்தியாயத்தில் பின்வருமாறு காணப்படுகின்றது.

"अस्ति कश्चिदपरिच्छिन्नरमणीयगुणाश्रयः । पतिर्विश्वस्य निर्माता पशुपाशविलक्षणः । अभावे तस्य विश्वस्य सृष्टिरेषा कथं भवेत् । अचेतनत्वादज्ञानादनयोः पशुपाशयोः । प्रधानपरमाण्वादि यावत्किंचिदचेतनम् । न तत्कर्तृ स्वयं दृष्टं बुद्धिमत्कारणं विना । जगच्च कर्तृसापेक्षं कार्यं सावयवं यतः । तस्मात्कर्तास्य कर्तृत्वं पत्युर्न पशुपाशयोः । पशोरपि च कर्तृत्वं पत्युः प्रेरणपूर्वकम् ॥" "பாசபசுக்களுக்கு வேறுபட்டவனாய் முடிவில்லா வழகிய தன் குணங்களுக் குறைவிடமாய் இவ்வுலகத்தை யுண்டுபண்ணியவனாயுமுள்ள ஒருவனுண்டு. அவனின்றேல் சிருட்டியாதிகள் எவ்வாறு நடக்கும். பாசமோ அசேதனம, பசுவோ அஞ்ஞன், பிரதானம், பரமாணுக்கள் முதலியன (சில மூலபாசங்கள்) வெல்லாம் அசேதனம், புத்திமானொருவனலன்றி புத்தி நுட்பத்தைக் காட்டவல்ல செய்கையைச்செய்யக் கண்டிலேம். பிரயோஜனத்தைத் தரு மிவ்வுலகங் கார்யமாகிக் கர்த்தனொருவனை வேண்டுகின்றது. காரியத்தின் (பாச பசுக்களின்) செய்கையும பதியினுடையதே. பசுபாசத்தினுடையதன்று. பசுவினது (சிறு) தொழிலுங்கூட பதியினுடையதூண்டுதலின் பேரிலேயாம்" என்றது. மீண்டும் அதேஸம்ஹிதை அதேபாகம் ஏழாவது அத்தியாயத்தில்,

"किं तु तत्रापि कर्तृत्वं नाव्यक्तस्यानवात्मनः । अचेतनस्य क्षेत्रज्ञस्य पूरुषस्य च । प्रधानपरमाण्वादि यावत्किंचिदचेतनम् । न तत्कर्तृ स्वयं दृष्टं बुद्धिमत्कारणं विना । जगच्च कर्तृसापेक्षं कार्यं सावयवं यतः । तस्मात्कर्ता स्वतन्त्रोऽयं सर्वशक्तिश्च सर्ववित् । अनादिनिधनश्चायं महैश्वर्येण संयुतः । सर्वज्ञः कर्ता महादेवो महेश्वरः । परिणामः प्रधानस्य प्रवृत्तिः पुरुषस्य च । सर्वं सत्यव्रतस्यैव शासनेन प्रवर्तते ।

[illegible]

கர்த்திருத்வமானது அவ்யக்தத்தினுடையதுமன்று; ஜீவனுடையதுமன்று. பிரகிருதியசேதனமும், புருஷன் அஜ்ஞனுமாகையாலும், மூலமாகிய (ஸாங்கியர்களின்) பிரதானம், (வைசேஷிகர்களின்) பரமாணுக்கள் முதலியவை அசேதனங்களாகையாலுமென்க. புத்திமானொருவனாலன்றி புத்தி நுட்பங்களைக்காட்டவல்ல காரியங்களின் செய்கையையாஞ் செய்யக்காண்கிலேம். பிரயோஜனமுள்ளதும் கார்யமுமாகிய இவ்வுலகம் கர்த்தா வொருவனை யபேக்ஷிக்கின்றது. ஆதலினால் சக்தியையுடையவனும், தன்வசத்தனும், எல்லாம் வல்லவனும், எல்லா மறிபவனும், தோற்றக்கேடுகளில்லாதவனும், பெரியதிற பெரிய ஐஸ்வர்யங்களுக்குறைவிடமாயுமுள்ளவனெவனோ அவனே ஜகத்துக்குக் கர்த்தா. அவனே மாதேவன். அவனே மகேசன். பிரகிருதியினுடைய பரிணாமமும் (தநுகரண புவன போகங்களாகத் திரிதலும்), புருஷனுடைய பிரவிருத்தியும், (நல்லெண்ணம் தீதெண்ணம் ஆகிய எல்லாம்) ஸந்நிஹிதனாகிய யவ்வொருவனுடை ஆணையினாலேயே நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட என்று முண்மையான தீர்மானம் ஸாதுக்களுடைய மனதில் வேரூன்றிப் பொலிவெய்தும். அறிவீனர்களாகிய சில மாந்தர்களே யிவ்வழியைப்பற்றி நிற்பதில்லை" என்று பெறப்பட்டது.

வாயு சங்கிதை உத்தரபாகம் 12 - வது அத்தியாயத்தில், மறுபடியும் பின்வருமாறு காணப்படுகின்றது.

[illegible]

பாம்ஸாம் ஸம்ஸாரஸாகராத் । த்ருஷ்யந்த நிஷ்டுரத்கஷ்ட ஸஹாய விஷயேஷ்வப்ரஹதா: । ஸர்வஜ்ஞ: பரிபாலேன பூர்ண: ஶிவோஜ்ஞேய: ஶிவாகமே ॥"

இந்த ஜகந்நாதன் இன்றேல் ஜகமுழுமையு மிருளிற்கிடக்குமே. (அதாவது பிரகாசமின்றிக்கிடக்கும்; அறிவின்றிக்கிடக்கும்; செயலின்றிக்கிடக்கும்.) ஆதித்தனில்லாவுலகம் பார்வையின்பாற்படாதது போல், ஈச்வானின்றேல் ஜகத்சிருஷ்டி எவ்வாறுண்டாம். பிரகிருதியோ ஜடம், புருஷனோ அக்ஞன், மூலமான பிரதானம் - பரமாணுக்கள் ஜடங்கள், புத்தியுடையவொருவனே புத்திநுட்பத்தைக் காட்டக்கூடிய செய்கைகளைச் செய்யக்கண்டோமன்றிவேறின்று. ஸர்வக்ஞன் ஒருவனிருப்பதாலன்றோ தர்மமிதைத்து, அதர்மமிதைத்து என்றும், இது பாவத்தை விளைக்கும். இது மோக்ஷத்தைப் பயக்கும் என்னும் விசாரணையும் மாந்தர்மனத்தின் கண்ணிகழ்ந்தமைந்து, ஆதிமுதலிவ்வெண்ணங்கள் தொன்றுதொட்டு வந்திருக்கின்றன. முதல்முதலி விவைகள் அவனாலேயே ஏற்பட்டிருக்கவேண்டியது. நோயினால்வருந்துபவர்கள் வைத்தியனாலன்றிக் குணப்படுமாறில்லை போல், இவ்வெண்ணங்களுக்கேற்ப, சிவனாலன்றி இவ்வுலகந் துன்பத்தினின்றுமொழியாது. ஆகையால் ஆதியில்லாதவனாய், எல்லாமறிபவனாய், எல்லாந் நிரம்பியவனாய், என்றும் மங்களமுடையவனாய் (ஸதாசிவன்) எல்லோரையுஞ் ஸம்ஸாரத்தினின்று முற்றிலும் காப்பாற்றுவனாயுள்ள நாதன் ஒருவனுளன். அவன் ஆதிமத்தியாந்தமில்லாதவன், இயல்பாகவே மலரகிதன், பிரபு, ஸர்வக்ஞன், எல்லாந் நிரம்பியவனாகிய அச்சிவன் சிவாகமத்தில் அறியப்படுபவன்.

" அஸ்தி நாத: பரித்ராதா பம்ஸாம்" "மாந்தர்களை முழுவதிலுங் காப்பாறறும் நாதன் ஒருவனுளன்" என்றும், "யதோ யதோவ ஐஶ்வர்யம் யதோக்ஷ விசாரணா । நஸர்வஜ்ஞம்விநா பம்ஸாம்ஸ்திஸரேது ப்ரஸித்தி ॥" "தர்ம மின்னது அதர்ம மின்னதென்பதும், கட்டின்னது (பந்தம்) வீடின்னது (மோக்ஷம்) என்பதும் மாந்தர்களுக்கு எல்லாமறிந்த ஒருவனின்றி. யமைந்திராது" அப்படி யமைந்ததற்குப் பிரயோஜனமு மவனையடைதலின்றி வேறொன்றுமின்று எனு மிவ்வுண்மைகள் மிகவுங் கவனிக்கற்பாலன. "காப்பாற்றுவன்" ஒருவனுண்டென்பதைப்பற்றி முன்னரே யாங் கூறியவாறு, எந்தவொரு சக்தியானது நாம் பிறக்குமுன்னரே- தாயி

னது ஸ்தனங்களில் அமிர்தத்தை நிறைத்துவைத்ததோ, எந்த ஒரு சக்தியானது நமக்கு வேண்டிய வுபகரணங்களைத் தேடிவைத்ததோ, எந்த ஒருசக்தியானது "அன்பு - அருள்" என்னும் எண்ணங்களை எனக்குத்தோற்றுவித்ததோ, எந்தவொரு சக்தியானது தாயினிடத்துக் குழந்தையையும், தகப்பனிடத்து மகனையும், காதலனிடத்துக் காதலியையுந் தங்கள்தங்க ளுயிரினுமதிகமாக வோம்புமாறு செய்ததோ, அந்தப் போன்பிற்பரிந்த சக்தி எம்மைக் கொன்றுவிடுமோ? எமது குழந்தைகளை யாங் கொல்லுவோமோ? அவைகள் சாக என் மனஞ் சகிக்குமோ? ஒன்றுமில்லா ஜடத்தினின்றும் கொஞ்சங்கொஞ்சமாக உயர்த்தியே காப்பாற்றிவந்து வளர்த்த ஒரு பெருஞ்சக்தியானது "எவ்வளவோ ஆசையுடன் வாழவேவிரும்பும்" எண்ணத்தை எனக்குக்கொடுத்தபிறகுங்கூட என்னைச் சூனியமாய் நிர்மூலமாக்குமோ! அதற்காகவா இவ்வளவு அறிவும், அன்பும், எண்ணமும், அலைச்சலும்? ஆழ்ந்துகூர்ந்து யோஜியுங்கள்.

"[illegible]" தர்மம், அதர்மமென்பன பலபிரதாதாவாகியும், புகலிடமுமாகிய ஒருவனையே பொருளாக்கொண்டது. அவனருளாலேற்பட்டது. "முறபகல் விளைத்தாற் பிற்பகல் விளையு" மென்றார் பெரியார். ஆறுமாதத்திற்குப் பின் அறுவடைச்செய்துண்பதற் கிப்போது விதைக்கு மறிவுந் தொழிலுமுடைய மாந்தர்களுடைய நல்வினை தீவினை, நன்மொழி தீமொழி, நல்லெண்ணம் தீயவெண்ணம், நன்னெறி தீநெறி ஆகிய விவைகளுக்குப் பயனின்றோ? ஒவ்வொருசெய்கை மொழி எண்ணமாதிகளுக்குந் தாங்களே உத்தரவாதிகளென் றுள்ளுணர்வுடையார்களல்லரோ மாந்தர்கள். "ஒவ்வொருவரிடத்து மிவ்வுணர்வு" பதிந்து கிடக்கவில்லையா? இயற்கையிலமர்ந்த இவ்வுணர்வுக்கு விரோதமாக அவர்களுத்தரவாதிகளாகாமற் போவரோ? தீவினையியற்றும்போதுந் தடுக்கும்பெருமா னிதற்குப் பயனளிக்கானோ? நல்வினைசெய்யும்போதும் களிப்பெய்தச்செய்யுங் கர்த்தன் பயனளிக்கானோ? இதனால் தர்மாதர்மம், புண்ணியபாபம் முதலியவைகளை (Morality) ஆஸ்திக்யத்தினின்றும் (Religion) பிரிக்க முந்தும் விழலர்கள் சொல் வீணல்லவோ "[illegible]"

என்று மிரக்கம் பாராட்டலும், ஹிம்சை யொழிதலும் மெய்ஞ் ஞானங் கோடலும், உண்மை யுரைத்தலும், களவின்மையும், ஆஸ்திக்யமும் (பரகதி, பரமன், ஜீவன் உண் டெனல்) சிரத்தை பொறி யடக்கல், தியானம் (பிரபஞ்சத்தைக் கண்டு நுண்ணறிதல்) ஈச்வரனுக் குத் தானுறைவிடமாதல், ஞானவொழுக்கம், முதலியவைகளா ஸ்திக்யத்தினோடு சேர்ந்தவைகளே. யோக சாஸ்திர கர்த்தாவாகிய பதஞ்சலி பகவான் நற்குணங்களை ஆஸ்திகத்தின் பாலதாகவே எடுத் திசைத்தார். ஈச்வராராதனைக்குறிய அஷ்ட புஷ்பங்கள் தயை முத லியன. "அதாதோ தர்மஜிஜ்ஞாஸா" "தர்மம் ஜிஜ்ஞாஸமானானாம் ப்ரமாணம் பரமம் ச்ருதி:" தர்மத்திற்குப் பிரமாணம சுருதிதான் என்று கூறிய மனுவே "யோவமந்யேத தே மூலே ஹேதுசாஸ்த்ராச்ரயாத் த்விஜ: | ஸஸாதுபிர்பஹிஷ்கார்யோ நாஸ்திகோ வேதநிந்தக: ||" நாஸ்திகனது தொழிலே அதர்மமென்றார். இவ்வாறே மோஸஸ், மகம்மது, கிறிஸ்து முதலிய மகான்களும் தர்மத்தையும் (Morality) ஆஸ்திகத்தையும் ஒன்றாகவே கண்டு கூறினர். விரிக்கிற பெருகும். ஆதலால் " தர்மா தர்ம விவேசனம், புண்ணியபாப பரிசீலனை முதலியவுள்ள குணங்க ளுக்கு அவைகளை யெம்பார் பதித்த பரமனொருவனே பலபிரதாதா.

ஆனால் ஈச்வரனொருவன் உண்டெனும் ஞானம் சிறிதாகத்தானே மாந்தர்க்கமைந்ததெனின், எல்லோர்க்குஞ் சிறிதாக வமைந்ததென்று சொல்வது பிசகு. ஆயினும் மிகச் சிறிதாகவேனு வமையாத மாந்த ரில்லை. இவ்வுண்மையைச் சைவாகமங்களே செப்புகின்றன. "அஸ்தி நாதோ தேவ்ருகோ மத்புத்திஸம்ஸ்தித:" "நாதனொருவனுள னென்னுஞ் சிறிய பற்றுதலானது புத்தியிலமர்ந்தது" என்று கூறிய தால், இதை மேன்மேலும் விருத்திசெய்து வருவதுதான் நமது முக் கிய கடமையாகும் "வாய்த்தது நந்தமக்கீதோ பிறவி மதித்திடுமின்" என்றார் பெரியார். இச்சிறு வித்து, சிறு முளையைப பிடுங்கி எறிந்துவிடின் பின் விளைவதென்னை? இம்முளையை வெகு ஜாக்கிர தையாய்க் காப்பாற்றவேண்டும். இவ்வுண்மையை ஸ்ரீ பட்டினத் தடிகளும்

உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ
கழப்பின் வாராக் கையற வுளவோ
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரறவகழ்ந்து போக்கித் தூர்வைசெய்

> தன்பென் பாத்தி கோலிமுன்புற
> மெய்யெனு மெருவை விரித்தாங் கையமில்
> பத்தித் தனிவித் திட்டு நித்தலு
> மார்வத் தெண்ணீர் பாய்ச்சி நேர்நின் று
> தடுக்குநர்க் கடங்கா திடுககண் செய்யும்
> பட்டி யஞ்சினுக் கஞ்சி யுட்சென்று
> சாந்த வேலி கோலி வாய்நதபின்
> ஞானப் பெருமுளை நந்தாது முளைத்தக
> கருணை யிளந்தளிர் காட்ட வருகாக்
> காமக் குரோதக் களையறக் களைந்து
> சேமப் படுத்துழிச செம்மையி னோங்கி
> மெய்ம்மயிர் புளக முகிழ்த்திட் டம்மெனக
> கண்ணீ ரரும்பிக் கடிமலா மலர்ந்து

என்பவைகளை மொழிந்து ஒவ்வொரு வாத்மாவினிடத்தும் விதைத்திட்ட "ஈச்வர ஞானமெனும் விதைதை" யெவ்வாற்றானும் முளைக்கச்செய்து அதன் கனியை யுண்ணவேண்டுமென்றுபதே

வேதமும "𑌅𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑍇𑌵𑍋 𑌪𑌲𑌬𑍍𑌧𑌵𑍍𑌯𑌃" உண்டென பற்றத் தகுந்ததென்றும், "𑌅𑌸𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑍇𑌦𑍍𑌵𑍇𑌦 𑌸𑌨𑍍𑌤𑌮𑍇𑌨𑌂 𑌤𑌤𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃"—"தெய்வமுண்டென்போர் தக்கோரே" என்றும்வியந்தது. வேதத்தின் பயனாகிய சிவாகமமும் அவ்வாறேதான் கூறும்.

சிவாகமமுமவ்வாறே "𑌅𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌕𑌶𑍍𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿"—ஆன்மாவொருவனுளன்—"𑌅𑌸𑍍𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌪𑌰𑌾𑌧𑍀𑌨𑌃 𑌸𑌮𑌸𑍍𑌤𑌗𑍁𑌣𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 । 𑌪𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃"—குணங்களுக்கெல்லா முறைவிடமாகிப் பாசபசுக்களுக்கு வேறாய் நின்றிவ்வுலகைத் தந்தருளிய தனிமுதலுண்டு—"𑌅𑌸𑍍𑌤𑌿 𑌨𑌾𑌥𑌃 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑌾𑌗𑌰𑌾𑌤𑍍"—மாந்தர்க்கு மாதேவனொருவனால் மணமிக்க மகிழ்கதி யொன்றுண்டு என்று கூறி அஸ்தி - அஸ்தி - அஸ்தி - என்று ஆஸ்திகர்களதுள்ளங் குளிரச் செய்யும். இத்துணைப் பெரிய வாகமங்களியாவர்க்கு வெறுப்பைத் தரும்! வெறுப்போர் உளரேல் அன்னோர் ஆஸ்திகராவரோ! நாஸ்திகர்களது நலமில் மொழிகளைப் பொருட்படுத்தேமல்லேம். பலவகை நாஸ்திகருள் பசுவைப் பாச மென்பாரும், பதியைப் பசுவென்பாரும், பசுவைப் பதியென்பாரும், சேர்ந்தோரே. அன்னோர் மொழிகளை மதித்தேமல்லேம். பரமாஸ்

திக ஸம்பந்நர்களாய் வாழும் சைவ தபோதநர்கள் வேண்டுவதும் யாதெனின் "𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌶𑍍𑌶𑌠𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌕𑍃𑌤𑌘𑍍𑌨𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑌾𑌮𑌸𑌾𑌃 । 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌾𑌶𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌪𑌾𑌪𑌾𑌶𑍍𑌚 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑍁 𑌦𑍂𑌰𑌤𑍋 𑌮𑌮 ॥" "நாஸ்திகர்கள், துர்ஜநர்கள், நன்றி மறந்தோர், தாமஸகுண முடையோர், பாஷண்டர்கள், எண்ணுதற்குங் கூசுங்கொடும் பாவமியற்றுகின்றோர் முதலினோர் எனக்கு நெடுந்தூரத்தில் நிற்கவும், "𑌬𑌹𑍁𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌜𑌾𑌤𑌯𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌶𑌿𑌵𑍈𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌶𑍍𑌚𑍇𑌤𑍍 𑌸𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍇 𑌮𑌮 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌃 ॥" "பலபல துதி செய்தென். இங்கு மாநதர் யாவரேயாயினும் ஆஸ்திகரேல் அன்னோர் நல்லோரே. அவர்களனைவருமென்னை யாண்டருள்வாராக" என்று வேண்டுவதேயாகும். இக்காரணம்பற்றியன்றோ "அடியார் நடுவுள்ளிருக்குமருளைப் புரியாய்" என்றும் "அடியார்பெருமை யறிந்தாரார்" என்றும் "நின்சீரடியார் தம்மடியார்க் கன்புபூண்டவர் காற்றலையெவலென்றாய்த் தலையேற்று" என்றும் "திங்கள் முடியார் அடியார் அடியோமென்று கும்பிட்டுத்திரியே" என்றும் "சிவனையுணர்மாதவர் தம் பொன்னடிக்கீழ் தாழ்வோம.—எமக்கார் சரி" என்றும் ஆஸ்திகப் பெருஞ் செல்வர்களுறவை வேண்டினார் பெரியார். பேரருட் சத்தியின் அருணலங்களை யனுபவித்துக்கொண்டே அவனை மறந்தும், அவனை யானே யென்றும் புலம்பியழியும புல்லர்களை விட செய்ந்நன்றி கொன்ற மகாரினி யுண்டோ. இக்காரணம்பற்றியே "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர்" என்றார் நந்தாயுமானார்.

மாந்தர்களது முறையீடுகளை மகிழ்ந்து கேட்டருளும் மாண்புடைச் செவியன் ஒருவன் உண்டு என்று அங்கைச் சுட்டுவிரலாற் சுட்டிக் காட்டி ஆஸ்திகர்களெல்லோர்க்கு மாசிரியத்தலைமை வகித்த எம்பெருவாழ்வாம் ஞானஸம்பந்தக் குருமணி ஆஸ்திகத்தை நிலைநாட்டவல்லவோ வந்தனர். எல்லா நன்மைக்கும, எல்லாத் தண்மைக்கும், எல்லா அன்பிற்கும், எல்லா நியாயததிற்கும், எல்லா உயர்திறப்பேருணாவிற்கும் பெருநிலைக்களமாம் ஆஸ்திகமின்றி எதுதான் நிலைநிற்கும். ஆஸ்திகத்தின் ஸொரூப மகிமையை முற்றுமுணர்ந்தவள்ளலாதலின் எங்குருராயன் ஆஸ்திகத்தை நிலைநாட்ட வெழுந்தனர் என்க. ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் எமது குருநாதனையுற்று "வையம் மகிழவும்" "யாம் வாழவும்" வந்தனரென்றும், பெருமான் "அம்ம" வென அழுதது உயிர்கண் மாட்டுவைத்த பெருங்

கருணை என்றும் "அம்மென்குதலைச் செவ்வாய்" என்ற பாசுரப் பகுதியில் வெளியிட்டருளினர். ஆஸ்திகமே உயிர்களது அல்லலினைத் தீர்க்கும் பெருமருந்து, என்று கண்டு "ஆஸ்திகத்தையே (Faith in God) உயிர்கட்களித்தனர். ஆஸ்திகத்தை யளித்து உயிர்களை ஈடேற்றினதையே "வையம் மகிழ யாம்வாழ" என்று நம்பிகளும் "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க, பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத, சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்" என்று அருண்மொழித் தேவரும (ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளும்) திருவாய்மலர்ந்தருளினமை வெறும் முகமனன்றென்பதை "ஸ்ரீ ஞானஸம்பந்தப் பேரருளாளன் மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனைப் பருகினோர்க் கையமறவிளங்கும். பௌத்தர்கள் "இறைவனில்லை யென்றுகூறுவர் என்பதும" சமணர்கள் "உண்டோ இல்லையோவென் றையப்படுவார், என்பதும" பௌத்தர்களது "பஞ்சஸ்கந்த" சமணர்களது "சபதபங்கி" கோட்களுந தெரிவிக்கும். ஸ்ரீ ஞானசம்பநதப் பெருமான் பௌத்தர்களையும் சமணர்களையுங் கடிந்தது அன்னோர்களது நாஸ்திகத்தினின்றும் உலகத்தாரை யுய்விக்கவேண்டியே யன்றி அப்பௌத்தர் சமணர்களது "பொறை யுண்மை" "உயிர்க்கிரங்கல்" முதலிய நீதிகளைக் களையவன்றென்பதை யாமுணரலாம். * "ஈசன் எமையாளுடைய வெந்தைபெருமான் இறைவன் என்றும், தனையே பேசுதல் செயாவமணா புத்தரவா" என்றும, "அத்தகு பொருளுண்டு மில்லையுமென் றுநின்றவர் கச்சமாவொத தொவ்வாமை மொழிந்து வாதிலழிநதெழுந்த" என்றும் புத்தர் சமணாதிகளின் நாஸ்திகத்தை வெளியிட்டார். பெருவள்ளலாகிய காழிப் பெருந்தகையார் தார்மிக குணங்களெங்கு காணப்படினு மவைகளைக் கடிந்தாரல்லர் என்பதை "நீதிபலவுந் தன்னதுருவாம்" என்று கூறிய அற்புதத் திருவாக்கே நிறுத்தும். பெருங்குணங்கள் எங்கு காணப்படினு மங்கு ஈசன் ஸந்நிதியுண்டென்பதைச் செவ்வனே காண்பித்தருளினர். "தேசமதெலாமருவி நின்று பரவித்திகழ நின்ற புகழோன்" என்று எல்லா உலக உயிர்களினு மூடுருவிச் சென்றெல்லா வசேதனத்தையு மசைவித்தும், சேதனத்தை யறிவித்தும் நிற்கும் எம்மிறைவனை யென்றும் எல்லா வுயிர்களும் பற்றி வாழ்த்தியே யுய்யவேண்டியவர்கள் என்பதைத் தெரிவித்தார். இதனால் எல்லா மாந்தர்களுந் தர்மாதி நற்குணங்களினுலடைய விரும்பும் பெரும் பேற்றிற் குறைவிடம் ஈசனென்பதை வெளியிட்டருளினர். பெரு நலங்களுக்கெல்லாம் நிலைக்

* நூற்றுவக்கத்திற்குறித்த தமிழ்மறைப்பாக்களைக்காண்க.

களமாகிய இறைவனை விட்டு இத்தர்மாதிகளுக்குப் புகலிடம் வேறின்றென்பதைச் சைவத்திற் ஸத்யம், சௌசம் முதலிய பல தேக வுறுப்புகளையும், இத்தர்ம குணங்களத்தனைக்கும் உள் நோக்கமாகிய ஆஸ்திகமெனுங் கண்ணையுங் கொண்டு படிந்து கிடக்குந் தார்மிக வான்மாவை வெள்ளை விடையாகவும், அவனது இருதய கமலத்திலாரோகணித்துத் தன்னுணைவழி நடத்தும்பேரறிவும் பேரன்புமாகிய பெருஞ்சோதியை அவ்விடையிலாரோகணித்துநடாத்தும் நாதனாகவும் உருவகம் செய்திருப்பதை ஓதாதுணர்ந்து காழிவந்தருளுங் கற்பகக் கனியின் செந்தேனுருவாங் கவுணியர்பெருமானுளத்துணர்ந்தவாதலின் "தோடுடைய செவியன்" என்று எல்லா ஆன்மாக்களும் பல வழிகளாலும் பல மொழிகளாலுங் கூவியழைப்பதைக் கேட்டருளு மிறைவனையும் அவ்விறைவனே பலவித நற்குணங்களுக்கும் புகலிடமென்பதை "விடையேறி" * என்றுந் தெரிவித்தார். பௌத்தர்களிலும் சமணர்களிலுங்கூட பெரும்பான்மையோர் புத்தனையும் அருகனையும் (ஏனைய மதவாதிகள் அவரவர்களது விக்கிரகங்களை வணங்குவதுபோலவே,) வணங்குவதே தர்மத்தையு மிறைவனையும் பிறிக்கவொண்ணாதென்பதைக் காட்டும். இத்தர்மத்திற்குறைவிடம் பரமாப்தனாய பரமன் என்பது ஸத்தியம் என முழுமுதற்கடவுளே "தர்மாதாரம் [illegible] நஜாநாதிகஶ்சந" தர்மமியற்றுவதற்கு மூலாதாரமாக யானுளன் என்பதை மாந்தர் அறியவில்லையே என்று இரங்கியருளியதை ஸ்ரீ ஸ்காந்தபுராணம் விசதப்படுத்தும். இதற்கு மாறுகக் கூறுந் நூற்கள் யாவும் பொய். அவை தன்னுண்மை யறியாதார் கூற்றேயாகும் ஆதலின் "சிந்

* For a fuller explanation of the Symbology involved in the Symbol of Siva riding over the Bull and in the Bull with bended knees and hind legs before the Image of Siva Lingam in the Temple, *Vide* our article on "The Rationale of Symbolic Worship:" The chief point to be noted here is the fact that while all its other organs represent various Dharmas such as Purity, Truth, Patience etc., the whole aspect of all these higher attributes is known by the pointed look of the eyes, which represent "The Child-like Faith in God" and God is the Inner Spirit which guides all men towards perfection. How vain is the attempt of some persons, who are false even unto themselves to divorse Morality from Religion! Morality without Religion! It can not be! *It is a lie.*

தையில் சமணேடுதோர் சொன்ன புந்தியிலுரையவைப் பொருள் கொள்ளாதே" என்றும் "சாக்கியக்கயவர்றலை பறிக்கையரும் பொய்யினுனூலாக்கிய மொழியவை பிழையவையாதலால்" என்றும் "நீதியாதிகளைப் புகழ்ந்த" எங்குருநாதன் கடிந்தார். ஆனதுபற்றி "முதல்வனை வழிபடுவீர்" என்றுபதேசித்தாஸ்திகத்தை நிலைநாட்டினர். "உய்யுங்காரணமுண்டென்று கருதுமின்" என்றுமுபதேசித்தார் நம் பரமாசாரியர். ஸ்ரீ வாகீசப் பெருந்தகையாரும் "நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே" என்றும "என்னிலாருமெனக்கினியாரிலை என்னிலுமினியாளொருவனுளன்" என்றும "கனியினுங் கட்டிப்பட்ட கருமபினும், பனிமலர் குழற்பாவை நல்லாரினுந்,தனிமுடிக வித்தாளு மரசினு,மினியன் றன்னடைந்தார்க்கிடை மருதனே" என்றுமுபதேசித்தார். ஸ்ரீ சுந்தரமூர்த்திகளும் "வெய்தாய வினைக்கடலிற் றடுமாறுமுயிர்க்குமிக விரங்கி யருள்புரிந்து வீடுபேறாக்கம் பெய்தானை" என்றும், ஸ்ரீ வாதவூர் வள்ளலும் "தெய்வமென்பதோர் பொருளது கருதலு, மாறுகோடி மாயாசத்திகள், வேறு வேறு தம்மாயைகடொடங்கின, வாத்தமாளாயலவர் கூடி, நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர்" என்றும் நாத்திகத்தைக் கண்டித்தார்.

ஸ்ரீ வாகீசப் பெருந்தகையார் "நல்லெண்ணந் தீயவெண்ணம், தர்மாதர்மோபதேசம் முதலியவைகள் ஸர்வேச்வரனொருவனையே தொடர்ந்ததென்பதையுமவனருளாலேயே யிவைகளான்மாவிற்குத் தோன்றினவென்பதையும் "நானேதுமறியாமே யென்னுள் வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்" என்ற வமுத ஸூக்திகளாலறிவுறுத்தார். ஸ்ரீ மாணிக்கவாசக மூர்த்திகளும் "நானொன்னுள்ளமார் ஞானங்களா ரென்னையாறறிவார்—வானோர் பிரானென்னையாண்டிலனேல்" என்று திருவாய்மலர்ந்தார். "ஜ்ஞோஜ்ஞயிதா வாத்ராதஸ்ய ஜ்ஞயிதாஶிவ:"—காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காணவுள்ளததைக் கண்டு காட்டலின்" என்ற சிவஞான போதத்தின்படி எமக்குள்ளிருந்து எம்மைக் காட்டி எமக்கு வழிகாட்டும் பெருமானொருவனையே ஸத்ஸம்பிரதாய கிரந்தங்கள் போதிக்கின்றன. ஸதாசாரியர்களுபதேசிப்பது மதுவே. ஸந்மார்க்கிகள் பற

ஈச்வானை வழிபடவேண்டிய மார்கர்க்கவனேற்படுத்திய வுணர்ச்சி (Feeling) யும் ஊகமும் (Reason) போதாதோ, சாஸ்திரமென்

பதொன்று வேண்டப்படுமோ? பலவகைப்பட்ட சமயங்களிற் பல சாத்திரங்களுண்மையால் அவைகளிலெதை யங்கீகரிப்பது? ஏதாவதொன்றை யங்கீகரிப்பின் மற்றவைகளின கதி என்னை?—இத்தகைய கேள்விகளுக்கு விடை யிறுப்பதவசியமே. உணர்ச்சியு மூகமுங் கடவுளாலேற்பட்ட துண்மையே. இவைகளையே யாம் மேன் மேலும் வளர்த்திடின் கடவுளைக் காணலாமென்பதுமுண்மையே. "நூலும் வேண்டுமோ நுண்ணர்ந்தோர்கட்கே" என்றார் ஸ்ரீமத் - அப்பர் சுவாமிகளும்.

"உடம்பெனு மனைய கத்து வுள்ளமே தகளி யாக
மடம்படு முணர்நெய் யட்டி வுயிரெனுந் திரிம யக்கி
யிடம்படு ஞான த் தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.

உள்குவா ருள்ளத் தானை யுணர்வெனும் பெருமை யானை
யுள்கினே னுனுங் காண்பா னுருகினே னூறி யூறி
யெள்கினே னெந்தை பெம்மா னிருதலை மின்னு கின்ற
கொள்ளிமே லெறும்பெ னுள்ள மெங்ஙனங் கூடு மாறே."

என்பனவாதி பலவமுத வுபதேசங்களா லுணர்ச்சியையுஞ் ஞானத்தையுங்கொண்டுமே "சித்தத்துருகிச் சிவனெம்பிரானென்று சிந்தையுள்ளே பித்துப்பெருகப் பிதற்றியுய்யலா"மென்று மொழிந்தார் முனிவர் கோமானாகிய மொழிக்கரசர். ஆயினுமப்பெருந்தகை யாரே "மறைநான்குமானா யாறங்கமானாய்" "விரித்தானை நான்மறையோடங்கமாறும" என்று அடிக்கடி முதல்வனைச் சாஸ்திர கர்த்தாவென்றுந் துதித்தார். "ஓதிமன்னுயிரேத்துமொருவனை" என்று மாந்தரைச் சாஸ்திராப்பியாஸிகளென்றுங் கழறினார். தெய்வமொன்றுண்டென்று வழிபடும் பெருமைவாய்ந்த மதவாதிகளிதுகாறும் "நூற்களை" யுமாதாரமாகக் கொண்டே வாழ்கின்றனர். கர்த்தனுக்குக் கோயில் வேண்டாமென்று கண்டித்த கம்பீரவான்களும் "கிரந்த"ங்கொண்டனர் "மொழி" வேண்டாமென்று முனிந்தவர் மேற் சென்றதுமவரைப் பின்றொடர்ந்தார்க்கவர் மொழிந்த மொழிகளும் "மொழி" யாகின்றன கண்டீர். அம்மையப்பனு மண்ணலொருவனுக்கருளுரு வனுவசியகமென்ற கங்கீரித்தழித்த வாண்டகைகளும் புத்தகமொன்றைப் போற்றி வாழ்ந்தனர். இவைகளை யாமுறறு நோக்குழி, "நூலுண்டாய விதமென்னவென நுழைந்து பார்க்கவேண்டி யிருக்கின்றது. நூலும் வேண்டாமென்று நுவலு

கின்றவர் தாமு மிதற்கு நியாய முண்டோவென நோக்கவேண்டி யிருக்கின்றது. கிஞ்சிற்றறிவிற் கெட்டியவரையாஞ் சீர்தூக்கிப்பார்க்கும்போது "மாந்தர்க்கும் விலங்குகட்குமுள்ள வேற்றுமையை வெளிப்படுத்தும் பகுத்தறிவின் பயனே" நூலாகும். மனிதர்க்கும் மந்திகட்குமுள்ள மாற்றத்தை மகிழ்வித்தமன்னறிவே மறையாகும். மாந்தரேயவரவரெண்ணங்களைப் பிறர்க்கறிவிக்க மொழிகொடு பேச வல்லார். அம்மொழியே நூலாயது. பன்னாள்வரை நூற்கள்யாவும் "கர்ணாத்கர்ணகதேனச" ("கர்ணாத் கர்ணாகதேந ச") என்ற இலிங்க வசனப்படியொருவன் மாட்டுக்கேட்டே அறிவுநூற் பரம்பரை வந்ததென்க. அதனாலேயே சீடனைக் குருவினுடைய "அந்தேவாஸி" (அண்மையிலுறைபவன்) என்று கூறினார்கள். அதனாலேயே நூலும் "சுருதி" (கேள்வி) யாயிற்று. இப்படிப பன்னாட் கழிந்த பின்னரே "முதுமொழி" யாகிய நூலுண்டாயிற்று. முதல் முதலில் பிதாவே தன் மக்கட்கு நல்வழி போதிப்பானாயினன். பன்னூற்றாண்டுகட்கு முன்னர் பிதாவே தன்னருமைமக்க ளாணாயினும் பெண்ணாயினு மவர்க்கமுதமொழி மொழிந்தனன். நமது நாட்டில் சில சடங்குகளியற்றிப பின்னர் ஓதுவித்த நாட்களிலுங்கூட ஆண் பெண்ணிருவர்க்கு மவ்வாறே அறிவு பயிற்சி செய்யப்பட்டு வந்தமை நுண்ணறிவாளர்க்குக் கிருஹ்ய நூற்களினால் வியக்தமாகும். பிதாவுக்கும் புத்திரனுக்குமுள்ள சம்பந்தம் "அன்பினால்" ஏற்பட்டது. அவ்வன்பினாலேயே பிதாகுமாரனுக்கு ஆப்தனானான். இவ்வன்பினாலேயே பிதாவின் மொழி புத்திரனுக்குப் பத்தியமாயிற்று. இவ்வாறு நட அவ்வாறு நடக்கவொண்ணாதென ஆப்தனேயொருவனுக்கெடுத்துரைப்பன். இதனாலாப்தன் மொழி "ஹித"த்தைப் பயப்பதெனப்பட்டு, பிரமாணமாயிற்று. இத்தகைய காரணங்களால் அன்பினால் பெற்ற பிதாவே முதல் முதலில் மைந்தருக்குக் குருவாயினான். பன்னாட்கழிந்து வேறு குருவுண்டான காலத்தும் பிதாவின் றன்மை குருவினிடத்தும், புத்திரன்றன்மைச் சீடனிடத்தும் வருவிக்கப்பட்டது. "ஶிஷ்ய꞉ புத்ர இதி ப்ரோக்த꞉ ஸதா ஶிஷ்யத்வ யோகத꞉ । ஜாத꞉ புத்ரோ ஹி புத்ரோ வா பிதரம் பூஜயேத் ஸதா ॥ நியோஜயதி புத்ரம் வைவாஹஸாரேண க꞉ பிதா । ஸந்தாரயதி ஸம்ஸாராத் புத்ரோ வை போதக꞉ பிதா ॥" என்பன வாதிவாக்கியங்களால் சீடன் புத்திரனாகவும், குரு பிதாவாகவும் கணிக்கப்பட்டது காண்க. சைவதீக்ஷையில் அடிக்கடிச் சீடனைச்

சிசுவென்று விளிக்கப்பட்ட வுண்மை சைவசாஸ்திரங்களில் வியக்தம். "ஶிஷ்யஸ்யாவநிஜ்ய புஷ்போதகேந ஹஸ்தௌ | ததோ வித்யாஶோதநார்த்தம் க்ருத்வா விஸ்தரஶ: க்ருதேஷு | வாஷாம்போநா ஶிரோ: வாணௌ வித்யாம் ஶைவீம் ஸமர்ப்பயேத்" "வித்தியோபதேசத்தின்பொருட்டு புஷ்பங்களைக்கொண்ட ஜலத்தால் சிசுவினுடைய கைகளைச் சுத்திசெய்து சில வித்தையை (சிவாகமத்தை)க் கொடுக்க" என்பனவாதி பல்லிடங்களிலும் சீடன் சிசுவெனபபட்டமைவியக்தம். இவ்வாறு பகுத்தறிவின் முதிற்சியால் மாநதர்கள் ஒருவருக்கொருவர் தத்தமதபிப்பிராயங்களைப் பகிர்நதுகொள்ளும்போது அன்பின் மிகுதியால் கருணையுடைய வொருவன் மறறவனுக்குரைத்தமொழி ஹிதமெனப்பட்டு அதுவே தன்னைக் காபபாற்றுமெனக்கொள்ளப்பட்டது. அவன் வார்த்தை பத்யமாகிப் பிரமாணமாயிற்று. "ஹித" மெனத் தனக்கு அம்மொழி பட்டகாலத்து அதில் விச்வாசம்வைப்பது மாந்தர்க்குள்ள இயற்கையாய் கடவுளருளால் பவித்தமையால், இத் தன்மையைச் சிலர் வெறுத்துக்கொள்வதெற்றுக்கு. ஒருவனோரூருக்குச்செல்லும்போது மத்தியமார்க்கத்தில் குறுக்குவழிகள் பலதோன்றுங் காற்றிகைக்கும் போதொருவனிவ்வழிச் சென்றால் நன்மையுண்டாகுங் குறித்தவிடம் செல்லலாமென்றான். அவ் வழியிற்சென்று சில நன்மைகளை யடைந்ததுமவனுக்கு முன் வழிகாட்டினவனுப்தனையினன். அவ்வாறே கடவுளையடையவேண்டுமென்னு முணர்வும், அதற்குறிய வூகமும் ஒருவனெண்ணத் துதிததபோது கொஞ்சந்திகைப்புண்டான காலத்தில் ஒருவனது மொழியைக் கேட்குமபோது அஃதிவனுக்குப் பத்தியமாகி யவ்வழியிற்செல்ல முநதுகிறான். அக்காலததி லவன்மொழியே இவனுக்குப் பததியமாகி அவனே ஆப்தனாகிறான். இதனாற் றனது பிரத்தியக்ஷத்திலும, அனுமானததிலும், ஆப்தன் மொழியே இவனுக்குப் பற்றுக்கோடாய நின்றது. இக்காரணத்தினாலேயே பிரததியக்ஷப்பிரமாணததிலும், அனுமானப் பிரமாணத்திலும ஆப்தன் மொழி யதிகமாய் பாராட்டத்தகுந்ததாய் இவனுக்குப் பூலிததது. அக்காலத்தில் பிரததியக்ஷதிருஷ்டி யிவனுக்கில்லாமற்போகவிலலை. அனுமானவெளிச்ச மிவனுக்குக் கிட்டாமறபோகவில்லை. என்றாலும் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தபோதும், அனுமானவொளி மின்னும்போது மிவனுககுத் திகைபபுண்டாயின், இவ்வாறு "செல்லென்ற ஆப்தன்மொழியையே விசுவசிக்க நேர்ந்தது. அற்றாயினும் தனது

(பிரத்யக்ஷ) திருஷ்டியும், அனுமான லூகமும் உடனிருந்தேதான் ஆப்தன்மொழியை ஏற்றது. இதனால் ஆப்தன்மொழியை யேற்ற காலததிற்றனது பிரத்தியக்ஷவனுமானங்களை யொழித்துவிடவேண்டு மென்பதல்ல. இவைகளுக்கு மாறுபாடாகக்கொள்வதை "பிராந்தி" யென்று வேதமறிந்தவர்கள் கூறுவார்கள் 'அயதாவஸ்திதவஸ்து விஷயஜ்ஞானம் ப்ராந்தி:" என்ற வாககியத்தின்படி "உள்ளதுஉள்ளவாறுகக்காணமல் மாறுபடின் அதுவே பிராநதியாகும." இதனலாபதன்மொழி பிரத்தியக்ஷாநுமானாதிகளுக்கு ஒத்திருப்பினது பிரமாணமென்பது ஸித்தம் இக காரணம்பற்றியே தருக்கநூலுடையார் "பிரமாணங்களுள் ஆபதன்மொழி அல்லது ஆகமம வன்மையுடைத்தென்று கூறினர்" ஏனெனில் பிரத்தியக்ஷானுமானங்களுடனிருந்து மிவனை யுறும்போது தெளிவிப்பதனலென்க ஆகம விச்வாசம ஏற்படுவதறகுச் சில தருணங்களுண்டு. குருட்டு நமபிக்கை விச்வாசததிற்சேராது. ஒருவ னுண்மையாகவே செலலவமயம வேண்டும். அவ வமயத்தை வீணுக்காதுசெல்லவும் வேண்டும். செல்லும்போது பல வழிகளைக்கண்டு திகைப்புண்டாக வேண்டும். அத்திகைப்பினு லிதுவோ வழி யதுவோ வழியென வருநதவேண்டும. அத்தருண மிவனுக்கு ஊணுறக்க மின்பாதிகளும் வேம்பெனத் தோன்றவேண்டும். எநத மஹானுபாவன் நமக்குச் சரியானவழி யிதுவெனக்காட்டுவான். எவன் நம்மைத் தேற்றுவான். நம் மனோவியாகூலத்தை யெவன்போக்குவான்" என்று இவன் கதறுங்கால் அச்சமயத்தில இவனையங்களைப்போக்கி யொருவன் மொழிவானயின் அதுவே ஆகமம. ஐயங்க ணிகழாத போதும், அதனலிவன் வருந்தாதபோதும் ஒருவன் ஆப்தனை ஏன் றேடுகிறான்? ஆப்தன் ஏன் உரைபாடுகிறான்? பசியால் வருந்தினவனல்லவோ அந்நத்தை விரும்புவான்? பசியில்லாதவர் அந்நத்தைத் தேடுவரோ? கொணர்நதிடினு மவர்க்கு ருசிக்குமோ? இக்காரணம் பற்றியே ஒருவன் றன்மனதை வஞ்சிக்காமல் கடவுளை யடைய வேண்டிச் செல்லினிவனுக்குப் பலவையங்கள் நிகழும். இவன் பஞ்சபடும் பாடெல்லாம் படும்போதுதான் ஆப்தன்மொழி யிவனுக்குப் பத்தியமாகுமேயன்றி மற்றக்காலத்தில் ருசிக்காதென்க. எத்தன்மையால் "ஆகமமெனும் ஆப்தன்மொழி யிவனுக்குக் கிட்டுமென் பதை திவ்வியாகமங்கள் விரித்துக்கூறும். இதைப் பின்னர் விசாரிப் போம்.

இதனால் ஆகமமென்பது தான்றிகைத்துநின்றவக்கணம் இவனுக் குறுதிமொழிகூர்ந் திப்படியேசெல்லென்று கூறுவதாகும். தன்னை நடத்தவந்த முறையா லிதற்குச் சாஸ்திரமெனப் பெயராமர்ந்தது. ஆப்தனிடமிருந்து வந்த அளவில் அவ் வுபதேசத்திற்கு "ஆகமம்" என்றும், இடையிற் சத்தமென்றும, சீடன் கேட்ட வளவில் அதற்குச் "சுருதி" என்றும், தான் நடக்குமுறையால் அது சாஸ்திரமென்றும் கால வேறுபாட்டையும இட வேறுபாட்டையுந் நோக்கி ஒருபதேசமே பல பெயர்களைக்கொள்ளும. "உழைபபின வாராதுறுதிகளுளவோ" என்ற பெரிய மொழிப்படி மாநதனை உழைத்தே பயனையடையும்படி கடவு ளமைத்திருப்பதால் அவ் வுழைப்பிற்சென்றபோ திவனுக் கையங்க ணிகழுமாதலால் அக்காலத்தி லிவனையங்களைப போக்கித் தெளிவித்ததெதுவோ அது "உறுதிமொழி" எனப்படும ஆகமம அல்லது சுருதியாகும். அதாவது பிரத்தியக்ஷானுமானுதிகளுக்கு மாறுபடாவண்ணம உண்மையை ஐயுறும்போ துணர்த்துவதெதுவோ அதுவே உறுதிமொழியெனப் படும். உணர்ச்சிக்கும் ஊகத்திறகும விரோதம் பயவாதுள்ள உண்மைமொழியே உபதேசமெனப்படும் ஆகமமொழி. இதையே நல்லறிவென்று மேலோர் கூறுநிறபர். "யதார்த்தாகாரஸம் வித்திவித்ருதி வசீக்ருதே" என்று உணர்ச்சிக்கும், ஊகத்துக்கும் மாறுபடா வண்ணம் வந்த் ஞானமே நல்லறிவென்று நாட்டப்பட்டது. ஸ்ரீ பௌஷ்கராகமத்திலும் "க்ஷேத்ராக்ரார்தஸௌவலீ வரோக்ஷா யெயுக்ஸாயநீ । வ்ருத்தக்ஷணாநஶோநௌ யதீவாயுஂ ஸாஷிதீ । யொவக்தவ்ஸாயரோஷ்டவஸ்யாக" என்று உணாசசி (பிரத்தியக்ஷம்) ஊகம் (அனுமானம்) என்பவைகளுக்கு விரோதமுறு வண்ணம் உணர்ச்சி யூகங்களுக்குப பொறுத்தமாகவே உள்ளக் காக்ஷி நிகழுமாறுரைத்துத் தெளிவிப்போன் ஆப்தன் என்றும், அவன் மொழியே ஆகமமென்றும் சொல்லப்பட்டது. இதனுற் கண்மூடித் தனமாய் அதாவது மூடத்தனமாய் எதையும் அப்படி யதிற்சொல் லியது இப்படி யிதிற் சொல்லியதென்று கூறி நம்புவதல்லவென்க. ஞானத்திற்கும் மூடத்தன்மைக்கும் வெகுதூரமென்க. ஒருவன் ஒரு கொள்கையை நம்முன்னர் விளம்பிடினது முதலில் உணர்ச்சிக் கும் பின்னர் ஊகத்திற்கும் பொறுத்தமுடைத்தாவென்பதைத் தீர்மானித்தே கொள்ளவேண்டும் என்க.

ஆம், மாந்தர்க்கு ஒரே சாஸ்திரமிருப்பினிது நியாயந்தான். பல சாஸ்திரங்களிருந்துழி எதை யாங் கொள்வது எதை யாந் தள்ளுவது? பல் வேறு தேசத்தார் பல் வேறு ஆப்தர்களைப் போற்றிவாழ்கின்றமை கண்கூடு,—இவர்களில் எவர்வாக்குப்பிரமாணம்? யாங் கண்ட வுண்மை யிது. ஒருவர் சொல்லாததை மற்றொருவர் சொல்லியிருக்கலாம். அல்லது ஒருவர் ஒரு விஷயத்தை மற்றவரைவிட வற்புறுத்திக் கூறியிருக்கலாம். இதனாலவர்கள வாக்குகளில் நாம் விரோதங்கொள்ளவேண்டுவதில்லை. அப்படிப் பலவிதமாக வித்தியாசங்காணப்படின் நமது ஊகமுணர்ச்சிக்கட்குப் பொருத்தமுடைத்தெதுவோ அது பிரமாணமெனயாங் கொள்வதிற் குறைவில்லை.

சாஸ்திரமென்பது "ஜகத்ஜீவபரமென்பனவைகளின் லக்ஷணங்களையும் அவ்வித லக்ஷணங்களுக்கேற்ப யாம் நடக்குமுறையையுங் கூறுவதாகும். இவ்விஷயங்களில் மாந்தர்கள் செய்த பல சாஸ்திரங்களிலொருவர் சொன்னபடி வேறொருவர் சொல்லவில்லையென்பதுமோர் விதத்திலுண்மையே. இஃதெதனாலேற்பட்டதென்புழி, உயிர்கள் மலத்தடையுடைய இச்சாஞானங்களைக்கொண்டவர்கள். மலத்தடை எவ்வளவுக் கெவ்வளவு நீக்கமடைகின்றதோ, அதற்குத் தகுந்தவாறே அவர்களது "உள்ளக்காக்ஷியு" மேற்படுகின்றது. எனவே கடவுளது சித்சக்தி வியஞ்சகமெப்படியோ அதற்குத் தகுந்தவாறுதான் அவர்களது உண்மைக்காக்ஷியாகும். இதனால் சாஸ்திரங்களை யியற்றினோர்* பலரும கடவுளருளொளிகொண்டு இயற்றினவர்களே. ஆயினுந் தாரதம்மியமிருக்கலாம். இத்தாரதம்மியம் மலத்தடை நீக்கத்தைப்பொறுத்தது. கொஞ்சதூரம் வரையில் நமக்குபகரித்துப் பின்னர் மாந்தரை யவரவர்களதறிவைக்கொண்டுழைத்துக் கைக்கொள்ளும்படியே சகல வமைப்புகளையுங் கருணாநிதியாகிய கர்த்தன் கட்டளையிட்டதால் நாமுழைத்தே யுண்மையையுணரவேண்டும். உழைத்துண்பவர்க்கே உருசிதட்டும். சாஸ்திரம் பலவிருக்கின்றதென்று யாங்காணி லிவைகளைச் சோதித்துக்கோடலே யமைவுடைத்தென்பதெம தபிப்பிராயம்.

இவ்வாறு காணும்போது பலவேறு ஞானநிலைமையையுடைய உயிர்களால் பல நூறுக ளியற்றப்பட்டிருக்கலாம். அவ்வாறே மாந்தர்கள், இருடிகள், தேவர்கள், தேவர்களுட்சிறந்த பிரமன், அவனிலுஞ்சிறந்த விஷ்ணு, அவனிலுஞ்சிறந்த ருத்ரன, அவனிலுஞ் சிறந்த மகேச்வரன் முதலிய உயர்ந்த உயிர் வர்க்கங்களாற் பல சாத்

திரங்க ளேற்பட்டிருக்கின்றனவென்றும், இவர்களுடைய ஞான நிலைமை பல்வேறு திறத்தனவென்றும இவர்களும் பசுக்களாகையா லிவர்கள்வாக்கும் பலவம்சங்களிற்றவறுடைத்தென்றும் மேலோர் கூறுநிற்பர்.

“நசார்ஷம் பௌருஷேயைர்வாக்யை ரார்ஷம் தைவிகம் ததா । நதைவைர் ப்ராஹ்மணம் வாக்யம் வைஷ்ணவம் பத்மஜன்மனா । ததா ரௌத்ரம் ந ஹரிணா பாதேன ஶிவாகம: । பாத்ய பாதகயோ யதா விஶேஷாதயோ பாத்யபாதகத: । ஶிவாகமவிரோதேந ஶாஸ்த்ரம் ஸர்வம் வ்யவஸ்திதம் । நான்யஶாஸ்த்ரவிரோதேந தத்ஸம்வாததயா யதா । ஶிவஶாஸ்த்ரம் வ்யவஸ்தாப்யம் தத்ப்ராப்யம் ப்ராபகம் ச த: । யஸ்ய யஸ்ய ஹி ஶாஸ்த்ரஸ்ய யாவதீ வ்யாப்திரிஷ்யதே । தாவத்யேவ ஸமீக்ஷ்யா: ப்ராமாண்யம் தஸ்ய தஸ்ய ச ॥” புருஷ வாக்கியத்திலும் ரிஷிகள் வாக்கியங்கள் பிரமாணமாகும. புருஷ வாக்கியங்களைக்கொண்டு ரிஷிகள்வாக்கியத்தை மறுதலிக்கப்படாது. ரிஷிகள்வாக்கியதகிலும் தேவர்கள்வாக்குப பலமுடைத்து. தேவர்கள்வாக்கை ரிஷிகள்வாக்கினல் மறுதலிக்கப்படாது. தேவர்கள வாக்கிலும் பிரமனதுவாக்கியம பிரதானமாகும். தேவர்கள்வாக்கினுல் பிரமாவினதுவாக்கியத்தைத் தள்ளப்படாது. பிரமாவினது வாக்கியத்திலும் விண்டுவின்வாக்கியம் பிரபலமுடைதது. பிரமாவினதுவாக்கியத்தினுல் விஷ்ணுவாக்கியத்தைத் தள்ளமுடியாது. விஷ்ணுவாக்கியத்திலும ருத்திரன்வாக்கியம் பிரபலமானது. விஷ்ணுவாக்கியத்தைக்கொண்டு உருத்திரவாக்கியத்தை மறுதலிக்கப்படாது. உருத்திரவாக்கியத்திலும் சிவவாக்கியம் பிரமாணமுடைத்து. இவ்வாறே மேலிட்ட சாஸ்திரபபிரமாணத்தைக் கீழிட்ட சாஸ்திரம் மறுதலிக்க வன்மையுடைத்தன்று. மேலிட்ட சாஸ்திரம் கீழிட்ட சாஸ்திரத்தைப்புறக்கணிக்க வதிகாரமுண்டு. இதனுல் ஆத்மாக்கள் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தோரேயாயினும் அறிவாற்றல் களிற்றார தம்மியமுடையார். “ஜ்ஞாதார: ஸர்வ ஏவ விபஶ்சித: பரேயத: । ஜ்ஞானைஶ்வர்யாதி வைஷம்யம் ஸஞ்ஜாதே ஹ்யுத்தராபரா: ॥” என்று வாயுசம்ஹிதையும் விளக்கும். ஞானைச்வர்யாதிகளை யதிகமுடையோர் வாக்கியங் கீழிட்டார் வாக்கியத்திலும் பிரமாணமுடைத்து.

வியஞ்ஜகங்களாகிய அந்தக்காண, ஞானேந்திரியாதிகளைக் கொண்டறிகின்ற வான்மாக்களுக்கு ஞானத்திலேற்றத்தாழ்ச்சியுண் டென்பதுண்மை. இவர்கள் கிஞ்சிக்ஞர்கள். இவர்களிடந் தோஷங் களுண்டு தோஷங்களையுடையார் "சதாசிவாதிகளுமென்பதை"

"ஸதா³ஶிவாத³ய: ஸர்வே ப்³ரஹ்மாத்³யா நாப்யதிஷ்டி²தா: ।
ப்³ரஹ்மாத்³யா: ஸர்வே ராகா³த்³யைர்தோ³ஷை: ஸம்யுக்தஸ்ஸ்த: ॥"

வெழும்வாக்கியங்களாலறிகின்றும். அப்படியிருந்தும் "ஶிதஹி ப்³ரஹ்மாத்³யா தே³வா ஸமநுக்³ரஹம் । ஈஶ்வராதே³நாந் க்³ருஹ்ணந்தி ஶிவேந ஸமதிஷ்டி²தா: ॥" "தாங்களும் பரமனது அனுக் கிரகத்தையடைந்து மற்ற ஆத்மாக்களை யனுக்கிரகிக்கின்றார்கள்" என்று கூறப்பட்டிருப்பதால் ஈச்வரனது அருளொளியைக்கொண்டே அவர் களும் தங்களுக்குரிய ஞானைச்வர்யாதிகளைக்கொண்டு சாஸ்திராதி களையுண்டு பண்ணியகாலத்தும், முற்றிலும் பிழையெனத்தள்ளாமல் எவ்வளவுவரையில பிரமாணமென அங்கீகரிக்கப்படவேண்டுமோ அவ்வா றங்கீகரிப்பதில் தோஷமில்லை யென்க. இவ்வுண்மையை நூற்களியற்றிய பல மாந்தர்கள விஷயத்திலு முபயோகித்துணர்வா மென்க.

இவ்வாறு ஜீவர்கள் அல்லது பசுக்களுடைய வாக்கியங்கள் தோஷங்களுடையனவெனின், நிர்தோஷமான வாக்கொன்றிருத்தல் வேண்டும். பசுக்களதுவாக்குகள் தோஷமுடைத்தெனில் "பசுபதி" யின் வாக்கியந் தோஷமுடைத்தல்லவாகும். தந்த, தாலு, ஓஷ்டம், அதரம், கண்ட முதலியவைகளில்லாக் கடவுள் அவ்வவ் வவயவங்கள் கொண்டுச்சரிக்கப்படவேண்டிய அகராதியக்ஷர ஸமூகங்களுடன் கூடிய நூலுக்கு எவ்வாறு கர்த்தனாதல்சாலும்? முதல்வன் தந்த தாலுக்களில்லாதவனென்றும், ஜீவர்கள் அவைகளின் உதவியைப் பெற்றுளார் என்றும், இவ்வுதவிகள் முதல்வனுக்கு வேண்டப் படாதபோதே அவன் எல்லா வறிவுமுடையானென்றும், இவைக ளிருந்தும் ஜீவர்கள் அலப அறிவினர்களென்றும் வாயுசங்கிதை யானது "ஈஷத்³வித்³வஸமேதேஷு ஸர்வஜ்ஞாநமேதத்ஸு ।
யத³ஸ்யாவஸ்தி²தம் வஸ்து தத்தத்³வேத்தி ஸதா³ஶிவ: । அயந்தே³வேத்தி நாதி³ தஸ்யாக்ஷஸம்ப்ரவ்யதே"_ "ஈஶாயஜ்ஞாந ஸம்ப³ந்தா⁴ திஷ்டேஷ்வவிஸ்த்³வி கரணோபேதே³வஜாநந்தி ஜீயாணவோ

வரதா:" எனும் வாக்கியங்களால் விளக்கும். இதனால் கடவுள் இவ் வவயவங்களைக் கொள்ளாதபோது அவன் எப்படி சாஸ்திரகர்த்தனாதல்சாலும் ?

பரமபதி ஒருவனுண்டேல் அவன் தனுகரணபுவனபோகாத்மகமான சகல ஜகத்தையும் மாந்தர்களுக்களித்ததுபோலவே, தன்னையடைவதற்குரிய நெறிமுறைகளடங்கிய வுண்மைகளை மாந்தர்களுக்கு அளிக்கின்றான். சற்று நிதானித்துப்பார்மின் 'அறிவை உபயோகித்தும், அறிவு நூலை யியற்றியும் வாழும் அறிஞர்களிடம் முதல்வன்றனது அறிவை உபயோகிக்காமல் வேறு எதனிடம் செலுத்துவான். அறிவுடையார்க்கன்றோ அறிவு பயன்படும். சேதனங்களை அறிவித்தும் அசேதனங்களை யசைவித்தும் விளங்குமாற்றா லல்லவோ "எம்பெருமான் ஞானக்கிரியாரூபன்" என்று கூறப்பட்டான். "வைதந்யம் த்ருக்க்ரியாரூபம் தததஸ்த்யாத்மநி ஸர்வதா" என்பது வாக்கியம். பசுவினது ஞாதிருத்வம், கர்த்திருத்வம் முதலியவைகளும் முதல்வனது அதீனமென்பதை "பஶோர்பந்தவிமுக்த்யர்த்தம் ஜ்ஞாநம் ப்ரமாணம் ஸம்ஸ்ம்ருதம்" எனும் ஆகமவாக்கியந் நிறுத்துமென்க. "ஜீவாத்மநோர்ஹி ஸம்பந்தோ போத்யபோதகபாவத:" என்ற வாக்கியப்படி முதல்வனுக்கும் ஜீவனுக்குமுள்ள சம்பந்தம் அறிவித்தலும், அறிவித்தாலறிதலுமாகையால், யாமறியு மெவ்வுண்மையும் அவன் அறிவிக்க நாமறிந்ததாகையால, எல்லா சாஸ்திர ஞானமும் அவனுடையதேயென்க. பேரறிவாளனொருவனுண்டென்று கூறும் பரமாஸ்திகமெனு மஸ்திரவாரத்திலெழுந்த சைவசித்தாந்தத்தி லிவ்வுண்மையைப்பற்றி நிஷ்கர்ஷையாகக்கூறப்படுவதுயாதெனில் "ஜ்ஞாநக்ரியேச்சாரூபம் ஹி ஶம்போர்த்ருஷ்டித்ரயம் ஸ்ம்ருதம் । தத்த்ருஷ்டித்ரயஸம்பந்நம் ஶம்போர்நேத்ரத்ரயம் ஸ்ம்ருதம் । ஜ்ஞாநாதி ஶக்தித்ரயம் நேத்ரத்ரயம்" ஞானம், கிரியை, இச்சை எனும் மூன்றும் முதல்வனுக்கு மூன்று கண்கள். இவைகளை நயனங்களாக உருவகஞ்செய்யக்காரணம் யாதெனின், "நீ அல்லது" "நை" என்னும் தாதுவினடியாகப் பிறந்த நயனம் எனும்பெயர் கண்ணிற்கமைந்தது நடாத்துமுறை நோக்கியென்க. இப்பல்லாயிரங்கோடி யண்டங்களிலுமமர்ந்த வுயிர்களனைத்தையுந் நடாத்துமுறையால் முதல்வனுடைய இச்சாஞானக்கிரியைகளைத் தூங்காமல் என்றும் விழித்து நடாத்திப்பாதுகாக்கும் "கண்களாக" உருவக

மென்க. இச்சத்திமகோததியிற் சகல புவனங்களு மப்புவனங்களி லுள்ள உயிர்களுடன் அமிழ்ந்து நனைந்திருப்பதால் அதிலிருந்து கொண்டு பசுவானது இச்சிக்கவும், அறியவும், இயற்றவும் தன்மை யையடைந்ததென்க. "ஜ்ஞாநக்ரியாவிசேஷாபி: சிவஸ்யாபி: ஸ்வாத்த சக்திபி: । சக்திபிஸ்தாபிரீசஸ்ய ஸர்வம் விச்வம் வ்யாப்ய வ்யாப்ய திஷ்டதி" சக்திமா னெனப்பட்ட எமது பெருமான் ஞானம, கிரியை, இச்சையெனும் மூன்று சக்திகளால் இவ்வுலகமுழுமையும் வியாபித்துத்தனது செயல் களை நடாத்துகிறான் என்று வெளியாகியது. பசுக்கள் ஒரு தொகுப் பேயாயினும் ஞானம், ஐச்வர்யாதிகளில் தாரதம்மியங்களுடையன வாதலால் ஒரு மலமுடைய பசுக்கள் இருமலமுடைய பசுக்களை ஏவி அனுக்கிரகித்தும், இருமலமுடைய பசுக்கள் மும்மலமுடைய பசுக் களை ஏவி அனுக்கிரகித்தும்வந்து வழி வழியாகவே ஞானாதிகளை விளக்குகிறான். "ஸ்வாத்தாநவிப்ராஹிண: ஸகலத்ரிமலா: ப்ருதக் । தத்ராத்யாஹ்ய கமலாவிமலாமலாத்தா: । த்ரிமலாஸ்து யமலோஜ்ஞயா யயோத்தரமயிஷ்டிதா: । த்ரிமலாநயிஷ்டம் திவிமலமேகமல: ப்ருதக் । ஸகலத்ரிமலாநர்வாநுசிவஸகோயிஷ்டதி" என்ற பெருமொழிகளா லிவ்வுண்மை விளங்கும். அதிஷ்டிப்பதாவது அனுக்கிரகிப்பதே. செல்வமதிகமுடையார் அஃதில்லாதார்க்குச் செல்வத்தைப் பகிர்ந்தும் ஞானமதிகமுடையார் அஃதில்லாதார்க்கு அந்த ஞானத்தைப் பகிர்ந்தும் சகோதரமுறைமை பாராட்டவேண்டும் என்று எல்லோர்க்கு அம்மையப்பராகிய உமாஸஹாயனது பேரெண் ணமும் அவன் வகுத்த முறையுமாம். இதற்கு விரோதமாக உயர்ந்த ஜாதி முதலியவைகளைக்கொண்டு தருக்குதல் முதல்வன் எண்ணத் திற்கு முற்றிலும் மாறுபட்டதேயாகும். மேலிட்டார் கீழிட்டாரை யதிஷ்டிப்பதென்பது மேலிட்டார் கீழிட்டாரை அனுக்கிரகித்தலே என்பதை "ப்ரஹ்மாவிஷ்ணுஸயோரந்த்ரா மஹேசாந: ஸதாசிவ: । மந்த்ரயஸ்தஸ்யவிஜ்ஞயாயாபிவிச்வமிதம் ததம் । ஸசிவ: ஸவ மேதம் ஸ்வகீயாபிர்மந்த்ரிபி: । அயிஷ்டதயேயாத்தா யதக ஸவஸ்தஸ்த: ஸ்ப்ருத: ॥" "லோகாநுக்ரஹணாயைவ சிவேந பரமேஷ்டிநா ஸதாசிவாத்யஸ்ஸவே மந்த்ரா த்தாநோவ்யயிஷ்டி தா: । தேஷாமந்த்ராத்தாவேநயோஜ்யாஸமநுக்ரஹம் । கந்த்ரா த்தாநாநுக்ரஹம் தி சிவேநஸமயிஷ்டிதா:" ஸதாசிவன், மகேச்

வான், உருத்திரன், விஷ்ணு, பிரமன் முதலியவர்கள் மூர்த்திகளென்றும், இவர்களால் இவ்வுலகங்கள் வியாபிக்கப்படுமென்றும், ஸர்வேசனாகிய சிவன் இம்மூர்த்திகள் வழியாக இவையெல்லாவற்றையும் அதிஷ்டிக்கிறார் என்றும் அதனால் அவன் "ஸர்வன்" எனப்பட்டானென்றும், லோகாநுக்கிரகித்தின் பொருட்டே மூர்த்தியாத்மாக்கள் எனப்பட்ட சதாசிவாதிகள் ஸர்வேசனாகிய சிவனால் அதிஷ்டிக்கப்படுகின்றார்கள், என்றும் இம்மூர்த்தி யாத்மாக்களும். தாங்கள் அனுக்கிரகத்தை யடைந்த முறைப்படி அன்யாத்மாக்களை அனுக்கிரகிக்கின்றார்களென்றும் பெறப்பட்டது. அப்படி யாவர்தனனுக்கிரக்கித்தபோதும் சிவனாலதிஷ்டிக்கப்பட்டே அனுக்கிரகிக்கின்றார்கள் என்பது பெறப்பட்டது. ஏனெனில் "ஈசித்ருத்வாதயஸ்தேஷாமத்யா: தோஷாஸ்ஸம்ஸ்ருதா:" என்ற வாக்கியத்தால் மூர்த்தியாத்மாக்களெனப்படுமிவர்களும் பாசத்தாற் பிணியுண்ட பசுக்களே யாவர். ஆன்மாக்களுக்கறிவுறுத்தும் விஷயத்திலுமிம்முறையே யாம் "யாதோத்தாநாம் பரமேச்வரஸ்ய ஸாக்ஷாத்க்ரியா ஜ்ஞாநத: । பரம் பரயாபரேஷாம்" என்று உண்மை பாஷியக்காரராகிய ஸ்ரீகண்டசசெல்வனார் கூறியபடி முக்தான்மாக்களுக்குச் சித்சக்தி நேரில் விளக்கத்தையும் மற்றையான்மாக்களுக்குப் பரம்பரையாகவு மறிவுறுத்தலுண்மையாகையால், முதல்வன் சாஸ்திரகர்த்தா வென்பதிலும் பரம்பரைக்கிரமமாகவே கொள்ளத்தகும். கைகால் முதலிய வுறுப்புகளின்றியே அரூபத்திலிருந்து பதே பதே ரூபங்களைக்கொண்ட விசித்திர வுலகுடைப்பொருள்களை யளித்தபடியே, வாய்முதலிய உறுப்புகளின்றியே ஸர்வேச்வரன் "அநாஹதம்" எனும் பேரின்ப நிச்சபத (The still enchanting music of the everspreading space) "பரநாத" த்திலிருந்தே ஆஹதம் எனும் சுரோத்திர விஷயமான வைகரிவாக்குருவமான சாஸ்திரசனையையும் அருள்வான். நாதமானது பரை, பச்யந்தி, மத்தியமை, வைகரியாதிகளாகப் பல திறப்பட்டு நிற்கு மென்பதை உண்மைஞானிகளுணர்வார்கள். பரநாதமே வைகரியாதிகளாய் பவித்தமையைப் பின்னர் பகர்வாம்.

ஸ்ரீ பௌஷ்கரத்திலிவ் வுண்மைப் பின்வருமாறு பெறப்படுகின்றது

'ஸர்வமூர்த்திஷு சிவோ ஹ்யேஷ த்வாமூர்த்தோ விசஷ்டத: நமஸ்காரணேனோக்த:" "முன் கூறப்பட்ட சிவன் அமூர்த்தன்

வாக்கிந்திரியாதிகளில்லாதவன். அவன் எவ்வாறு "சாஸ்திரகர்த்தனு வன்?" என்று பூர்வபக்ஷத்தைக் கூறி "ஶரீராத்யபாவேঽபி ஸ்வஸாமர்த்யாதேவ ஸ்வவிஷயோ க்ரந்த: । வர்ணாதிரசநாஸ்யாத் ஸாக்ஷதேவ கார்யவத்" அமூர்த்தனுயினுந் தனது சாமர்த்தியத்தினுல் வர்ணுதிகளை (எழுத்துக்களை) சேர்த்தல் கூடும். மற்றக்காரியங்க ளைப்போல" என்றுத்தரம் பிறந்தது. ஏன் அவன் அவ்வாறு செய் யவேண்டுமெனில், ஜகதுத்பத்தியாதிகளில் ஸ்வப்பிரயோஜனங் கரு தாமல் பரப்பிரயோஜனுர்த்தமே எவ்வாறு தனது நிர்ஹேதுகருணை யைக் காட்டினுரோ அவ்வாறே சாஸ்திரத்தை யுண்டுபண்ணிய விஷ யத்திலும் முதல்வன் றனது அவ்வியாஜ பரமகிருபையை ஜீவர்கள் மாட்டுக்காண்பித்தார். அருளுடைய பரமன் மாநதர்களுக்குத் தன துண்மையைத் தெரிவிக்கக்கூடிய சாஸ்திரத்தை அருளாதொழி வனே? "இச்சாஸ்திர பிரவர்த்தனமும் ஜீவர்கள் மேற்கொண்ட பெருங்கருணையாலென்பதை சாஸ்திரவக்திருத்வததை இறைவனுக் குக்கூறவந்த ஸந்தர்பபததில்ஸ்ரீபௌஷ்கரததில் "ஸர்வாரம்போঽநாப்யாஸ்ய வர்ணாதிநாऽஃ வ்யாஸோ"- எல்லா முழுமையு மொருங்கே கொண்ட முதல்வனுக்கு எல்லா முயற்சியும் ஜீவர்கள் பொருட்டேயென விளக்கபபட்டுள்ளது.

சாஸ்திரகர்த்தாவா யிறைவன் ஏற்பட்டதால் அவன் எவ்விஷ யத்திலும் நமக்கு ஆப்தனுவான். அவனுக்கும் நமக்கும சம்பந்தமேற் பட்டது அவனது அன்பினுல்என்பதை முன்னரேயாங்கண்டாம். எம க்குமவனுக்குமுள்ள அன்புரிமையை எவ்வாறு கூறலாம்? இவ்விஷ யத்தில் உபநிஷதங்கள் எவ்வாறு கூறிக்களிக்கின்றன? என்பதைமுன் னர் விளக்கிக்காட்டுவாம். குருவுக்குஞ்சீடனுக்கு முள்ள அன்பின் முறை பிதாவுக்கும் புத்திரனுக்குமுள்ள முறையேதானென்பதை முன்னர் தெரிவித்தாம். ஆதியில் பிதாவே புததிரனுக்கு ஞானேப தேசஞ்செய்து குருவாயுமிருந்த காரணத்தாலேயே அத்தன்மைகுரு வுக்கும்வாய்ந்த தென்றுங் கூறினும். ஸர்வேச்வானுக்கும் மலப்பிணிப் புகளையுடைய விஞ்ஞானகேவல, பிரளயாகல, சகலரென்னும் மூவித ஆன்மாக்களுக்கும் சம்பந்தம் அன்பினுலாயவழி அவனே பரமபிதா வாகவும் பரமகுருவாகவு மிருக்கிறுன் என்று திவ்வியாகமங்களுரைக் கும். இவ்வுண்மையை "ஸர்வேஷாமபி பூர்வேஷாம்"- தூலதேகமுடை யவர்களில் முந்தினவ னென்றும் "அம்ப" கருப்பையி

டானவனென்றும், " "ஜீவகந:" ஜீவகனன் என்றும்; தேவர் பிதிரர் ஆகியமூவித வுயிர்களுக்கும் மூலமென்றும் கூறப்பட்ட ஹிரண்யகர்ப்பனும் பிரமன் எனும் புதல்வனுக்குப்பரமன் வேதத்தை யோதுவித்தானென்று "யொ ப்ரஹ்மாணம் விதயாதி பூர்வம் யொ வை வேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை। தம் ஹ தேவமாத்மபுத்தி ப்ரகாஸம் முமுக்ஷுர்வை ஸரணமஹம் ப்ரபத்யே" — "யொதேவாநாம் ப்ரபவஸ்சோத்பவஸ்ச விஸ்வாதிகொ ருத்ரோ மஹர்ஷி:। ஹிரண்யகர்ப்பம் ஜநயாமாஸ பூர்வம் ஸநோ புத்த்யா ஸுபயா ஸம்யுநக்து" "யொதேவாநாம் ப்ரதமம் புரஸ்தாத் விஸ்வாதிகொ ருத்ரோ மஹர்ஷி:। ஹிரண்யகர்ப்பம் பஸ்யத ஜாயமாநம் ஸநோ தேவ: ஸுபயா ஸ்ம்ருத்யா ஸம்யுநக்து" என்ற வேதவாக்கியங்களு மிவைகளுக்குப் பிரும்மணங்களாய்ப் போந்த "யொ ஸ்ருஷ்ட்வாதிதம் பூர்வம் ஜ்ஞாநம் ச ப்ரஹிணோதி ச। ப்ரஸாதாத்புரஷம் ப்ராஜாபத்யமிதம் பத:॥" (கூர்மம்) "ப்ரஹ்மாணம் விதயே பூர்வம் ஸ்ருஷ்டாதஸ்மை ச தேவஸ்ய ஸ:। தத்வா நவீநாநி ரூபாணி விஷ்ணு ஸுஸம்ஸ்திதாநு॥" (மத்ஸ்யம்.) " ப்ரஹ்மாணம் விதயேஸாக்ஷாத் ஸர்வதேவமயம் ஸநாதநம்। தஸ்மை ப்ரதமம் ப்ரஹ்மணே விஷ்ணவே ச விஷ்ணு ஸர்வ மோதவைஸ்வம்" (சைவம்) " ஸத்யாதிகாரணோ தே: ஸ்ருஷ்டிகர்த்தா ப்ரபு:। தேவாநாம் ப்ரதமம் தேவம் ஜாயமாநம் ஸர்வாஞ்ச। ஸர்வ ப்ரஹ்மாணம் வாஞ்சயா தம் ஸர்வேஷாம் தத்வாநு ரூபாணி ஸர்வாந ஸுஜநே" (லைங்கம்) முதலிய உபப்பிரம்மணங்களுக்கிசைய சுவேதாசுவதா சாந்தொக்கிய, வாஜஸநேயாதி உபநிடதங்கள் வெளியிட்டன; திவ்யாகமங்களுமவ்வாறே உபதேசிக்கின்றன, "ஜ்யேஷ்ட: பிதா ஸர்வ தேவாநாம் ஸிவோ ருத்ரோ த்ருஷ்டா பிதாமஹ:। பிதா ஸர்வஸ்ய ஸர்வேஷாம் பிதாமஹ ஈரித:॥" என்று பிதிருபூதர்களாகிய பிரம்ம விஷ்ணு ருத்ரமகேச்வரர் ஸதாசிவர்களுக்கும் பிதாவாய் நின்றவன் ஸர்வேச்வரனென்றும், இவ்வாறே ஸர்வாணமாக்களுக்கும் அவன் பரம பிதாவே என்றும் "யஜமாநஜாயதேவஸ்ய: பிதரம் மாதரம்

விநா । தயோராஹவம்ஹவாநீம்ச விநாசெந்தவ்யாரவஸ்ய ॥" எவ்வாறு மாதா பிதாவின்றிப் புத்திரன் கிடையாதோ அவ்வாறே சிவசக்திக ளின்றி இவ்வுயிர் வர்க்கங்கள் கிடையாவென்றும் "தயோராவதம் ஜகத்ஸவம்"- எல்லாவுயிர்களு மவன் குழந்தைகளேயென்றும், உண்மை நூற்கள் விளக்கும். யாவர் அவர்கள் குழந்தைகளென் பறி, ஸதாசிவன், மகேசுரன், ருத்திரன், விஷ்ணு, பிரமன் முதலிய எல்லாவுயிர்களும் அவரவர்களுடைய தேவிகளுட்பட அவன் குழந் தைகளே யென்று வாயுஸம்ஹிதை வெளியிட்டுரைத்தது. அன்றியு மவனது மூர்த்திரகஸ்யங்களுமவ்வுண்மையை உள்ளங்கை நெல்லிக் கனியென விசதப்படுத்தும். இம்மூர்த்திரகஸ்யங்களை யாமியற்றிய வேறு நூற்களிற் காணலாம் ஸோமாஸ்கந்தமெனும் பெயரிய ஸகள மூர்த்தியாற்றானே ஸர்வ ஜீவர்களுக்கும் பரமபிதாவானதை விளக் கினமைபோல ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திவடிவத்தாற்றானே பரமகுருவான மையை விளக்கினானென்க இதனால் பரமபிதாவே பரமகுருவாயினமை

பரமசிவன் பிரமனை முகமலரினின்று பெற்றெடுத்தான் என்றும் மீண்டுமப்பிரமனை நோக்கினானென்றும் மேற்கூறிய வேதவாக்கியங் கள் விளம்பின. ஆணவ விருளிலாழ்ந்திருந்த ஜீவனுக்குத்தான் குருவாயுபதேசித்துத் தன்னுடன் கூட்டுவதையே "முகத்திற் பெற் றெடுத்தமையும், அன்பினாலேயே அத்தன்மை வருவிப்பதையே கண் ணோக்கமுந் தெரிவிக்கும். ஸமஷ்டி ஜீவனாகிய பிரமனை யெடுத்தாண் டது வியஷ்டிஜீவர்களாகிய எவ்வுயிர்களுக்குமவ் வழியிலேயே சிவ புத்திரத்வப்பேறுண்டாகுமென்றும் ஸூசிப்பித்தது; இதுவே சைவ தீக்ஷையென்க. இதனாற் புதல்வனைச் சிவதர்மத்திற்கருகனாக்காத பிதாவும் பிதாவாவனோ! அந்தோ இவ்வருள் வழியைவிடுத்து மருள் வழிக்காளாக்குகின்றனரே தற்காலத்திய போலித்தந்தையர்!

பெருங்கருணையினால் நம்மையநாதி மலத்தினின்று சிருஷ்டி யாதிகளில் எடுத்துவிட்ட ஸர்வேச்வரன், தர்மாதர்மம் பந்தமோக்ஷா திகளைத் தெரிவிக்கவேண்டி நமக்குச் சாஸ்திரத்தையுமருளியிருக்க லாம். ஆயினவன் எவ்வாறருளினான்? அச்சாஸ்திரந்தான் யாது? ஏனையசாமான்ய சாஸ்திரங்கட்கு மச்சாஸ்திரத்திற்குமுரிய வேற்று மையை எவ்வாறறிவது? விளக்குதும்.

ஸர்வேச்வரன் நிஷ்களனே. நிஷ்களனாகிய அவன் எவ்வாறு ஸாவயவங்களும் மூர்த்தங்களுமானவிப் பிரபஞ்சங்களுக்குக் கர்த்

அவவாறே நிஷ்களனுகிய பரமன் அகாராதி யக்ஷரங்க ளின் சேர்க்கையான சாஸ்திரத்திற்குக் கர்த்தாவாயினன். பிரபஞ்ச மானது ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவு மிருக்கின்றது. இதில் ஸூக்ஷ்மத்தினின்றே ஸ்தூலமுண்டாயிற்று. "ஈஶ்வரமேவைதிஷ்ட்த்யம் அநௌபம்யமநாமயம் । ஸூக்ஷ்மம் ஸர்வகதம் நித்யம் த்ருவமவ்யயமீஶ்வரம் । ஶிவதத்த்வமிதம் ப்ரோக்தம் ஸர்வாயோவாஸிஷ்யதே ॥" என்று எல்லாவற்றிற்கும் மேலாக அளவிடக்கூடாததாய், எண்ண முடியாததாய், தனக்கு நிகரில்லாததாய், எங்குமிருந்ததாய், ஸூக்ஷ மமுமாயுள்ள பதார்த்தமொன்று "சிவத்தவமெனப்பட்டு அரூபமா யிருந்தது" அதைச்சிவன் "வொகாஊயத" "தமெக்ஷத"– அவன எணணினை அவன பார்ததான என்ற படி சிருஷ்டிக்க இச்சித்தவுடனே அவனுக்கபின்னமாகிய சூரிய னிடங்கிரணம் போன்ற சிவசக்தியானது அச்சிவதத்வமெனும் அருவவியாபக ஜடப்பொருளைச் சிறிது கலக்கிற்று. அதிலிருந்து ஒரு சலனமுண்டாயிற்று. அச்சலனத்திற்கு "நாதமென்று பெயர்" அதிலேற்பட்ட "சுழிக்கு" பபிந்துவென்று பெயர். அரூபமாகிய சிவ தத்துவமானதுசப்தபிரபஞ்சம் அர்த்த பிரபஞ்சமென இருவிதபிரபஞ் சத்திற்காதாரமா யிருந்தது. அரூபமாகிய பபிந்துவே ஸூக்கும மாகிய கலாதிதத்துவங்களாகி, இச்சூக்குமகலாதிகளே ஸ்தூலதநு காணபுவனங்களாயின. இதனால் ஸாவயவவிப்பிரபஞ்சத்திற்கு மூலோ பாதான வஸ்து சிவதத்துவமெனப்படும் பிரணவமாம் அரூபசூஷ்ம வியாபக வஸ்துவாகும். இதை நிஷ்களாகிய பரமனதிஷ்டிப்ப தால் இதற்குச் சிவதத்துவமென்றும், சுத்த தத்துவமென்றும் பெய ரமைந்தது. "ஶுத்தாத்வநி ஶிவ: கர்தா" சுத்தாத்வாவில் சிவன் கர்த்தாவென மிருகேந்திரம் கூறியது. ஏனையவஸ்துக்களுக்கும் சிவனே கர்த்தாவான காலத்தும், நேரேயதிஷ்டிக்காமல் சில தத்து வங்களுக்கந்தர்பூதமாயிருக்கின்றார். "ஏதானி ஸர்வாணி ஶுத்தி ராஜ ஸநாதனீ"– இவையெல்லா மோமென்றே பழமையான சுருதி கூறிற்று. "ப்ரக்ருதே: பரிணாமோऽயம் ஶப்தார்த்த ஸ்வாவித: ॥" என்ற வாக்கியப்படி பரப்பிரகிருதியின் பரிணமம் சப்தமென்றும், அர்த்தமென்று மிருவகைத்து. சப்தத்தின் பேதமா னது சொற்பிரப்ஞ்சமென்றும் அர்த்தத்தின் பேதமானது பொருட் பிரபஞ்சமென்றும் இருவகைத்தாம். அர்த்த பிரபஞ்சத்திற்கு மூலம்

"ஓமெனும் பிந்துவாகும்" சொற்பிரபஞ்சத்திற்கு மூலம் "ஓமெனும் நாதமாகும்." இவ்விரண்டுமமைந்தது "சிவதத்துவத்தில்" இச்சிவதத்துவத்தின் காரியங்கள் "அத்துவாக்கள்" (வழிகள்) அதாவது "ஆத்மாக்கள் சுத்தியையடையும் வழிகள் எனப்படும். அவைகள் ஆறாகும் "ஸாவித்ராகமஸ்ரோதஸி வைஷ்ணவ்யாத்மவிஜ்ஞாநே"— "தத்ர ஶப்தார்த்தயோர் ஷடத்வாந: ஸம்ஸ்திதா:| ஸர்வேஷாமேவ தேவாநாம் ஸம்ஸ்தாநம் ஶப்த நாமவத்:| ஶப்தோ ஹ்யாதிகாரண பத்ருத்வாதிதி நிஶ்சய:|| மந்த்ராத்வா பதாத்வா வர்ணாத்வேதி ஶப்த:| தத்வ நாமாத்வா கலாத்வா புவநாத்வா ததா (அர்த்த):" என்ற வாக்கியப்படி மூன்று அத்துவாக்கள் சப்தமயமாயும் மற்ற மூன்று அத்துவாக்களும் அர்த்தமயமாகவுமிருக்கும். அர்த்தபிரபஞ்சமென்பது தநுகரணபுவன போகங்களாயிற்று. இவ்வாறே "சப்தப்பிரபஞ்சமானது" சாஸ்திரமாயிற்று. அர்த்தம் அல்லது பொருள் எவ்வாறு கண்ணுக்கு விஷயமாகி திருச்யப்பொருளாயிற்றோ அவ்வாறே சப்தம் அல்லது சொல் காதுக்கு விஷயமாகி 'சிராவ்ய'மாயிற்று. கண்ணுக்கு விஷயமான தேகத்தைக்கண்டு அதன் விசித்திரவேலைப் பாடுகளையுணர்ந்து இஃது ஜீவனுக்கு போக்கியமென்றுணர்வது போலவே காதுக்கு விஷயமாகும்சாஸ்திரத்தைக் கேட்டு அதிலமர்ந்த அதிரகஸ்ய வுண்மைகளையுணர்ந்து இஃதும் ஜீவனுக்கு உத்தாரகமென்றுணர்வோம். புவனமும் அவன் செயலே சாஸ்திரமும் அவன் செயலே. புவனம் கண்ணுக்கு விஷயம் சாஸ்திரம் சுரோத்திரத்திற்கு விஷயம். கண் காது எனுமிவ்விரண்டிலுமேயே ஞானவிருத்தி. ஞானேந்திரியங்களிற் கண்ணும் காதுமே முக்கியமானவை. கண்ணமைந்தது பார்த்தறிய. காதமைந்தது கேட்டறிய. இவைகளே "Intellectual Senses" என்பவைகளுட் சிறந்தன என டாக்டர் பெயின் (Dr. Bain) முதலோர் கூறுகின்றனர். ஞானக்கிரகணத்திற்கெனவே இவைகளமைந்தன. அவைகள் உயிர்களினுத்தமாங்கத்தில் இரண்டிரண்டாக விரிந்துகொள்ளுமுறையிலமைந்தன. சிரவணமும், தர்சனமுமே ஈச்வரானுபூதிக்கு முக்கிய சாதனங்கள் எனத் திவ்வியாகமங்கள் முழங்கும். மனதெனும் பொக்கிஷவறைக்கு வாயிற்கள் கண்களும் காதுகளுமே. பலமாறுதல்களையடைந்து எவ்வாறு கண்களுக்கு உலகம் விஷயமாயிற்றோ அவ்வாறே பலமாறுதல்களையடைந்து காதுக்குச் சாஸ்திரம்

விஷயமாயிற்று. உலகமவன் செயலே. சாஸ்திரமவன் மொழியே. இவ்வுலகத்தில் நமக்குத்தனு, கரணங்களமைந்ததையே ஓரிடத்தில் ஒருதொகுப்பாய்க் காண்கிறோம். ஸ்தூலதிருஷ்டிக்குச் சூரியன், சந்திரன்மற்றைக்கிரகங்கள் அமைந்தமையை ஒருதொகுப்பாயிருப்பதாகக் காணவில்லை. தனித்தனிபோல நாம் காண்கிறோம். உண்மையில் அவைகளும் நமது தேகத்திலுள்ள பலவமைப்புகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று சாதகமாமோ அப்படி ஒன்றுக்கொன்று சாதகமாகும். இதை ஊகித்தறியவேண்டியிருக்கிறது. அப்படிப்போலவேநமதுவாய்மொழி, கேழ்வைகளையே "பிரதீதி" யுடையனவாக மதிக்கிறோம். உண்மையில் இடி, காற்றினிறைச்சல், முதலிய எல்லாச்சத்தங்களுக்கும் "பிரதீதி" (கருத்து) இல்லாமற்போகவில்லை. நமக்கின்றியமையாப்பிராணவாயுவினுதவியை வெளியிலுமுள்ளும் நாமனுபவிப்பதுபோலவே எல்லாவமைப்பும் நமக்குப்பிரயோஜனமே யாகும். இதனுலிடிமுழக்கம் பேரிறைச்சல் முதலியவைகளும் நமக்குப் "பிரதீதி" அல்லது கருத்தைத் தெரிவிக்கின்றன. இவ்வுண்மையையே திவ்வியாகமங்களும் "நாஸ்திகஸ்சித்ஸசப்தோயேநார்த்தோநாபிதீயதே நிமேஷக: । ஜ்ஞாநேதிஹிஸமஸ்தஸ்ய சப்த: சப்தார்த்தயோர்த்தகயோ: யக:" எல்லாச் சப்தமும் பொருளைக்குறிக்கின்றது. எல்லாப் பொருளும் சப்தத்தாற் குறிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சப்தமுமுண்டான சமயத்தை நாம் உணர்வோமாயின் எல்லாச்சப்தங்களும் பொருள்களைக் குறிக்கின்றமை தெரியப்படும். சேதனுசேதன விருவகைப்பிரபஞ்சத்திலும் பொருட் சப்தாவபோதகமுண்டு. அப்படியே சப்தங்கட்கு அர்த்தாவபோதகமுமுண்டு.

கண்ணுக்கு விஷயமாகும் பொருட்பிரபஞ்சம் எவ்வாறு முதல்வனுடைய அறிவையும் வல்லமையையுங் காண்பிக்கின்றதோ அவ்வாறே "சாஸ்திரமானது" அவனுடைய பேரறிவையும் பெருந்தன்மையையும் காண்பிக்கின்றது. ஒன்று அவன் தொழில் (Work) மற்றொன்று அவன் மொழி (Word) ஒன்று முதல்வனை காண்பிக்கின்றது. மற்றொன்று முதல்வனைக் கூறுகின்றது. இரண்டினுலும் பெறப்படுமுண்மை ஒன்றே. ஒன்றற்கொன்று மாறுபாடாகக்கொள்வது மூதறிஞர் கொள்கையன்று.

முதல்வன் பொருட்பிரபஞ்சத்திற்குக் கர்த்தனுயிருத்தலைப் பஞ்சகிருத்தியங்களை விளக்கும் "ஆநந்த நடராஜவடிவமும்" சொற்பிரபஞ்

சத்திற்குக் கர்த்தனுயிருத்தலைச் சாஸ்திர உபதேசத்தன்மையைக் காட்டும் மேதா தக்ஷிணமூர்த்தி வடிவமும் விசதப்படுத்தும்.

*அவனது அருட்டிறங்கள் திருக்கோயில்களிற் பிரதிஷ்டிக்கப்பட்ட பொருளுருவங்களால் குறிக்கப்படுவன போலவே, ஆகமச் சொற் சத்தங்களினாலும் குறிக்கப்படுகின்றன.*

*இனி எவ்வாறு சாத்திரமவன் வாய்மொழி யென்பதையுங் கவனிப்பாம் "ஶப்தார்த்தாகாரவிஸ்ருஷ்டியா ஶாக்த்யா கஸ்ருஷ்டதைவத: யைர்ஸ்தூலஸூக்ஷ்மபரானேதிஸ்தூலஸூக்ஷ்மாதஸ்ருத்ரதிமேதயா ஸூக்ஷ்மாவிம்ஶதிதத்வேன்தா ஶாக்தவிம்ஶதயாரஸிதாவரா ॥" இறைவனது விபூதியாகிய சப்தம், அர்த்தமென்பவைகளில் "சப்தம்" எனும் விபூதியானது ஸ்தூலம, ஸூக்ஷமம், பரமென மூத்திறபபடும். ஸ்தூலமானது சுரோத்திரேந்திரியத்திற்கு விஷயமாவது. ஸூக்ஷ்மம் ஒருவாறு மனதினாலுணரப்படுவது பரமென்பது கரணங்களையும் இந்திரிகளையுங்கடந்தது இவைகளே பரை, பச்யந்தி, மத்திமை, வைகரி என நான்காகும் இதிறபரையே பல ஸ்தானபேதங்களையடைந்து வைகரியாயிற்று. இப்பரையானது வாகீச்வரவரி எனவும் பெயர் பெறும். இது சிவதத்துவத்தின் பிரதம ஸ்பந்தத்தினால் எழுந்த பரநாதமாம். சலனப்பட்ட போது சிவதத்துவமடைந்ததைப் பிந்துவென்று கூறினும். இந்தப்பிந்துவே பரையெனுஞ் சத்தத்தினால் குறிக்கப்பட்டு, சாநதியதீதை எனும் பொருளின் பெயராயமைந்தது. சாந்தியாதீதையே நிவிருத்தி பரியந்தமான பொருளாய்ப்பவித்ததுபோல யததற்கனுகுணமாக பரநாதமே வைகரியாதிகளாய்ப் பவித்தது. இச்சபத மெவ்வாறு சாத்திரமாயிற்றெனில் கூறுதும்.*

*சிவசக்தி நேரே யதிஷ்டிப்பதால் சிவதத்துவமெனப்படும் குடிலை (வளைந்து வியாபகமாயிருக்கும் பொருள் என்பது அதன் கருத்து) எனும் பொருளுண்டு இதனுள்ளும் புறம்பும் வியாபகமாயிருக்கும் பொருள் இச்சாஞான கிரியாவாகிய சிவன். இச்சிவனதிச்சையால் ஆன்மாக்களின் பொருட்டு அவனதுசித்சக்தி இச்சிவதத்துவத்தை க்ஷோபித்தது. அச்சத்தியின் அசைப்பினாலுண்டாகிய அசைவு சிவதத்துவ முழுமையும் வியாபித்தது. இதிலுண்டாகிய அதி ஸூக்ஷ்ம ஓசையுட னுயரக்கிளம்பியபேரொளிக்குப் பரநாதமென்று பெயர். அவ்வசைவினாலுண்டாகிய திவ்விய ஒளிப்பரப்பிற்கு (கீழ் வட்டத்திற்கு)ப் பரவிந்துவெனப் பெயர். இப்பரபிந்துவின் ஒளியினைத்தெனக் கூறமுடியாது. இவ்வாறே இப்பரநாதத்தின் இனிமையி*

ரது. பிந்துவுருவங்களினழகிற் கிசைந்தவாறே நாதத்தினினிமையுந்தோன்றும். * ஸ்தூலத்தினின்றும் ஸூக்ஷ்மங்களுக்குச் செல்லும்போது அழகும், இனிமையும் அதிகரிக்குமென்பது சைவசித்தாந்தக்கொள்கை. அவ்வாறே தத்துவங்களுமமைக்கப்பட்டுள்ளனவென்பது அதன் றுணிபு. அதற்குத் தகுந்தவாறே யத்தத்துவங்களிலுறைவோராகிய ஆன்மாக்களின் தெய்வசம்பத்தும் சிவைச்வர்யங்களும் விளங்குமென்பதவர் கண்டவுண்மை. பேரானந்தத்தைப் பெருகுவிக்கும் பெருவண்ணங்களையுடைய பிந்துரூபங்களும் அவைகட்கிசைந்தவாறு பேரானந்தக்கடலில் மூழ்குவிக்குமினிய தெய்வீக இன்னிசையும் பொருந்திய பரநாதமும் ஒன்றற்கொன்று பொருத்தமுடைத்தாய் தெய்வத்தன்மையை விளக்கா நிற்கும்; ஸ்ரீ காளிதாஸ ரிவ்வுண்மையைப் பல வினியமொழிகளாற் கானஞ் செய்துளார் "அநாஹதமென்னும் பிரதேசத்தில் பெரிய வாநந்தப்பெருக்கமுடையப் பரநாதமெனும் பெரிய வற்றுநதி யொன்றுண்டு. அந் நதிவழியே சென்ற புண்ணியவான்கள் பிறப்பிறப்பென்னுஞ் சுழிகளைக் கடந்த என்றுமோரியல்பொடு நிறுத்தவல்லதோர் "அமிருதாப்தியை" (Ocean of Immortality) யடையலாமென்றும் அவ்விடத்தே ஆன்மகோடிகளைச்சேர்க்கவல்ல அன்னை யொருத்தியுண்டென்றுங் கூறியருளினர் "வஹஸிவுர நாஷாஜூத நீேஹவாநிவு த்ரூவ ஷூஷிஷூஜதாஷிவு ணயிநீ" என்றும் "அநாஹதமெனும்பதத்தில, முத்தியில் என்றைக்கு மனுபவிக்குமாநந்தத்திற்கறிகுறியாய் அன்னையி னருள்தானேவென்று சொல்லக்கூடிய சொல்லுக்கடங்காச் சுகவாரியொன்றுண்டென்றும் அதனினிமையைக் கண்ணீராருய்ப் பெருகவிட்டுச் சொல்ல வன்மையற்று உள்ளுருகித் தேம்பியழும் தெய்வஸம்பத்துடைய அன்பர்கள் ஒருவாறறிவார்களென்றார். "ஜூநஷூஷணை ஜநாஹதநாதிஷெஶெநாஷா

* Cf "It has been always easy to deride and condemn the bodily side of our nature; *but by the truest seers this has not been done.* The glorification and transfiguration of the body has been the theme of prophets and poets of profoundest insight" (*Sir oliver lodge.*)

Saiva Siddhanta concedes that man gets more and more glorious bodies capable of receiving and emitting more Lıght and more Love.

த்ருநா ஸரிண தாண்டவாரம்பே ஸதீசே। ஸம்ஹ்ருத்ய ஜீவாந்ஸர்வாந் ஸரீயஸோதம் ஸம்ஸாரக்லேசநுத்திஹேதோஃ ஸவிசேஷ்யநூபுராஃ" என்று கனுழந்தார். இப்பரமானந்த பரநாதத்தைப் பலவிதமாக உருவகப் படுத்தி வர்ணிப்பதுண்டு. எம்பெருமானது பஞ்சகிருத்திய கோலத்தைக்காட்டும் ஆநந்தநடராஜவடிவத்திலிதைக் காற்சிலம்பொலியென்றும; அபரமுத்தர்களை வாவென்றழைத்துக் கூவும் கண்டாரவமென்றும்; அனுசிருதாதிபுவனங்களிலுள்ள அபரமுத்தர்களெனப்படும் சிவரூபர்களான தன்னருமைக்குழந்தைகளுக்கு, இதுவரை ஸம்ஸாரத்தில் கஷ்டப்பட்டு வருந்திவந்த இளைப்பாறும் பொருட்டு மகாப்பிரளயத்தில் பேரன்னையாகிய சிவசக்தி பாடும் தாலாட்டென்றும், அபரமுத்தத்தன்மையைவிட்டு பரமுத்தியடைவதற்கு மவ்வழியே சென்றன்னையினது முழுந்தாளைத் தழுவி யவளது கருணைததும்பிய முகமண்டலத்தை நோக்கி யவளதீனமாய் நிற்க அவ்வன்னையும் வாரியெடுத்து மடிமீதிருத்தி, ஆநந்தஸ்தந்நியமுளம்பூரிக்க வூட்டி பக்கலிலிருந்தவல்லதாகிய அன்னையின திருப்பைககாட்டவல்லமெட்டியின்மெல்லோசையென்றும், பலவிதமாகக் கூறப்படும். இத்தகைய பரநாதமே அவன் மொழி. இதுவே "ஓம்" எனும் தாரகம். அவிமுக்தமெனும புருவமத்தியில் அஸிவருணா நதிகளாகிய இடாபிங்கலாவெனும் நாடிக ளிரண்டுங் கூடின காலத்தில் விசவமாயைக்கிறந்துபடும் யோகிகளுக்கறிவுறுத்தும் தாரகம் எனும் பிரணவமாகும். இதுதான் முதற்சத்தம். இதுவே கடைச்சத்தம். துரிய சிவந்தவிற மற்றெல்லாச் சாஸ்திரங்களும், எல்லாத தத்துவங்களும், எல்லா அவததைகளு மிதிலடங்கும. துரியங்கடந்த சுடர்தேதாகையுடனென்றும் பிறியாதேநிறகின்ற பெமமானுக்கடையாளமான வாக்கியமு மிதுவே. இதன் பெருமையைச்சொல்லாத ஆகமங்களில்லை. உபநிடதங்களில்லை. ஈசனொருவனுண்டென் றுணர்த்திய பதஞ்சலி பகவான் "க்லேசகர்மவிபாகாசயைரபராம்ருஷ்டஃ புருஷவிசேஷ ஈச்வரஃ" அவித்தியாஸ்மிதா ராகதுவேஷாதிபஞ்சக்கிலேசங்கள், குசலா குசலாதி கர்மங்கள், அதனது போகங்கள், அதனது பற்றுதல்கள் முதலியவைகளில்லாதவன் ஈச்வரன்." என்று நிர்த்தாரணம் பண்ணினபிறகு "தத்ர நிரதிசயம் ஸர்வஜ்ஞபீஜம்" "ஸ பூர்வேஷாமபி குருஃ காலேநாநவச்சேதாத்"—

மவன் குரு (உணர்த்துபவன்), 'காலத்தால் வரை

யறுக்கப்படாதவனுதலால்" என்ற ஸூத்திரங்களை ஏற்படுத்து அதன பிறகு "தஸ்ய வாசக: ப்ரணவ:"— அவனைக் காண்பிப்பது பிரணவம்:"—என்ற ஸூத்திரத்தை வைத்தார். அதன்பின்னர் "தஜ்ஜபஸ் தத்ர்த்தபாவநம்" எனும் சூத்திரமுணர்த்தப்பட்டது. இதன்பொருளை "பிரணவஜபத்தால் அதன்பொருளாகிய ஈச்வரனது பாவனை ஏற்படுகின்றது" என்ற வியாசபாஷியத்தாலறிகிறோம். "ப்ரணவஸ்ய ஜப: ப்ரணவாபிதேயஸ்ய சேச்வரஸ்ய பாவநம்।" என்பது வையாசிகபாஷ்ய வசனம். சாஸ்திரபிரமாணத்தா லறியக்கிடந்த ஈச்வரனை குருவென்றுங் கூறியதால், அவனைக்காட்டும் மொழி (வாசகம்) பிரணவமென்றதாலும் வாச்சியனுகிய சர்வேசனும் பரமகுருவின் உபதேசமொழியும் பிரணவமேயாகும். ஆதலின் இப்பிரணவந்தான் ஈசனது மொழியாகிய சாஸ்திரம். இப்பிரணவமே ஈசனைக் கூறும் சாஸ்திரம். இதனு லீசனைக்காட்டக்கூடியது மீசன் சொன்னதுமான சாஸ்திரம் "ஓம்" எனுமோரு மொழியே. சப்தமனைத்திற்கும் "ஓம்" என்பதே வுண்மை என்பதைச் சில காரணங்களால் நிச்சயமாய் அறியலாம். ஒரு கிராமத்தில் திரளான ஜனங்கள் சேர்ந்து சில காரணங்களை முன்னிட்டு உறக்கப்பேசி யிரைச்சலிடுவதாக எண்ணுவாம்; அதைக் கொஞ்சதூரத்திலிருந்து கேட்பவனுக்கு அவ்விரைச்சல் "ஓ........." எனவே செவியிறபடும். அன்றியும் ஒருவன் றனது காதைச் சப்தம்படும்படி மெல்லப் பொத்திக்கொண்டால் கேட்பது 'ஓ' வெனுஞ் சத்தமே. அன்றியும ஒருவன் ஓர் மலையுச்சியினின்று நாற்பக்கங்களிலுந் தனது பார்வையைச்செலுததக் காணப்படுவது ஓரே வர்த்துளமான ஓர் காக்ஷியாகும். கண்ணை மூடிக்கொண்டு இவ்வுலக வடிவத்தை யுள்நினைப்பினும்படுவது "வட்டவடிவே." இவ்வடிவம் என்று மழியாதவடிவம்—இவ் "வோ" எனுஞ சப்தம், என்று மழியாதது. இதற்கும் பரமேச்வரனுக்கும "நித்தியஸம்பந்தமென்பதை வையாசிக பாஷ்யத்தில் "ஸம்ப்ரதிபத்தி நித்யதயா நித்ய: சப்தார்த்தஸம்பந்த: இத்யாகமிந: ப்ரதிஜாநதே" "ஆகமிகர்கள் சத்தத்திற்கும் பொருளுக்கும் உள்ள சம்பந்தம் நித்தியமென்பதை உறுதிசெய்கின்றுர்கள்" என்று சொல்லிவிட்டு பிரணவமெனும் வாசகத்திற்கு வாச்சியம் ஈச்வரனென மொழிந்திருப்பதால் சாஸ்திரம் என்பது "ஆகமமெனும்" பெயரால் வெளியாயது கண்டீர். அன்றியும், சைவாகமத்திலேயே இவ்வாறு கூறப்பட்டுளது. ஸ்ரீ பௌஷ்கரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுளது. "நிஷ்களாஜ்ஞாரூபேணாக்ஞா

ஜ்ஞாநமார்க³: ப்ரவர்த்ததே । இத்யுக்தம் தத³யுக்தம் ஸ்யாத் வாகி³ந்த்³ரியவியோகத:। வாகி³ந்த்³ரியாநபேக்ஷஸ்ய ஶக்திஸ்வரூபநிஸ்ஸ்ருதா। க்ருத்யம் தவிஶேஷேண ந தஸ்யாஶ்சர்யமிஹோச்யதே । ப்ரவ்ருத்திஶ்சாஸ்ய ஶாஸ்த்ரஸ்ய ப்ரவ்ருத்யாநுக³ணாஸ்ய ச। நாத³பி³ந்தோ³: ப்ரஸ்ருதி: ஶப்³தா³நாம் நிஸ்ஸ்ருதிஸ்ஸ்ம்ருத: । ஶப்³தா³ஸ்து பாரம்பர்யேண ஶிவஜ்ஞாநஜ்ஞாபகா:”

“ நிஷ்களத்திலிருந்து நாதரூபமாக ஞானமார்க்கம் பிரவிர்த்தித்தது: இந்த வாக்குமுதலிய விந்திரியங்களில்லாதவனுக் கெவ்வாறெனின், வாக்கிந்திரியாதி துணைகளை யபேக்ஷிக்காத அவனுடைய வல்லமை எங்கும் பரவியிருக்கின்றது. கொஞ்சங்கூட மனமென்பதில்லாத அவன் அவ்வாறு மொழிந்தான் என்பதில் என்ன ஆச்சரியம். சாஸ்திரத்தின் பிரவிருத்தியானது (வெளிக்கிளம்பல்) சித்சக்தி வியாபாரத்தைப் பொருந்தியிருக்கின்றது. நாதபிந்துக்களினுடைய பிரஸிருதியே சப்தங்களினுடை பிரஸிருதியாகும். இச்சப்தங்கள் பாரம்பரியமாக (ஒன்றன்பின்னொன்றாக அல்லது வழிவழியாக பரம்பரையாக) சிவஞானத்தைக்காட்டுங் குறிகளாம்.

“ ஜநாதௌ³ ஸ்ருஷ்டிஸம்ஸாரே காரணம் பரமேஶ்வர: । ஸ்வபா⁴வஜம் தத³நாதே³ந ப்ரஸ்ருதாக்²ய: ப்ரபோ⁴: । தத³ஸ்வதே³ச்சா²க்²யயா ஶிவஸ்ய க்ருத்ஸ்நாமரா: । ஸிஷேவுர் யேவஸவேஷ்டா: தே த்³ருஷ்டே நந்த³ராஸ்த³ । தத³நுக்ஷோபி⁴தம் விஶ்வகாரணம் யோகமாயயா । தத்க்ஷோபி⁴தஸ்ஸ்ரஷ்டும் ஶாஸ்த்ரம் நாதே³ஶ்வரோ பூ⁴த: । ப்ரவ்ருத்தந்து³த³ய: கிஞ்சித்³ ஜ்ஞாநகாரகஶ்ஶிவஸ்ய । ஸர்வபி³ந்து³தி³வ்யாதஶ்ஶாஸ்த்ரம் ப்ரஸவோ மஹ: ॥” “ஜகத்தி னுதயகாலத்தில் சிவன திச்சையாகிய சக்தியால் எல்லா வானமகோடிகளுமுற்பவித்தவுடன் விச்வத்திற்குக்காரணமாகிய பிந்துவானது க்ஷோபிக்கப்பட்டது. அதிலிருந்து உள்ளவாறு (நாதமாகிய) சாஸ்திரம் உண்டாயிற்று” என்று பௌஷ்கரமுங் கூறிற்று. இதனால் முதல் முதலிலுண்டான சாஸ்திரம் என்பது “பிரணவம்” இப்பிரணவமே நாசாகிதமென்றும் சிவனது சக்தியால் “உச்வாசநிச்வாசம்” போன்றதென்றும், இப்பிரணவமே பதே பதே வந்து பின்னர் சகலாத்மாக்களாகிய பிரமதேவன் முதலிய ஸ்தூலபிரபஞ்சத்திற் “அகாராதியக்ஷர சப்த சமூகங்களாய்ச் சுருங்கினவென்பது தோன்றும். இதனால் தார்க்கிகவை

சேஷிகர் ஈச்வரன் வாக்கென்று கூறும், "ஆகமமும்" மீமாம்சகர் அநாதியென்று கூறுமாம்நாயமும், ஈச்வரனிடத்து உச்வாச நிச்வாசமாகயிருந்ததென்று வேதாந்திகள் கூறுவதும் இவ்வோமெனும் பிரணவமாஞ் சாஸ்திரமேயன்றி வேறன்று. பிரணவமே "வேத"மெனப்படும். இதனால் அகிருதகமாய், ஸ்வயம்புவாய், பிரம்மத்தினது உச்வாசநிச்வாசமாய், அநாதியாய், ஈச்வரனுடைய வாக்காய், ஈச்வரனைக்குறிக்கும் குறியாய நிகமம், ஆகமம், சப்தம், சுருதி எனப் பல பெயர்களால் வழங்கப்பட்டு வருவது பிரணவ சாஸ்திரமே. இவ்வுண்மையை யறியாதாரே, பதவாக்கியங்களாயுள்ள மற்றை இருக்காதிகளை ஈச்வரன் வாக்கென்றும், அநாதியென்றும், ஸ்வயம்புவென்றும், வெகுவாறுய்க்கூறுவர். இவைகளில் ஈச்வரஞானமில்லையென்று யாங் கூறவில்லை. இவைகளப் பிரமாணமென்றும் கழறியதில்லை. யாங் கூறவந்ததெல்லாங் கூடியவைகள் ஆதியையுடையனவென்பதும், கிருதகங்களென்பதும் (செயற்கைகளென்றும்), ஈச்வரானுகிரகத்தைப் பெற்ற பிரமாதிகள் மூலமாக வெளிவந்தவைகளென்பதூ முண்மையே யன்றி, அபிமானமபொங்கிப் புலம்புமொழிகள் பிதறறுரையென்பதுமேயாம். இவ்வாறேதான் ஆகமங்களும். ஆகமங்களும் கிருதகங்களேயாம். அநாதியன்று. சக்திநிபாதமடைந்த பெரியோர்களின் வாக்குகளே. வாக்கியரூபமான வேதங்களுமாகமங்களும் சிரவணாதிகளை யபேக்ஷிக்கும் "சகல வர்க்கத்தார்க்குறியனவேயாம்" சகல வர்க்கத்தார்களே சிரவணேந்திரியங்களாலும், வாக்கிந்திரியங்களாலும் சப்தோச்சாரண, சப்தசிரவணாதிகளை யபேக்ஷிக்குந் தீராவர். சகல வர்க்கத்தாருக்கு மேம்பட்ட பிரளயாகல விக்ஞானகலாதிகளிவ்வித வபேக்ஷையைக்கொண்டவரல்லர். அசுத்த மாயா, சுத்த மாயாதி வியஞ்சகங்களை யபேக்ஷித்தவராயினும் அவர்கள் வைகரி வாக்கை யபேக்ஷித்தவரன்று. விக்ஞானகலர்களுக்கு இறைவன் அறிவுக்கறிவாய்நின்றுணர்த்துகின்றார். பிரளயாகலர்களுக்கு அறிவின்கண் பிரகாசிக்கின்ற சிற்சில தேஜோரூபங்களாலுணர்த்துகின்றார். சகலர்களுக்கே "செவி" "மொழி" யாதிகளைக்கொண்டுணர்த்துகின்றார். சிவாகமங்களிலிவ்வுண்மை செவ்வனே விளக்கப்பட்டுள்ளது. ஸ்வாயம்புவாகமத்தில் " [illegible]

ஊர்க்ஷோமமுவஶுதமுகுஃ । ஸகலஜேவஶிவஜ்ஞாநம் விஹிதஂஷமயா வாநஃ ॥" சிருஷ்டிகருப்பிறகு மலமாயையாதிகளின் நிவிர்த்தியின் பொருட்டும், சிவத்வ அபிவியக்தியின்பொருட்டும் சிவனிடத்தி லிருநது ஞானம்பிரவிர்த்தித்தது. அது பிரணவம். அது முக்திக் குறிய சிவஞானமெனப்படும். இநத ஒன்றே பத்துவிதமாக பிரணவர் முதலிய பதினமருககு (விஞ்ஞானகலர்க்கு) அறிவுக்கறிவா யுணர்த் தபபட்டது. ஸ்ரீ காமிகத்திலும இவ்வுண்மை விளக்கப்பட்டுள்ளது.

இனி எவ்வாறு பிரணவநாதமானது வாக்கியரூபங்களாகிய சாஸ்திரமாயிறறெனில்,

" நாதோம்ஸுஜதிவேத்ர ஸநாதோஜாயதேவராஃ ।
நாதாஃ பிந்தாஃஸமுஜ்ஜநேதா பிந்தோராத்யஸ்வரோவஃ ।
தஸ்மாஸ்வரமயம் ஜகத் ஜகதேதஷாம்ஷோதஸயோத்ஶ ।
ஸ்வராஷ்டாரஶஜீவாஸ்யாஃ காதயோதேஹவந்தாஃ । ஸம்வ்யாதே வதாஸிம்ஶத்வஸவ்யஜநாநிதா । வர்ணோவாயிவிஹோதே வ்யாபம்தேதேரேவஸவதஃ । தேதரேவர்வி சஂஶாஸ்த்ரம் வராவரவிஹிதம் ॥
நவவர்ணம் தாநாதாவ்யம் வாவாஶயவர்ணஹிதம் । ஸநாதஃ கயாஸ்தேவிஷ்வாஃ வபராமயெய்ஶ்யநாஶிஃ । ஸ்ருதம் ஸம்த்க்ஷ வர ஶ்ருதித்ரவிஃ வரிவ்யதே । ஶப்தபோயாநாஹந்தாத்ர ஸவமுவராணிஹுத்ஸிஸ்ரிதஃ। வஞாஶத்ரஹதேதேந வஂவாஶவசிதமத ஹேதஃ। ஸாஸ்ரிதாஶாதத்காஜ்ஞா ஸாயஸேஸஸ்தகஶ்ரிமுஹிஃ॥"

நாதத்திலிருந்து பிந்துவும், பிந்துவினிடமிருந்து அக்ஷரமுமுண்டா யிற்று. அதிலிருந்து இரண்டிரண்டுயிர்கள் உண்டாயின. அவை களின் பிறிவு பதின்மூனறும் பிநதுவிலிருந்து வர்ணங்களுண்டா யின. "அகாதி பதினறும்" ஸ்வரங்களென்றும் ஜீவர்களென் றும் "ககாதிகள்" தேகங்களென்றும் எண்ணப்படும். இவைக ளினலேயே சாஸ்திரங்களுண்டாயின. இதனறியக்கிடந்தது யாதெ னின், விஞ்ஞானகலர்களுக்கு எந்தப்பிரணவம் கேவலம் அரூப மாய் அவிகாரமாய் அகண்டமாயிருந்து வியஞ்சகமாயிருந்ததோ, அதே பிரளயாகலர்க்குப் பிந்துவின்னிகழ்ச்சியினல் "அகாரதி வர்ணங்களான தேஜாதிரூபங்களாயிற்றென்றும்" மீண்டும் அவ்வக ராதிகளே "வாக்கியங்களாகி" சகலர்க்குதவிசெய்கின்றனவென்றும்

ஏற்படுகின்றது. "வாக்கியங்கள்" ஸ்தூலமென்றும் "வர்ணங்கள்" ஸூக்ஷ்மமென்றும் "பிரணவம்" பரமென்றும் கூறப்படும். இதனால் பிரணவமே "வர்ணங்களாகி, அவ்வர்ணங்களே வாக்கியங்களான தால், சிவஞானமாகிய பிரணவமே பாரம்பரியக்கிரமத்தால் எம் போன்றவர்க்குச் சிவஞானத்துக் குபகாரமாய் நிற்கின்றதென்றும் வாய்மை வெளிப்பட்டது. 'வெதாத்மநா தஹாவ்ருக்ஷ: வ்யணவொவிக்ரு திம்ஹத:" அப்போது பிரணவமானது வேதரூபமாக விகாரத்தை யடைந்தது" என்று வாயுசம்ஹிதை எடுத்திசைத்தது.

மேற்றிசையிலுள்ள வித்துவான்களிற் பலர் ஆதியில் மாந்தர் களுக்கு எழுத்துக்கள் கிடையாவென்றும், அன்னோர்களாதிகாலத் தில் சிற்சில அடையாளங்களைக்கொண்டே அறிந்தார்களென்றும், வித்தியாசங்களைத் தெரிவிக்கும்பொருட்டு சில உருவங்களைக்கொண் டார்களென்றும் (Pictorial writings,) அதன்பிறகே அதினின்று சிற் சில எழுத்துக்களைக்கொண்டார்களென்றுங் கூறுவர். பூர்வத்தில் ஈஜிப்துதேசத்தில் (Hieroglyphics) என்ற சிற்சில உருவத்தோன் றல்களே எழுத்துக்களாக உபயோகபபட்டு வந்தனவென்றும் கூறு வதுண்டு. பூர்வீக கிரேக்கர் முதலினோர் அவர்களிடமிருந்தே எழுத் துகளைக் கற்றுக்கொண்டனர் என்று அவர்களிற் பலருரைப்பர். இவ் விஷயத்தில் வைதிகசாஸ்திரங்களின் கொள்கை யெவ்வாறேவெனின், கூறுதும். சிவதத்துவத்தில் பிந்துநாதங்களின் சேர்க்கையாலே சிற் சில தேஜோரூபங்கள் தோன்றினவென்றும் அத்தேஜோரூபங்களே பலமாறுதல்களையடைந்து அகாராதியக்ஷரங்களாயினவென்றுந் திவ்வி யாகமங்கள் முழங்கும். ஸ்ரீ பௌஷ்கரத்தில் "ஶிவெஹாகேஷாஹிதெதா பிந்துவஸ்துஶக்திரூம்பிகா। ஶஶாங்கஶகலாகாரா ஶக்த்யஹேது தத்த: । வாமாஜ்யேஷ்டாதயாரௌத்ரீ ஸ்வத்தநாமெஹத்ரஸஞ்ஜிகா । வாமாவெஷ்டம்பவஜ்ஜ்யேஷ்டாரௌத்ரீ ஶ்ருங்காரவெகஷ்டிதா । ஸாமாயா வாரூபெண ஜயாத்ருஷ்ட்வசீகீர்த்தா: । ஜயாவவிஜயாவெவ அஜிதாவாபராஜிதா । நிவ்ருத்திஶ்வ ப்ரதிஷ்டாவ வித்யாஶாந்திஸ்த தைவச। இந்திகாதீபிகாவெவரோவிகாமோவிகாபரா। வ்யாமா ரூபாவ்யநந்தாவ அநாயாநாஶ்ருதாதயா। ஶூக்ஷ்மாவ்யாவத்திஷும் ஸ்வம் ஶிவாத்யவநீமெராபர। தாஸ்யஸ்வெஷஸமேஜவணா ஸிந்த ஶதவர்ணாவிம்ஶதி: । ஶிரஸ்யாஸாம்ஸ்திதாரௌத்ரீ வக்த்ராமா

ப்ரகீர்த்திதா । அம்பிகா வாமஸம்ருத்தா ஜ்யேஷ்டா ரௌத்ரீ ச ஸம்ஸ்திதா । அகார இவ விக்யாத: ஆகாரம் ச்ருணு தத்வஜா: ॥" அவேச்சையினால் பிந்துவானது அசைவுற்றபோது பிறைச்சந்திரன்போன்ற வடிவுடைய அம்பிகாசக்தியானது தோன்றிற்று. அதனிடமிருந்து வாமை, ஜேஷ்டை, ரௌத்ரி எனப்பட்ட மூன்று சக்திகள் தோன்றின. வாமையானது உறங்கும் ஸர்ப்பம்போன்றது. தண்டம் (வளைதடி) போன்றது ஜேஷ்டை. ரௌத்திரிகொம்புபோன்றது. இந்த மாயையே ஜயை, விஜயை, அஜிதா, அபராஜிதா, நிவிருத்தி, பிரதிஷ்டை, சாந்தி, இந்திகா, தீபிகா, ரோசிகை, மோசிகை, வியோமரூபா, அநந்தா, அநாதாசிருதை முதலிய பாகுபாடுகளைக் கொண்டு விளங்கும். இச்சக்திகளால் சிவதத்வமுதல் பிருதிவிதத்வம் வரை வியாபிக்கப்பட்டுள்ளது. இச்சக்திகளிலிருந்தே 50 எழுத்துக்களும் தோன்றின.—இச்சக்திகளின் றலையில் ரௌத்ரியும், வாமை முகமாகவும், அம்பிகை பாகுவாகவும், ஜ்யேஷ்டை நீண்ட உடலாகவும் உள்ளது. இஃது அகாரம் (அ). இனி "ஆ"காரத்தைக்கேட்க." என்றது. இதனால் எழுத்துக்கள் சிற்சில அடையாளங்களையுடைய சக்தியுருவத்தினின்று பேதபேதவந்தவென்பது வைதிக மதக்கொள்கை.

" வைகர்யா ஸம்ஸ்திதா வர்ணா: க்ருதகாஸ்சேதநாயுதா: । வர்ணாச்ச ஸ்வரஸம்யோகாத் பதம் சைவ வர்ணாக்ருதிஷ்யதே । தஸ்மாத் ஊர்த்வ: ப்ரகீர்த்திஸ்யாத் வாக்யார்த்த நிச்சயம் ததா । ஸர்வஜ்ஞா மாத்ருகா ஜ்ஞேயா ஜகன்மாத்ருவ்யவஸ்திதா । யதா ஸர்வகதா தேவீ சிவசக்தி: ப்ரகீர்த்தித: । ஸமஸ்தவ்யாபகோ தேவ: காலாதீதோ வ்யவஸ்திதா । பஞ்சாசத்வர்ணரூபேண ஸ்வேச்சயா ஸ்வேச்சயா விநாயக: । ப்ராம்ஹ்யாத்யா: சக்தயோ மந்த்ர ஸர்வஸர்வஸம்ஸ்தித: । ஸம்ஸ்காரவேதநா விஜ்ஞேயா: ஸர்வாநுக்ரஹகாரிண: । ஜ்ஞானசக்தி: ஸ்வயம் ஜ்ஞேயா மாத்ருகா லோகமாத்ருகா । தஸ்மாத் ஸஞ்ஜாயதே ஸர்வம் வாங்மயம் ஸசராசரம் । உபாதானம் ததா தாம் ச ப்ரோக்தா ஸ்ரீதேவ வைகரீ நித: । தந்த்ராணி காமிகாதீனி தத: ஸாம்யா வ்யவஸ்திதாநி ச ॥'

வர்ணங்கள் செயற்கையாய் அசேதனமாயுள்ளன வர்ணங்கள ஸ்வரத்துடன்கூடிப் பதமாகவும், பதங்கள்கூடி வாக்கியமாயும், இதனால் அர்த்தநிஸ்சயமும், இதனால் "பாஷை" (விவகாரத்திற்குரிய) யும் ண்டாயிற்று. இவ்வாறு ஜகத்துக்குத் தாய்போன்றதால் எழுத்துக்

கள் மாதிருகையாயிற்று. இவை சிவசக்திபேதங்களாக வகுக்கப் பட்டுள்ளன. "அகாராதிகளில் சிவனும், "க்" ஆதிகளில் தேவியும் இருக்கின்றார்கள். அகாராதிகள் எண்வகையாக ஈசசொரூபமாய் விளங்கும் "க்" ஆதிகள் 49 விதமாக விரிந்து பிராம்மியாதிகளால் அதிஷ்டிக்கப்பட்டுள்ளன. முந்தினவைகளா (ஸ்வரங்கள்) ஈச்வரரூபங்களாகவும் பிந்தினவைகள் (வடிவங்கள்) ஞானசக்தி எனப் பெயர்கொண்டு வாக்குமயமாகிய சராசரப்பிரபஞ்சங்களைப்பெற்றது. இவைகளை யுபாதானமாகக்கொண்டு தேவன் (ஸ்ரீகண்டநாதன்) காமிகாதி திவ்வியாகமங்களைச் சொல்லியருளினார் எனப் பெறப்பட்டது.

இவ்வாறு பரநாதமே பரவிந்துவை க்ஷோபித்து அபரநாத அபரவிந்துவாகி வீணைகானமுங்கூட வெகு துச்சமாகத்தோன்றுமாறு இனிய ஸூக்ஷ்மகான விசேஷமாய்த் தோன்றிக்கொண்டிருக்க இதற்குத் தகுந்தவாறே அபரவிந்துவில் எவ்வகை யழகு மிதற்கு நிகராமோவெனச் சொல்லத்தகுந்த வனப்புடன்கூடிய தேஜோரூபங்களான "வர்ணங்கள்" பிரளயாகலர்களின் அறிவில் மின்னல்களின் விஜிரும்பணம்போலத் தோன்றி எல்லா வுண்மைகளையுந் தோன்றுமாறுதவும். இத்தகைய தேஜோரூபங்களிலிருந்து எழுத்துக்களுண்டாயினவென்று வேதாகமங்களின் கருத்தாகும். இவைகள் "அறிவின் வியஞ்சகங்கள்" என்பதைச் சிவாலயத்தில் தேவியினது ஸந்நிதியில் வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்திரியாதி சக்திகள் ஸர்வாலங்காரங்களைக்கொண்ட ஸ்திரீரூபங்களாக வமைக்கப்பட்டு விளங்க அவ்வுருவங்களின் கைகளில் வைக்கப்பட்டிருக்கிற திருவிளக்குகளே குறிக்கும். அனைத்திற்கும் பொதுவாய் "மாதிருகா விக்கிரகமொன்றமைக்கப்பட்ட காலத்தும் அதன் கையிலொரு பெரிய தீபமொன்று வைக்கப்பட்டு அதன் சிர முதலியவங்கங்களில் வாமையாதிகளின் சொரூபங்களாகிய சர்ப்பரூபம், தண்டரூபம், சக்கிரரூபங்கள் முதலியவைகள் சித்திரிக்கப்பட்டு விளங்கும். அல்லது திரிசூலம், சர்ப்பம், சக்கிரரூபம் முதலிய விளக்குகள், தேவியின் முன்புறம், பின்புறம், பக்கங்களில் ஸரமாகவும், தனியாகவு மமைக்கப்பட்டு விளங்கும். இவைகளனைத்தும் "அறிவின் வியஞ்சங்கள்" என்பது தோன்றவே "தீபங்களாக" அமைக்கப்பட்டு விளங்குகின்றன.

"அஷ்டௌ ப்ரதீபா நிஹிதா: வ்யாபகம் தஸ்ய மத்யத: ।
தேஷாம் வாமாதிகா: ஶக்த்யா: ஸம்ஜ்ஞாஸ் ஸர்வஶக்தய: ॥" "எண்வகை தீபங்களைச்சுற்றிலும் மத்தியிலொன்றுமாக விளக்குகளை யமைத்து

அவைகளில் வாமையாதி ரூபசக்திகளைத் தியானிக்க" என்ற வாக்கியங்களு மிவ் வுண்மையை நிறுத்தும். இக்காரணத்தாற்போலும் கோயில்களிற் சிவ கைங்கர்யம்செய்யும் தாஸிகள் (Originally Nuns) எனும் ஸ்திரீகள் கும்பாதிதீபங்களை யேந்துகிறார்போலும். இதனால் சிற்சில அடையாளங்களைக்குறிக்கு முருவங்களைப் பிரதானமாகக் கொண்டே "எழுத்துக்கள் தோன்றின" வென்று ஐரோப்பிய பண்டிதர்கள் கூறுவதுபோலவே நம் சமய சாஸ்திரங்களுங் கூறிய துண்மையே. மகோததிபோன்ற ஆகமங்களும் மந்திரசாஸ்திரங்களு மிவ்வுண்மைகளை யுத்கோஷிக்கின்றபடி, பல ரகஸ்யானுபவ நிலைகளுக்குரிய சூக்ஷ்மபுவனங்களிலுறைபு மான்மகோடிகளுக்குச் சிவஞானத்தை வியஞ்சகஞ் செய்யும் "தேஜோரூபங்கள்" எழுத்துக்களாயினவேயன்றி சாதாரண கொக்கு கோழி முதலிய உருவங்களன்று என்பதை யுணர்வாராக.

வர்ணங்கள் என எழுத்துக்கள் வெளிப்பட்டதையுங் கவனிக்க. 'வர்ண' எனும் பதமானது "சுக்லவர்ணம், கிருஷ்ணவர்ணம்" என நிறங்கள் விஷயத்திலும், "பிராம்மணவர்ணம், சாதுர்வர்ணம்" என்பனவாதிகளில் வகுப்புகளின் விஷயத்திலும் அவனைப்பற்றி வர்ணித்தான், என்பனவாதிகளில் குணம் அழகு முதலிய விடங்களில் "சொற்கள்" விஷயத்திலும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றமை உலகானுபவம். இதற்குக் காரணம் யாது? எழுத்துக்களுக்கும் குணம், அழகு, நிறம், வகுப்பு முதலியவைகளுக்கும் யாது சம்பந்தம்? "வர்ண" எனும் தாதுவினடியாகப் பிறந்த சொல்லாகிய வர்ணமென்பதற்கு அநேகார்த்தம் உண்டோ? இஃது அநேகார்த்தத்தைத் தரும் பதமென வையாகரணிகள் எடுத்தாண்டதில்லை. ஆகவே இப்படிப் பல விஷயங்களிற் பிரயோகிப்பதற்கு இப்பலவிஷயங்களுக்கும் ஓர் சம்பந்தம் இருந்தாலன்றி பிரயோகிக்க இடமில்லை. அச்சம்பந்தம் யாது? கூறுதும். வர்ண என்பது குண விஷயத்திற் பிரயோகிக்கப்படலே யதன் பொருள். குணத்திற்கும் அழகிற்கும் பொருத்தமுண்டு. அழகிற்கும் நிறங்களுக்கும பொருத்தமுண்டு. நிறங்களுக்கும் உருவங்கட்கும் பொருத்தமுண்டு. உருவங்கட்கும் எழுத்துக்களுக்கும் பொருத்தமுண்டென்றோம். நிற (Color) பேதத்தால் வகுப்புகளின் (Caste) பேதமும் பெறப்பட்டது. இதனால் "திவ்விய தேஜோரூபங்களுக்கும் நிறங்களுக்கும்" சம்பந்தமுண்டானது ஸகஜம். ஆனதுபற்றியே "அதர்வசிகையாதி உபநிஷதங்களில் "பிரணவத்தை யுற்றுக் கூறுங்கால் "அதற்கு ஸர்வ

வர்ணத்தையும் ஒப்பியதென்க.—பிரம்ம, விஷ்ணு, ருத்திரர்களைக் கடந்த சிதாகாச துரிய சிவத்தையுற்றுக் கூறுங்கால் "ஸர்வவர்ண" என்று எல்லா நிறங்களையும் அதற்கு எடுத்திசைத்தது. திரிமூர்த்தி களில் ஒருவராகிய விஷ்ணுமூர்த்தியை விளக்கவந்த பாஞ்சராத்திர மும் அவனது வியூகங்களாகிய அநிருத்த, பிரத்தியும்ந, ஸங்கர்ஷண திகளைக் கடந்த வாசுதேவரூபத்தைக் கூறும்போது பலவர்ணங்களை எடுத்திசைத்தது. எனவே நிறத்திற்கும், ரூபத்திற்கும், ஸம்பந்த மிருத்தலினாலும் அத்தகைய ரூபங்களே எழுத்திற்கும் காரணமா தலினாலும், வர்ணம் எனும்பதம் நிறத்திற்கும் எழுத்துக்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டது. பெரும்பான்மையில் ரூபவிசேஷத் தில் குணவிசேஷமுண்டு. ஸுரூபத்திற்கும், ஸுகுணத்திற்கும், குரூபத்திற்கும், துர்குணத்திற்கும் ஸம்பந்தப்படுத்துவது வழக்கம். இஃது ஸ்காந்தத்தில் சுப்பிரமணியர் சூரனாதிகள் விஷயத்திலும், இராமாயணத்தில் இராமனாதிகளிடத்தும் அரக்கர் விஷயத்திலும் எடுத்துக் காட்டப்பட்டது. ஸுரூபிகளான தேவர் மனுஷ்யர்களை நற்குணவான்களாகவும், குரூபிகளான அரக்கர்களைத் துஷ்டர்களாக் கவும் கதாசிரியர்கள் வரைந்தனர். இஃது பெரும்பான்மையிலும் உலகானுபவத்திற்கு ஒத்துமிருக்கின்றது. ஆகவே அழகு, நிறம், உருவம் குணம் என்பவைகளுக்குச் சம்பந்தமுண்டு. ஸ்ரீகாமிகத் தில் "ஒவ்வொரு நிறத்திற்கும் ஞானார்த்தமுண்டென்றும், அந் நிறங்களைக்கொண்ட உருவங்கட்கும் ஈச்வரகுணங்கட்கும் ஸம்பந்த முண்டென்றும் வியக்தமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. இப்படிப் பட்ட குணவிசிஷ்ட தேஜோரூபங்களே நமது எழுத்துக்களுக்கு மூலகாரணம்.

அறிவிற்குறைந்த மாந்தர்களன்றோ ரூபங்கொண்டறிய வேண் டும்? எம்மினுமுயர்ந்த பிரளயாகலர்க்கு ஏற்றுக்கோ இவைகள் எனின் அற்றன்று; எமக்குப படர்க்கையான உருவங்கொண்டு முன் னிலையினின்ற ஆசான் உணர்த்துவது போன்றல்ல. பின்னர் யாதெ னின், நமக்குக் கேட்டகாலையில் விளங்குவதைவிட கண்டகாலையில் அதிகமாய் விளங்குவதுபோலவே பிரானது உண்மைகள் அவர்க ளது ஆன்மாக்களில் என்றைக்கும் கண்டவாறே பிரகாசித்து விளக் கும் உருவங்கள் குணரூபங்களாகையால் ஈசனது தன்மைகள் அவர்க ளறிவின்கண் செவ்வனே அறியக் கிடக்கின்றனவென்பதே இதன் உண்மைப்பொருள். அதாவது "ஸாக்ஷாத்காரம்" எய்தப்பெற்ற வர்களே அவர்கள். ஸாக்ஷாத்காரமென்புழி கண்முன் வரச்செய்

தல் என்ற பொருளையல்லவோபயக்கும். பிரும்மஸாக்ஷாத்காரம் என்புழி பிரும்மதர்சனத்தை உள்ளதுள்ளவாறாக கைவரப்பெறல் என்பது பொருள்படும். பிரளயாகலர்களினுடைய ஆன்ம அறிவின்கண் பிரகாசியாநின்ற பேருண்மைகளை விளக்கும் பெரிய வுருவங்களின் மாறுதல்களே நமது எழுத்துக்களுக்கு மூலகாரணம் * முதல்வ

---

* Pictures degenerated, into dashes—as the Evolutionist Henry Drummond would say of the Chinese writing Nay of all ideograph. If man is to rise from low to high, as the Evolutionist puts it, under the aegis of God, then correspondingly Divine knowledge must descend from high to low.

" The Evolution of writing " says Professor Drummond " went through the same general stages as the evolution of speech First there was the onomotopœtic writing—as it were, the growl writing the ideograph, the imitation of an actual object " etc Ascending from this growl writing to the invention of telephone, he asks. " Is this the end ? It is by no means likely. The mind is feeling about already for more perfect form of human intercourse than the telegraphed or telephoned words.

Telepathy has already become a word , not a word for thought reading or mustle reading, but a scientific word. It means " the ability of one mind to inpress, or to be impressed by another mind otherwise than through the recognised channels of sense." "From the growl of a lion we have passed to the whisper of a soul ; from the motive fear, to the motive sympathy from the icy physical barrier of space to a nearness closer than breathing from the torturing slowness of time to times obliteration. If Evolution reveals anything, if Science itself proves anything, it is that Man is a Spiritual Being and that the direction of his long career is towards an ever larger, richer and more exalted life. " In the chapter on Involution in the same volume he puts thus " Instead of abolishing a creative hand, evolution demands it " and quotes with approval Balfour Stewort and Tait, thus "Consider the position into which Science has brought on. We are led by Scientific logic to an Unseen and by Scientific analogy to the Spirituality of this unseen. Infine our conclusion is that the visible universe has been developed by an Intelligence resident in the universe."

If it is thus granted that man evolves from low to high and that there is a Divine Intelligence lending its helping hand through all stages to uplift man and that through the medium of matter, then we must, proceeding on strictly logical lines, grant that corresponding to the Evolution of soul from low to high, there must be an Involution from high to low, *i. e.* from God to Man—a gradual decent of course. Saiva Siddhanta clearly tells us that there is such an Involution. If **Kshityadi Kutilaprantha**, from Earth to

னொருவனுளன் என்றும் முன்னுக்கு வரும் வழியுண்டென்றும் முனியாதுரைக்கும் மதத்தில் முதல்வனிடமின்றி வேறெதனிட மிருந்து எதையும் எதிர்பார்க்கும்?

இவ்வுலகத்திற் பல பாஷைகளிருக்கின்றனவே. எதற்குரிய எழுத்துக்க ளெவ்வாறு தோன்றினவெனின், ஒருவித சாஸ்திரநெறி யிலும்நிற்காது, ஒருவித ஸூக்குமதத்துவங்களையும் மூலமாகக் கொள்ளாது குரங்கின் கிலுகிலா சப்தம்போன்றும், ஆடுகளின் மேமே சப்தம்போன்றும் பாஷை யமைத்துக்கொண்டவர்களுடைய பாஷைக்குரிய எழுத்துக்களி லிவ்வுண்மை காணமுடியாது. "ஏ, பீ, அலிப், பே" முதலிய எழுத்துக்களில் ஒரு எழுத்துக்கும் மற்றொரு எழுத்துக்கும் யாது சம்பந்தம்? உயிர் எழுத்து மெய்யெழுத்து ஜீவாக்ஷரம், தேகாக்ஷரம் என்று திவ்வியாகமங்களிற் பெறப்பட்டது போல இந்தப் பாஷைகளில் உயிர் எழுத்துக்கள் ஒரு தொகுப்பாக வும் மெய்யெழுத்துக்கள் ஒரு தொகுப்பாகவும், உயிர்மெய்கள் ஒரு தொகுப்பாகவுமமைந்ததுண்டோ. "அம்முறையே எழுத்துக்க ளும் மோசையும் பிறக்கு"மென்று கூறிய நியாயநெறிப்படித்தான் மேற்கண்ட எழுத்துக்களின் உற்பத்திக்கிரமமமைந்ததோ? "குரங்கி லிருந்தும் மாந்தர் பிறந்தனர்" என்று கூறுவதுபோலவே குரங்கி னுடைய கிலுகிலா சப்தம்போன்றல்லவோ அவர்களுடைய பாஷையு மமைந்துகிடக்கின்றது. தெய்வமொன்றுண்டென்னும் பெருஞ்சிந்தை

---

Kutila, is an expression pointing out Evolution, there is a similar expression "**Sivatatvadi Bhoomyantham**"; from Sivathathva to Earth, pointing out the Involution. Yes, the Divyagamas expressly state that there is Arohana as well as Avarohana, that just as the Parasakthi of the Lord gradually assumes the Adi, Icha, Gnana Kriya forms to lend its helping hand to the inert soul, the Anava-bound Atman, implicitly through matter and explicitly through the highly evolved souls, Kriya Sakthi takes the soul to the highest Parasakthi. It is this that is represented by the egress of the idols through the five portals of the temple during utsavas. He that has eyes to see, let him see and this vision of the souls' progress helped on by the Divine Grace, constitutes real Darsana. Yes, if man has learned language and writing from the growl (Sound) and from objects (Sight) it does not disprove the existence of a language from God and of writing from the Devine forms through Nada (Sabda) and Bindu (Artha). He who has given eyes to see and ears to hear might have given language and forms capable of making Him known to the soul, since the mind is capable of thinking on Him.

கொண்டயாம் தெய்வசம்பந்தத்தை விடேமாகையால் எமது பாஷை யுந் தெய்வ சொரூபத்தைக்கொண்டதென்போம். ஆகையால் தெய்வ பாஷை, தெய்வ எழுத்துக்கள் என்பன ஆத்மா ஞத்ம விவேசனமா கப்பொருந்திய தெய்வபாஷைக்கே யுரியன. தேகவிலக்ஷணமாக ஆத்மாவும், இவ்வாத்மாவிற்குத் தாரகமாகிய முதல்வனும் உண்டெ னும் ஆஸ்திகவழிக் காதாரமுள்ள வரையாம் பாஷை முதலிய எவற் றையும் அன்பிற்கும் அருளுக்கு முறைவிடமாகிய அண்ணலிட மிருந்தே பிறக்கச்செய்வேம.

உண்மையில் "வித்தை" என்பது ஸர்வலோக மாதாவாகக் கருதப்பட்டு ஆணவவிருட்டைத்துறத்தவல்ல சிற்சத்தியாகிய சிவ வொளியே "[illegible]" என் றும "[illegible]" என்றும ஸ்ரீ காளிதாஸர் வியந்தார். வேதத்தின் ரகஸி யத்தை யுணர்ந்தார்கள். 'வித்தை' என்று கொண்டாடுவது "சங்கர னது திவ்வியரூபத்தில் பச்சைத்துளிர்விட்ட தேவியே என்று கூறப்பட்டுளது. இஃதவர்கொண்டது மாத்திரமன்று திவ்வியாகமத் தில் "[illegible]"–பரமசக் தியே பரஸம்வித்ஸ்வரூபிணி. இத்துடன் கூடியபவனே அவன் என்று கூறப்பட்டுளது. இச்சிற்சக்தி மாதாவாகவே, இச்சிற் சக்தியினது இயற்றலாலுண்டாகிய வியோமசப்த அக்ஷரங்களும் ஆன்ம அறிவிற்கு வியஞ்சகமாதலால் அவைகளுக்கு "க" எனும் பிரத்தியயம்சேர்ந்து "மாதிருகா" (தாய்போன்றது) எனப்பெயர்கொண்டனவென்க.

இதுகாறும் யாங்கூறியவாற்றல் "பரஸம்வித்சொரூபிணியும் பரபோதாநந்தரூபிணியும்" ஆகிய பரசிவசித்சக்தியே "வித்தை" எனவும், அவ்வருட்சத்தியினது காருண்யத்தால் ஆன்மாவானது பரதேஜஸில் பரதேஜஸாக மறைந்து, சிவத்திற் சிவமாய் நின்று, தான்வேறு அதுவேறின்றித்தானே அதுவாய் அதுவே தானாய் இரண்டற்று அனுபவிக்கும்போது நிகழும் ஞானநுபவமே ஆகம மாகும். ஞானம் என்பது விளக்கமாயின் ஆண்டு நிகழும் விளக்கத் தைத் தவிற வேறெதை விளக்கமென்பாம். ஆகவே பரஸம்வித் சொரூபிணியாகிய பரசிவ சித்சக்தி முத்தனுக்குள்ளிருந்து விளக்கும் விளக்கத்திற்கே முக்கிய விருத்தியால் உபதேசம் அல்லது ஆகமம்

என்று பெயர். இதுவே உண்மையிலும் உண்மை. ஏனைய வாக்கிய ரூபம், அல்லது பொருளுருவாதிகளால் விஞ்ஞான கேவலாதி உயிர் வர்க்கங்களுக்கு ஏற்படும் விளக்கத்திற்குக் கௌணவிருத்தியினுலேயே ஆகமமென்று பெயர் கூறலாமன்றி முக்கிய விருத்தியாலன்று. ஆனதுபற்றியே வாக்கியரூபமான திவ்வியாகமங்கட்கு "ஞானஸம்ஹிதைகள்" என்றும் "பிரபோதத்தின்பொருட்டு அருளப்பட்டன வென்றும் உண்மையி லுணர்த்தப்பட்டது. ஸ்ரீ வாயுஸம்ஹிதையில் இக்காரணம்பற்றியே "ப்ராரோஜ்யாஸாய்ஃ ஸ்வொ ஜ்ஞாநஸம் ஹிதாஃ । ப்ரவாஹரூபாத்ஸஃ காரணத்வந் ஸ்ரிதாயெ ॥" என்றும் "ஶிவெநஜ்ஞாநஶோதாஹாம ஜ்ஞாநஸம்ஹிதயா ஸஹ" என்றும் வெளியாயிற்று. அன்றியும் ஸ்ரீ காமிகாதிகளில் அத்தகைய ஞான விளக்கத்தை விரிக்கும் காரணத்தினுலேயே "ரஹஸ்யாத் ரஹஸ்யதரம்"—"ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதரம்" "தத்த்வாச்ச தத்த்வதரம்" என்று ரகஸியத்தில் ரகஸியமென்றும் உண்மையில் உண்மையென்றும அடிக்கடி அடிக்கடி எடுத்து எடுத்து உத்கோஷிக் கப்படுகின்றது. "ஏகமேவஶிவஜ்ஞாநம் விஹிதஂபரமாத்மநஃ" என்று ஒன்றுகிய சிவஞானமே பிரணவாதிபதின்மருக்குப் பதின்முறையாக விளக்கப்பட்டதென்று காமிகததில் கண்டாம். மேலும் அவைகளே "ப்ரணவாதிசிவைஷ்ட ஶிவாத்ஸ்ரவதாரகைஃ। ஷட்ஷஷ்டிபிஃ க்ரமேணைவ கதிதந்து ஶிவாஜ்ஞயா"—சிவனுணைப்படி பத்தும் பதினெட்டுமாக சிவ, ருத்திரர்களெனப்பட்ட அறுபத்தறுவர்களால் வெளிப்பட்டன என்று பெறப்பட்டது. "ஏதாநீந்த்ராதயஃஶ்ருத்வா தேவாஶ்சர்ஷிபிஸ்ஸஹ। ஸங்க்ஷேபதோ஽கதிதம் ஸர்வேஷாம்ந்துகம்பயா"— இவைகளைக்கேட்டே தேவர்களும் ருஷிகளும் எல்லோரிடத்திலுங்கொண்ட இரக்கத்தினுல் சுருக்கமாகக் கூறினர்கள் என்று விளக்கப்பட்டது.

நம்பரதகண்டத்தில் நம்மவர்கள் பிரமாணமாக எடுத்தாள்வது வேதம் எனப்படும். வேதம் என்பது யாது? அது ருக், யஜுஸ், ஸாம, அதர்வணுதிகள் என்று வெளிப்படுவது மாத்திரமா? இதைத் தவிற மற்றவைகள் வேதமாகாதோ? அதற்குப்பிரமாணம் இன்ருே? ஆ! உயர்ந்த ஞானத்திற்கு "வேதம்" என அமர்ந்ததைக்கேட்கும் போதே அளவில்லா வாநந்தமுண்டாகிறது. ஆன்மசொரூபம், பர

மான்மசொரூபம் முதலியவைகளை அறியாது மூச்சுக்காற்றேயான்மா வென்றும், தேகமே ஆன்மா ஆனதால் அது புதைக்கப்பட்டால் பின்னர் தீர்ப்புநாளில் அவைகளை எழுப்பி அந்தத்தேகங்களையே கடவுள் விசாரிப்பார் என்றும் கூறும் புன்மதங்களைப்போல நம்முடைய நூலுக்கு "புத்தகம்", என்னும் பொருள் தாவல்ல பெயர்கள் அமைந்ததோ வெனின், ஆ என்ன இனிமை! என்ன அழகு! அறிவு எனப்பொருள்படும் "வேதம்" எனும் சொல்லால் அமைந்தது பிரத்தியக்ஷம். இப்பெயரை யார் தந்தார், எங்குகாணப்படுவது எனின் இருக்கு வேதத்திலேயே அடிக்கடிப் பல்லாயிரம் இடங்களில் "வேதம் வேதம்" எனக்கேட்கின்றோம். இருக்காதிகளே வேதமாயின், இவ்வாறு வேதம் விதித்தது என்றும், இவ்வாறு வேதம் கூறிற்று என்றும் வெளிவருவதின் பொருள்யாது? "த்ரயீ" எனப்படும் ருக், யஜுஸ், ஸாமம் எனும் மூன்றே வேதங்களா? அல்லது "ചത്വാരോ വേദാഃ" என்றபடி ருக், யஜுஸ், ஸாமம், அதர்வண எனும் நான்குமாத்திரந்தான் வேதங்களா? அல்லது "വേദാ വൈ അനന്താഃ" வேதங்கள் பலபல என்றபடி. இவைகளைத் தவிர வேறு ஞானங்களும் வேதமாகுமா? அன்று; மூன்றாகிய இருக்கு, யஜுஸ், ஸாமாதிகளே முந்தியன; பின்னர் தான் அதர்வணம் உண்டாயிற்று என்று களிக்கலாமா? இதற்குப் பிரமாணமுண்டோ? ருக் வேதந்தான் ஆதி; பின்னர் தான் மற்றையவைகள் உண்டாயின என்று சில நவீன புத்திமான்கள் கூறுகின்றார்களல்லவா? அதைப்போலவே இதுவும் எண்ணத்தகுந்ததா? எனின் கூறுதும். இப்போது காணப்படும் இருக்காதிகளைக்கண்டு தானே அவ்வாறு அவர்கள் ஊகிக்கவேணும். நல்லது! ருக் வேத முதல் மந்திரத்திலேயே "അഗ്നിമീളേ പുരോഹിതം യജ്ഞസ്യ ദേവമൃത്വിജം ഹോതാരം രത്നധാതമം" என்ற மந்திரம் காணப்படவில்லையா? ஈண்டு, ஹோதா, புரோஹிதன், ருத்துவிக்குகள் முதலியவர் கேட்கப்படுகின்றனர். ஒரு யாகத்தில் பலருக்குப் பல தொழில்களுண்டு. இதில் ஒருவர்க்கிருந்த தொழில் மற்றவர்களுக்கில்லை. ஹோதா என்பட்டவன் ருக்வேதத்தைச் சார்ந்தவன். அத்வர்யு என்பவன் யஜுர் வேதத்தைச் சார்ந்தவன். உத்காதா என்பவன் ஸாமவேதத்தைச் சார்ந்தவன். பிரம்மா அல்லது புரோஹிதன் என்பவன் அதர்வணத்தைச் சார்ந்தவன். இவ்வாறு இருக்வேத முதல் மந்திரத்திலேயே நான்கு வேத பிரஸ்தாபமும் தொழில் வேறுபாடும் காணப்பட, என்ன யுக்தி

கொண்டு ருக்வேதம் முந்தியது. மற்றையவேதங்கள் பிந்தியன என்று கூறத்துணிந்தார்களோ அறிகிலேம்! அன்றியும் இருக்குவேதத்தில் "ஙயவ-ுணெ" என்றும் அதர்வணே என்றும் அதர்வவேத பிரஸ்தாபம் கேட்கப்படுகின்றதே. அதர்வணவேதம் பின்னர் உண்டானதெனில் அதற்குரியவனல்லவோ ஸோமயாகாதிகளில் பிரம்மா என்னப்பட்டான். "ராஜ்ஞாவ-ரொஹிதஃகாயெ-ஹவெஷிஷா-நஷ-ஶு-தஃ ॥" "ஸ்-ஷகவ ஸவ-யஜெஷ-கவீ-தாயவ-ுணொஷிஜஃ ॥" என்ற வாக்கியங்களால் எல்லா யக்ஞங்களிலும் ஆதர்வண த்விஜனல்லவோ "பிரம்மா" எனப்பட்டான். அவனல்லவோ "புரோஹிதன்" எனப்பட்டான். தேவர்களுக்குக் குருவான "பிருகஸ்பதியும்" அஸுரர்களுக்குக் குருவான "சுக்கிரனும்" அதர்வணத்தைச் சார்ந்தவரல்லரோ. அக்காரணம்பற்றியே "பிருக்வாங்கிரஸ்" வித்தை என்று ஆதர்வணம் வெளியாயிற்று. இவ்வதர்வண வேதத்தைச் சேர்ந்தவனே முக்கியவிருத்தியால் பிராம்மணனாயினன். இவனல்லவோ புரோஹிதன் ஆனான். இப்படிப்பட்ட முக்கியவேதம் இல்லையெனயார்கூற முந்துவார்கள்? மற்றைய வேதங்களைச்சார்ந்தவர்களுக்குப் "புரோஹித" த்தொழிற் கிடையாது. புரோஹிதனாவான் தன் பொருட்டு, அல்லது அல்பகார்யத்தின்பொருட்டு, அல்லது மிகவும் இழிந்தகாமியாதி கர்மத்தின்பொருட்டு பிரவர்த்திப்பவன் அல்லன். ராஜராஷ்டிரக்ஷேமத்திற்கும், தேச தேசியர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டும் பாடுபடும் பரமகுணவானே புரோஹிதன் ஆதலால் புரோஹிதன் என அவன் வெளிவருவானாயினன். மற்றைய வேதங்களிலிருந்தார்களுக்கு இப்படிப்பட்ட பெருங்காருண்ய வியாபாரத்திலதிகாரம்கிடையாது. அவர்களுக்குள்ளது யாதெனின் "வெதாநாம் கஃ-யவெவஶஹ கஃ-வயஷ-தஃ"- யக்ஞகாரியமும் கிருஹ்யகாரியமுந்தான். ஆனால் ஆதர்வணிக்கோவெனின் "ஶாந்திகம் வௌஷ்கம்வெவ-தயாஹி வாரணம்வயகஃ"-என்றபடி சாந்திகம், பௌஷ்டிகம், அபிசாரணம் என்றமூன்று கர்மங்களாகும். ராஜராஷ்டிரங்கள், தேச தேசியர்களைப்பீடிப்பதும் மகா மாரிபோன்ற பெருவியாதிகள், பெரும் விபத்துக்கள் முதலியவைகள் அணுகாமல் பாதுகாக்கும் கர்மம் சாந்திகமாகும். மீண்டும் அவர்கள் மென்மேலும் புஷ்டியை அடையச்செய்வது பௌஷ்டிகம். அரிஷ்டங்களைப் போக்குவது,

அபிசாரணம். இம்மூன்றும் லோகக்ஷேமத்தின் பொருட்டு ஏற்படு மவைகள். இஃதறியாதாரே அபிசாரமிருத்தலைக்கி அதர்வணத் தைத் தாழ்ந்ததாகக் கூறுவர். "ஹிம்ஸா ஸிம்ஹா ஹி நிர்திஷ்டாஶ்சாத்ர வைதாநிகேஷ்வபி । ந தாந் ஸமாஶ்ரயேத் ப்ராஜ்ஞ: க்ஷாத்ர யஜ்ஞவிரோதிந: । ப்ரஜா ப்ராஹ்மணா: ஸர்வே ராஜ்யஸ்ய ஸர்வே ராஜஹித ப்ராஹ்மணா: ப்ரஜா:" க்ஷாத்திரதர்ம விரோதியான யக்ஞாதிகள் பிராணி ஹிம்ஸையைக்கொண்டவைகள். (உண்மையில க்ஷத்திரம் என்பதற்கு க்ஷதம், அடி, திராணம், காபபாற்றல், ஹிமஸையிலிருந்து காப்பாற்றல் என்பது க்ஷத்திரதர்மமாகும்.) அதைப்புரோஹிதன் உப யோகிக்கப்படாது. ஜனங்களுடைய க்ஷேமம் புரோஹிதனிடமும், புரோஹிதக்ஷேமம் ஜனங்கள் க்ஷேமத்திலும் வைக்கப்பட்டிருக்கின் றன. அபிசாரம் என்பது இனைத்தெனத் தெரியாதாரே அபிசாரம் இழிந்ததென்பர். "ஶாந்திகம் பௌஷ்டிகஞ்சைவ அரிஷ்டாநாஞ்ச ஶாதநம்" என்பதில் பிளேக், மாரி, போன்ற அரிஷ்டநிவர்த்தி யல் லவோ அபிசாரம் எனப்பட்டது. ஹிம்ஸாகர்மம் என்பது ஆதர் வணிக்குரியது அன்று. ஆயின் சிலதுஷ்டர்கள் துஷ்டமாக அபிசா ரம் செய்வாராயின், அதனால் அதன் கருத்து அவ்வாறு தான் என்று கூறுவது பொருந்தாது. சுக்ராசாரியார் அசுரர்களுக்கு விபரீதமாகக் கூறின், அதற்கென்செய்யலாம்; பிருகஸ்பதிபகவானைப் பார்த்துக் கொள்ளக்கூடாதோ? அதர்வணததில் ஞான பிரவர்த்தகமேமுக்கிய மென்பதை உபநிஷதங்களில் பிரசினமுண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிரஸ், அதர்வ சிகையாதிகள் கேவலம் பிரணவத்தை யும் அதன்வாச்சியனுகிய பரமேச்வரனையும் பற்றிக்கூறுவதே சாக்ஷி யாகும். அன்றியும் ருக்வேதத்தைச்சார்ந்த ஆச்வாலாயனர், சுக்ல யஜுர்வேதத்தைச் சார்ந்த காத்தியாயனர், முதலினோர் அதர்வண வேதத்தைச் சார்ந்த பிப்பலாதரிடம் ஞானோபதேசம் பெற்றனர். ஞானபரம்பரையே பிரம்மாவினது ஜேஷ்டபுத்ரனாகிய அதர்வாவி னிடமிருந்து பெருகிற்று. வாஜஸநேயஉபநிஷத்தில் ததீசி, அதர்வா முதலினோரிடமிருந்து ஞானபரம்பரை வந்ததாகக் கூறப்பட்டிருக் கின்றது. இக்காரணத்தால் எவ்வகையாலும் அதர்வணம்புதிதெனக் கூறமுடியாது. ஆயின் திரயி என ருக், யஜுஸ், ஸாமம் வெளி வந்த தற்குக்காரணம் யாது? "ஆத்யவ்ருக்ஷோ ஹ்யதர்வா ஸ்கந்தஸ்த்ரயீ தஸ்ய ஶாகா:" ஆதர்வணம் அடிமரமும் ருக், யஜுஸ், ஸாமங்கள் அதன்பெருங் கிளைகளும் ஆகும். தூரத்திலிருப்பவர்களுக்குக் கிளை

களைகாணப்படும். அடிமரம் காணப்படமாட்டாது. அதுபோலவே திரயீ என்பது யக்ஞாதி வெளிக்கர்மங்களுக்கு உபயோகிக்கப்படும் ஆதர்வணம் ஆத்மவித்தைக்கு உபயோகப்படும் வருகின்றன. மேலும் பிரணவத்தில் அகாரத்தில் இருக்கும், உகாரத்தில் யஜுஸும், மகாரத்தில் ஸாமமும், அர்த்தமாத்திரையில் ஆதர்வணமும் என விதிக்கப்பட்டுள்ளது. "அகாரம் ஸர்வம் ருக்வேதஃ உகாரோ யஜுருச்யதே । மகாரஃ ஸாமவேதோஸ்ய ஶ்ருதிராயுர்வர்ணிஷ்யதா" என்றது, வாயு சம்மிதை மீண்டும் "ருக்வேதஃ ப்ரணவோ ஹ்யத்ர ஜாக்ரத்ரூபம் ப்ரயோச்யதே । யேநாஹமாத்மதத்வஸ்ய நித்யத்வஸ்யாபிதாயகஃ । யஜுர்வேதோ வதந் தத்வம் ஸ்வப்நாவஸ்தா ப்ரயோச்யதே । ஸோஹமாத்மாநமபிந்நா வித்யாவித்யாமயோ தயி । ஸாமவேத ஸுஷுப்தாவஸ்தைவம் ஸர்வம் ப்ரயோச்யதே । ப்ரயோஜநம் ஶிவேநேஷ்டம் தாதவேஸநாபியதே । அயவர்ணார்த்த துரீயாவஸ்தா துரீயாதீதம் ஏவ ச" என்ற வாக்கியங்களால் ருக், யஜுஸ், ஸாமம் என்பவைகளால் முறையே ஜாக்கிர, ஸ்வப்ந, ஸுஷுபதி எனும் அவஸ்தைகளும், ஆத்ம, வித்யா, சிவதத்துவங்களும் குறிக்கப்பட, அதர்வணத்தால் துரியம் துரியாதீதங்களும், தத்துவங்கடந்த பதமும் வெளியிடப்பட்டன. அன்றியும் உபநிஷத்தில் "தஸ்ய யஜுரேவ ஶிரஃ ருக் தக்ஷிணஃ பக்ஷஃ ஸாமோத்தரஃ பக்ஷஃ । அதர்வாங்கிரஸஃ புச்சம் ப்ரதிஷ்டா" கிருஷ்ண யஜுர்வேதிய தைத்திரியத்தில் அதர்வணமே மூன்று வேதங்களாகிய ருக், யஜுஸ், ஸாமங்களுக்குப் பிரதிஷ்டா ரூபமாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் மூன்று வேதங்கள் (Exoteric) பாஹ்ய ரூபமென்றும், அதர்வம் (Esoteric) ஆந்தர ரூபமென்றும் குப்தவித்தையென்றும் வெளியாகும். இதனால்வேதங்களுக்கு முன்பின் கூறுவதுமுடியாது. ஆகையால் நவீனபுத்திமான்கள் கூறுவதுபொருந்தாது. இனி வேதம் யாதெனின், கூறுதும். இப்போது காணப்படும்வேதங்கள் சிற்சில பிரயோகங்களை ஒட்டி அதற்கனுகுணமாகச் சேர்க்கப்பட்ட மந்திரங்களைக் கொண்டனவன்றி வேறல்ல. ஒரு கர்மத்தின் ஓர் பாகம் ஒரு வேதத்தின் ஒரு பாகத்தும், மற்றொரு பாகம் மற்றொரு வேதத்தின் வேறு பாகத்திலும் காணப்படும். ஆனால் சாக்ஷாத் அந்த அந்த கார்மத்தில் எல்லாம் ஒழுங்குபெற நடைபெறும். ஒரு கர்மத்தையோ, அல்லது ஒரு கொள்கையையோ பூர்த்தியாக ஓர் வேதத்திலிருந்தாவது.

க்காணமுடியாது. ஆனதுபற்றி இக்கொள்கை வேதத்தில் கிடையாது, ஆனதால் இது புதிதென்று சில தான் ரேன்றிகள் கூறுவது கூடாது. ஓ! விக்கிரகாராதனம் வேதத்திற்கிடையாது; ஜந்மாந்திரக் கொள்கை வேதத்திற்கிடையாது; பரப்பிரம விஷயம் வேதத்திற் கிடையாது; காணப்படுவது பலதெய்வ வணக்கம்; அக்நியில் வழிபாடுதான் கண்டோம் என்று சில புன்மக்கள் கூறுவது ஓர் எள்ளளவும் பொருந்தாது. வேதங்கள் ஜனங்கள் அநுஷ்டித்தேவந்த எல்லாக் கொள்கைகளையும், எல்லாக் கர்மங்களையும் எடுத்துக்கூறுவதாக ஸங்கல்பித்துக்கொண்டு வரவில்லை. பல கர்மங்களையும் பல கொள்கைகளுடன் ஜனங்கள் உண்மையில் பிரவர்த்தித்துவந்தகாலையில் சிற்சில கர்மங்களுக்குத் தக்கவாறு சில பிரயோகமந்திரங்களைச் சேர்த்துவைக்கப்பட்டவைகளே ருக்காதிகளேயன்றி அவைகளே எல்லாவற்றையும் கூற முந்தவில்லை. இவ்வேதங்களில் காணப்பட்ட கர்மங்களுக்குக்கூட முதல் மத்தியம், அக்ரமாதிகளைத்தெரிந்து காணமுடியாது. சில கர்மங்களின் மத்தியபாகம் மாத்திரந்தான் காணப்படும். சில கர்மங்களின் அந்தியபாகமே ஸூசிப்பிக்கப்படும். ஆரம்பபாகம் விடப்பட்டிருக்கும். அதனால் அநுஷ்டானமுறையில் எல்லாம் அநுஷ்டிக்கப்பட்டே வந்தனவன்றி விடப்பட்டு வந்தவைகளன்று. யஜுராதிகளில் முதல்வனுக்கு உமாஸகாயத்வம் முதலியவைகள் கேட்கப்படும். கோயில்கள் விக்கிரகாராதனம் முதலியவைகள் அதர்வணத்தில் இருப்பதாகச் சூசனையாகக்காண்கிறோம். "தேவதாயதநாநி கம்பந்தே தைவதப்ரதிமா ஹஸந்தி" இதனால் இவ்வேதங்களில் நடத்தப்பட்டு வந்தவைகளில் சிற்சிலவைகளும் காணப்படுவதேயன்றி எல்லாம் காணப்படவில்லை என்று காணப்படாததைப் புதிது என்று கூறமுடியாது. அநுஷ்டானமுறையில் பலவகைகள் தொன்றுதொட்டு வழிவழியாக அநுஷ்டிக்கப்பட்டேவந்தன. இனியுண்மையாதெனின், வேதங்களே பலவாறாகச்சிதறுண்டு கிடந்தன. புலர் பல காலங்களில் வேதங்களைச்சேர்த்ததுண்டு. அடிக்கடி அவைகள் சேர்க்கப்பட்டும், ஒழுங்கு படுத்தப்பட்டும் வந்தன. அவ்வாறு 28 பெயர்கள் பல விடங்களிலுமிருந்து பலவாறாய்க்கிடந்த வேதமந்திரங்களை ஒழுங்குபடுத்தினார்களென்று இலிங்க, கூர்ம, சைவாதி மஹா புராணங்களிற் செவ்வனே கூறப்பட்டுள்ளது. அவர்களை இக்காரணம்பற்றியே "வியாசர்கள்" எனக்கேட்டோம் "ஸம்க்ஷிப்ய வ்யஸ்ய வேதாநாம் ஸ்த்ரீணாம் க்ருதவாநுபிழ: | வ்யஸ்தவேதயாயோகே வேதவ்யாஸ

உதிரு-தா ॥" என்ற வாக்கியப்படி இப்போது காணப்படும் வேதங்கள் சிற்சில கர்ம, பிரம்மாநுஷ்டான ஸம்பந்தமான மந்திரங்களை ஒருவாறு தொகுத்து, கிருஷ்ணதுவைபாயன வியாசரால் சேர்க்கப்பட்டவைகள். ஆகவே ரிஷிகள் மந்திர கர்த்தாக்களும் மந்திர திருஷ்டாக்களுமாகக் கருதப் படுகின்றனர். இதன் விரிவைப் பின்னர் கூறுவாம். இபபோது சில பாகங்கள் (லியாகி) கிலங்கள் எனப்படும். இவைகள் இப்போதைய வேதங்களில் சேராதவைகள். அவைகளும் பிரமாணங்களே. அவைகள் வாஸ்தவத்தில் எந்த இடங்களில் சேர்க்கப்படவேண்டுமென்பதைத் தெரியாமல் பிரமாணங்களாகவே கொள்ளப்பட்டன வென்பது எம தபிப்பிராயம். இக்கிலங்களை சிராததாதி காலங்களில் அபிசிரவணம் செய்ய மனுவாதி ஸ்மிருதிகளில் விதியுண்டு. இதன்பொருள் யாதெனின் ஆரியஸமாஜத்தார் கொள்வதுபோல சில பாகந்தான் பிரமாணம் என்று கூறுவது அடாது. இவ்வேதங்களில் காணப்படுவதுதான் வைதிகமதமென்றும், இவ்வேதங்களில் காணப்படாது ஆரியர் அநுஷ்டித்து வரும் கோயில்வழிபாடு முதலியவைகளெல்லாம் புதிது என்றும் கூறுவது எவ்வளவும் பொருந்தாது. ஆகையால் "சாஸ்திரயோநித்வாத்" என்ற பிரமஸூத்திரத்தில் ஸ்ரீ கண்டயோகிகள் கூறுவதுபோல ருக், யஜுஸ், ஸாம, அதர்வண, புராண, இதிஹாஸங்கள் யாவுமே பிரமாணம். ஹிமசேது பரியந்தம் பிரதிகிராமங்களிலும் காணப்படும் சிவாலய, சிவாராதனாதிகள் யாவுமேவைதிகர்கள் கொள்கையாம். தர்மசாஸ்திரங்களிற்காணப்படாதவைகளைக் கிருஹ்ய நூற்களில் காணலாம். இவைகளில் காணப்படாதவைகளை "பழையன" என்று பொருள்படும் புராணங்களில் காணலாம். இவைகளிற் காணப்படுவனயாவுமே ஆரியர்களின் கொள்கைகளேயன்றி, எங்கிருந்தோ கைப்பற்றினர் யாரிடமிருந்தோ கற்றனரென்பது விழலர் வீண்சொல்லேயாகும். ஆதலால் "இதிஹாஸபுராணம் பஞ்சமம்" என்று சாந்தோக்கியாதிகளில் கூறப்பட்டது. தொன்று தொட்டு அநுஷ்டிக்கப்பட்டு வந்த பழையனவைகளும் வைதிகங்களுமே யன்றி வேறன்று. ஆகையால் வேதங்களை அறியவேண்டுமானால் இவைகளையும் அறிந்தாலன்றி அறியமுடியா தெனக்கொண்டு இவைகள் ஐந்தாம்வேதமென்றும் வேதோபபிரும்மணமென்றும் வெளிவந்தன. காலதேசத்தைப்பற்றிச் சில நழுவியும், சில சேர்க்கப்பட்டும் இருக்கலாம்.

அதை யாமாக்ஷேபிப்பதில்லை. ஆனால்பெரும்பான்மையிலும்காணப் படுமவைகளையும், கிருஹ்யஸூத்ரங்கள், கல்பஸூத்திரங்கள், தர்ம சாஸ்திரங்கள், புராணேதிகாசங்கள் முதலியவைகளிற் காணப்படும். தொன்றுதொட்டுப் பலபல்லாண்டுகளாக வநுஷ்டிக்கப்பட்டு வந்தவை கள் யாவுமே வேதசம்பந்தமேயன்றி வேறன்று. முடிவில் ஆரியர் களுக்கு அறிவின் விஷயங்கள்யாவும் வேதங்களே. அதனாலேயே தங்கள்தங்கள் பெரியஞானத்தை வேதமெனக் கூறினார்கள் என்பது தான் உணரத்தக்கது. இவ்வேதஞானத்தைப் பாரம்பரியமாகக் கேட்டு வந்ததால், கர்மவிஷயங்களுக்காகவுற்பட்ட சிற்சிலவைகளைத்தொகுத் துவைத்தார்கள். மற்ற விஷயங்களை ஆசாரிய சிஷ்யபரம்பரையாக அநுஷ்டித்து வந்தார்கள். அவ்விஷயங்களிற் சிற்சிலவைகளை ரக ஸியமெனக்கருதி வேறுநூற்களாகவும் திரட்டி வைத்தனர். எல்லாங் கூடி உயர்ந்த ஞானத்தை வேதமென்றும், பரமாப்தனிடமிருந்து வந்ததால் ஆகமம் என்றும், உயர்ந்த பக்குவத்தில் கேட்டதால் சுருதி என்றும், அவைகளை யநுஷ்டிக்க யோக்யமுடையதால் விதி நூலாக சாஸ்திரம் என்றும், அநுஷ்டிக்கவே சொல்லப்பட்டதால் " ஆம் நாயம் " என்றும் பரமனைப்போலவே அந்த ஞானம் என்று முண்மையாகி பரமனிடமிருந்து வெளிவந்ததால் நிகமம் என்றும் கூற ப்பட்டது. இதனால் காலதேச வர்த்தமானாதிகளாற் கட்டுண்ணாது என்று மோரியல்போடு நின்ற ஞானமாகவிருக்கும் பெரிய ஞானமே ஆகமமாகும். அந்த ஞானத்தைக்கொண்ட நூற்களும் ஆகமமாகும். பின்னர் கர்மாதிவிஷயங்களைப்பற்றித் தொகுத்துவைக்கப்பட்டவை களுக்குச் சுருதியென்று கூறப்பட்டகாலத்து ரகஸியமாய் உத்தம பரிபாகிக்கு ஆசாரியனால் உணர்த்தப்பட்டு வந்த பரமஞானமானது " எல்லா வித்தைகளின் ஸாரமானதுபற்றி " " சுருதி ஸாரம் " "வேதஸாரம்" என்று விளிக்கப்பட்டுவந்தது. இத்தகைய வேதஸார சுருதிஸாரங்களே சைவாகமங்கள். எவ்வாறு சிவாகமங்கள் வேத ஸாரங்கள்? எவ்வாறு சிவாகமங்கள் பரதர்மபிரவர்த்தகங்கள்? இதற்குப் பிரமாணம் என்னை? இதற்கு ஆந்தர (internal) பாஹ்ய (external) சாக்ஷியங்கள் (evidence) என்னை? இவ்வாறு வேறு நூற்களும் வைதிகங்கள் எனக் கூறப்படின் அவைகட்கு என்னகதி? என்பன வாதிவிஷயங்களை அடுத்த இரண்டாம் அத்தியாயத்தில் விசாரித்துப் பரிஷ்கரிப்பாம்.

ஸ்ரீ மெய்கண்ட தேவன்றிருவடிவாழ்க.